கல்கி

KALKI 27.4.2003 ரூ.6.00



உள்ளே..



“டிராவிட்கிட்டே கேளுங்க!”

17





ஜூலியாவின் சிபாரிசு!

8



“படைப்பாளர்களை அவமானப்படுத்துகிறது அரசு!”

20



பாட்டில் குஷ்பு இன்னமும் நிறைமாதக்காரிபோல்தான் தோற்றமளிக்கிறார் (பல மாதங்களுக்கு முன்பே ஷூட் பண்ணிவிட்டார்களா, அல்லது இரண்டாவது மகள் பிறந்தபின் மீண்டும் மேலும் எடை போட்டு விட்டாரா?). "நாட்டுக்கு நாடு மாறுபடுவது எது?" என்று கேட்டார். உணவு, மக்களின் நிறம், உடை என்றெல்லாம் பலவித விடைகள் வந்தன. ஆனாலும் சர்வ நிச்சயமாக மாறுபடும் ஒரு விஷயமான 'கொடி' என்பது, அவரது பட்டியலில் உள்ள ஆறு விஷயங்களில் ஒன்றாக இல்லாதது அக்கிரமம்!


மூன்றாவது வகை இல்லையா?

'மிஷன் இம்பாஸிபிள்', 'டாப்கன்' போன்ற படங்களில் நடித்து பெரும் புகழடைந்த டாம் க்ரூஸிடம் 'நீங்கள் நடிக்க வராவிட்டால் என்னவாகி இருப்பீர்கள்?" என்ற வழக்கமான கேள்வியைக் கேட்டால் கொஞ்சம்கூட எதிர்பாராத விடைதான் கிடைக்கும் "மத போதகராக ஆகியிருப்பேன்" என்பார் அவர். தன் மகன் அப்படி ஆக வேண்டும் என்று தான் அவர் அம்மா மிகவும் ஆசைப்பட்டு, அதற்கான பயிற்சிகளையும் அவருக்குக் கொடுக்கத் தொடங்கியிருந்தாராம். இந்தத் தகவலைக் கூறியவர் விஜய்யில் சினிமாவை 'விமர்ஜிக்கும்' மதன். அம்மாவின் ஆசை எப்படி திசை மாறியது? சக மாணவன் ஒருவனுடன் ஏற்பட்ட சண்டையில் டாம் க்ரூஸுக்கு எலும்பு முறிவு ஏற்பட, வீட்டிலேயே முடங்கிக் கிடக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. அப்போது தொலைக் காட்சியில் தோன்றிய நடிகர்களைப் பார்த்து அப்படியே இவர் காப்பி யடித்து நடிக்க, பார்த்தவர்கள் எல்லாம் பாராட்டத் தொடங்கினார்கள். அப்போதே நடிப்புதான் தன் தொழில் எனத் தீர் மானித்து விட்டார் டாம் க்ரூஸ்.

அருகம்புல்லை நல்லெண்ணெயில் வதக்கி, அந்த எண்ணெயைத் தினமும் இரண்டு சொட்டுகள் காதில் விட்டு வந்தால் செவிட்டுத்தன்மை நீங்கும் என்றார் பாட்டி வைத்தியத்தில் ரேவதி சங்கரன். (என்ன காதிலே போட்டுக்கிட்டீங்களா?) கூடவே 'ஏரிக்கரையின் மேலே, போறவளே பெண் மயிலே' பாடலில் இரண்டு வரிகளை அழகாக எடுத்து விட்டார். பிறகு 'நான் சொன்னபடி செஞ்சா, இப்படி எட்டுக் கட்டையிலே எடுத்துவிட்டாக் கூடத் தெளிவாக் கேட்கும்' என்றார். அதெப்படி, மெதுவாக முணுமுணுத்தால் கூட, காதில் விழ வேண்டும். அப்போதுதானே பாட்டி, வைத்தியத்துக்குப் பலனிருக்கிற தென்று அர்த்தம்?

பாபா வேண்டுமானால் பெட்டிக்குள் சுருண்டிருக்கலாம். ஆனால் ரஜினியின் காந்த சக்தி குறையவில்லை போலும்! அதனால்தான் தமிழ்ப் புத் தாண்டுக்கு சன் டி.வி.யிலும், அதற்கு முதல் நாள் பொதிகை யிலும் (அட) "பாட்ஷா" படத் தைத் திரையிட்டு மகிழ்ந்தார்கள்.

ஜெயா டி.வி.யின் ஜாக்



• டாம் க்ரூஸ்

மிகவும் ரசித்து, தியேட்டரில் இருமுறை சென்று பார்த்த படம் 'கன்னத்தில் முத்தமிட்டால்' என்றார் நடிகர் பாண்டியராஜன். அதற்கு

ஜேம்ஸ் வசந்தன் 'பலரும் இந்தப் படத்தை ரசித்ததாகச் சொல்கிறார்கள். ஆனால் ஏன் படம் அதிக நாட்கள் ஓடவில்லை?' என்று கேட்க, "படங்களிலே ரெண்டு வகை உண்டு. ஒண்ணு, நல்லா ஓடி சந்தோஷத்தைக் கொடுக்கும். இன்னொண்ணு நல்ல விமர்சனங்களாலே மனத்திருப்தியை கொடுக்கும். இந்தத் திருப்தி மணிரத்னத்திற்குக் கிடைத்திருக்கும்" என்றார்.

ஓடுவதால் சந்தோஷம், நல்ல விமர்சனங்களால் மனத்திருப்தி என்ற இரண்டும் சேர்ந்த மூன்றாவது வகை என்பது இல்லையா?

- சேனல்பாய்



* 'கன்னத்தில் முத்தமிட்டால்' படத்தில்

கல்கி

பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட்டிற்காக பரதன் அச்சகத்தில்
அச்சிட்டு வெளியிடுபவர் :
கி.ராஜேந்திரன்

கல்கி பில்டிங்க்ஸ்,
47-N.P., ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காடுதாங்கல், சென்னை - 97

ஆசிரியர் :
சீதா ரவி

ஆசிரியர் குழு :
செ. ஏக்நாத் ராஜ்
அனுராதா சேகர்
ஆர்.சி. ஜெயந்தன்

வடிவமைப்பு :
எஸ். ஸ்டீஃபன்
பி.ஆர். ராஜன்

தொலைபேசி :
22345622, 23, 24
தொலைநகல் :
044 - 22345621

மின்னஞ்சல் :
ஆசிரியர் குழு :
kalki@kalkiweekly.com
சந்தா பிரிவு :
subscription@kalkiweekly.com
பிற தகவல்களுக்கு :
info@kalkiweekly.com
கல்கி இன்டர்நெட் முகவரி :
www.kalkiweekly.com

சந்தா விவரம் :
உள்நாடு :
ஒரு வருடம் : ரூ.330/-
ஆறு மாதம் : ரூ.165/-
வெளிநாடு (விமானத்தபால்) :
ஒரு வருடம் : 62 யு.எஸ். டாலர்
இலங்கை : ரூ.2000/-

Bharathan Publications Private Limited,
Kalki Buildings,
47-NP, Jawaharlal Nehru Road,
Ekkaduthangal, Chennai - 600 097.

ஒவ்வொரு இதழும் உங்கள் மேன்மைக்கு

சட்டமன்றத்தில் எதிர்க்கட்சிகள் பொதுப் பிரச்னைகளை முழுமையாகப் பேச முடியாத நிலை, நள்ளிரவுக் கைதுகள், பத்திரிகையாளர் நக்கீரன் கோபால் மீது பாய்ந்திருக்கும் பொடா – இப்படித் தமிழகத்தில் ஜனநாயகத்தை மூச்சடைக்க வைக்கும் காரியங்கள் நிறையவே நடக்கின்றன. 'இம்' மென்றால் மான நஷ்ட வழக்கு; ஏன் என்றால் பொடா"– இது தான் இன்றைய நிலை. நம்மால் தகவல் சேகரிக்க முடிந்த அளவுக்கு எதிர்க்கட்சிகள் மற்றும் பத்திரிகைகள் மீது அரசு போட்ட வழக்குகளின் பட்டியல் இதோ. நீங்கள் படிக்கும்போது எண்ணிக்கை கூடுதலாகியிருக்கக் கூடும்!



இந்து:

'இந்து' பத்திரிகையின் ஒருபக்கத்தில் வெளியிடப்பட்டிருக்கும் செய்திகள் எந்தப் பிராந்தியத்தைப் பற்றிய செய்திகள் என்பதைச் சொல்ல Tamil Nadu / Regional என்று போட்டிருப்பார்கள். அந்தப் பக்கத்தில் ஒரு முறை, பாண்டிச்சேரியில் காலை சத்துணவாக, ரொட்டி சாப்பிட்டு குழந்தைகள் வாந்தி, மயக்கம்' என்று செய்தி போடப்பட்டது. 'தமிழ்நாடு' என்ற தலைப்பின் கீழ், பாண்டிச்சேரி செய்தி போடப்பட்டதால், தமிழக அரசின் கௌரவமும், மானமும் பாதிக்கப்பட்டதாகச் சொல்லி 'இந்து'வின் மீது அவதூறு வழக்கு.

* தலைமைச் செயலாளராக இருந்த சுகவனேஸ்வர் மாற்றப்பட்டபோது, "தலைமைச் செயலாளர்களை அடிக்கடி மாற்றுவதால் நிர்வாகம் பாதிக்கப்படுகிறது. அதிகாரிகள், ஸ்திரமற்ற நிலையால் பாதிக்கப்படுகிறார்கள்' என்ற செய்தி வெளியிட்டதற்காக வழக்கு.

* மதுரையில் தி.மு.க.வினர், நெசவாளர்களுக்குக் கஞ்சித் தொட்டி திறந்த போது போலீஸுக்கும் தி.மு.க.வினருக்கும் மோதல் ஏற்பட்டது. 'ஜெயலலிதா சொல்லித்தான் தி.மு.க. தொண்டர்களை போலீஸ் தாக்கினர்' என்று ஸ்டாலின் சொன்னதைப் பிரசுரித்ததற்காக மேலும் ஒரு வழக்கு.

* 'தமிழகத்தில் பட்டினிச் சாவுகள் நடந்து கொண்டிருக்கின்றன' என்று இந்திய கம்யூனிஸ்ட் கட்சி சொன்னதை பிரசரித்ததற்காக நோட்டீஸ் – வழக்கு. அந்தக் குற்றச்சாட்டுக்கு மாவட்ட ஆட்சித் தலைவர் பதிலும் உடன் வெளியிடப்பட்டிருந்தது

என்பது கவனத்துக்குரியது.

* அ.தி.மு.க.வைப் பற்றிய எந்த செய்தியை வெளியிட்டாலும் எங்களிடம் கேட்டுக் கொண்டுதான் – எங்கள் நிலையைத் தெரிந்து கொண்டுதான் செய்தி வெளியிட வேண்டும்" என்று ஒட்டுமொத்தமாக ஒரு உத்தரவு கேட்டு நீதிமன்றத்தை நாடியுள்ளது அ.தி.மு.க. சாத்தான்குளம் தேர்தலில் வாக்காளர்களை அ.தி.மு.க. கவர்ந்த விதம் குறித்து செய்தி வெளியிட்டதற்காக இந்த நடவடிக்கை.

ஸ்டேட்ஸ்மேன்:

* கலைஞரைக் கைது செய்த போது "arrogance of power" என்று எழுதியதற்காக.

* ஜெயலலிதா மீது நிலுவையிலுள்ள வழக்குகள் குறித்த தலையங்கத்துக்காக.

* டான்ஸி வழக்கில் ஜெயலலிதா உயர்நீதிமன்றத்தில் விடுவிக்கப்பட்டதை அடுத்து எழுதப்பட்ட தலையங்கத்துக்காக.

* காவிரிப் பிரச்னை உச்சகட்டத்தில் இருந்தபோது அரசியல் சட்ட அடிப்படையில் "கர்நாடக அரசுக்கு மத்திய அரசு தாக்கீது கொடுக்க வேண்டும்" என்று பிரதமரிடம் ஜெயலலிதா மனு கொடுத்ததாக செய்தி வெளியிட்டதற்கு மறுப்பு தெரிவித்து மானநஷ்ட வழக்கு.

டைம்ஸ் ஆப் இந்தியா:

* காவிரிப் பிரச்னையில் மேலே சொன்ன அதே செய்தியை வெளியிட்டதற்காக 'டைம்ஸ்' மீதும் வழக்கு. இந்தச் செய்தி தில்லியிலிருந்து பி.டி.ஐ. செய்தி நிறுவனம் வெளியிட்ட தகவலாகும்.

தினமலர்:

* சுப்ரீம் கோர்ட்டில் காவிரி வழக்கில் தமிழக அரசின் சார்பாக ஆஜரான வழக்கறிஞர்கள், நீதிபதிகளால் கண்டிக்கப்பட்டார்கள் என்ற செய்தி வெளியிட்டதற்காக.

* "தமிழகத்தில் பட்டினிச் சாவுகள்" என்ற செய்தி வெளியிட்டதற்காக.

* சுகவனேஸ்வர் மாற்றம் குறித்த விவகாரத்தில் "அவர் அரசாங்க நன்மைக்கு எதிராக செயல்பட தயக்கம் காட்டியதால் மாற்றம் செய்யப்பட்டார்" என்று செய்தி வெளியிட்டதற்காக.

தினகரன்:

* கலெக்டர்கள் – போலீஸ் அதிகாரிகள் மாநாட்டில் "ஆளும் கட்சிக்காரர்கள் கொடுக்கும் 'அழுத்தம்' குறித்து அவர்கள் புகார் சொன்னார்கள்" என்ற செய்தி வெளியிட்டதற்காக.

* காவலர் குறைகளை ஜெயலலிதா கேட்டபோது, சங்கம் அமைக்கும் முயற்சியில் ஈடுபட்டிருந்த மணிவண்ணன் என்ற காவலர், காவல்துறை அதிகாரிகளால் தாக்கப்பட்டார் என்ற செய்தியின் விளைவாக வழக்கைச் சந்திக்கிறது தினகரன். இதே செய்தி அப்படியே 'இந்து'விலும் வெளி வந்தது.

* பஸ் போக்குவரத்தை தனியார் மயம் ஆக்குவதை சுகவனேஸ்வர் ஒப்புக் கொள்

சுப்பர் ப்ராஸிக்யூட்டர்!



ளாததால்தான் அவர் மாற்றம் செய்யப் பட்டார் என்று செய்தி போட்டதற்காக.

* பேரையூரில் நடைபெற்ற 'குழந்தைகள் குழிமாற்று திருவிழா' அம்மா ஆட்சியின் ஆயுளை நீட்டிப்பதற்காக அமைச்சர் துரை ராஜால் ஏற்பாடு செய்யப்பட்டது என்று செய்தி போட்டதற்காக.

* மதுரை கஞ்சித் தொட்டி நிகழ்ச்சியின் போது போலீஸ் தடியடி நிகழ்த்தியதற்கு, ஜெயலலிதாவின் கட்டளையே காரணம் என்று ஸ்டாலின் சொன்னதை வெளியிட்ட தற்காக.

ஜூனியர் விகடன்:

* சுகவனேஸ்வர், பேருந்து தனியார் மயமாக்கத்துக்கு எதிர்ப்பு தெரிவித்ததால் தான் மாற்றப்பட்டார் என்று எழுதியதற்காக.

* தலைமைச் செயலாளராக இருந்த சங்கர் விஜிலன்ஸ் கமிஷன் பொறுப்பிற்கு நியமனம் செய்யப்பட இருந்த நிலையில் ஜெயலலிதா அதைத் தடுக்க முயன்றார் என்ற செய்தி வெளியிட்டதற்காக.

நக்கீரன்:

* இந்தப் பத்திரிகை, ஆசிரியர், அதன் நிருபர்கள் ஆகியோர் மீது தொடுக்கப் பட்டிருக்கும் வழக்குகளைப் பட்டியலிடு வதென்றால் அது இந்தப் பக்கத்துக்குள் அடங்காது. குறிப்பாக நிருபர் சிவசுப்பிர மணியன் மீது தொடர் வழக்குகள்; நிருபர் கள் மகரன் (ஜெயிலில் இருக்கிறார்), பிரகாஷ் ஆகியோர் மீது வழக்குகள். இப்போது கோபால் மீது 'பொடா!'.

அரசியல்வாதிகள் மீதான வழக்குகள்:

* முன்னாள் அமைச்சர் பொன்முடியின் மீது கொலை முயற்சி வழக்குகள் இரண்டு.

* ஸ்டாலின் மீது இரண்டு வழக்குகள். (ராணி மேரி கல்லூரி விசிட் மற்றும் கைது தொடர்பாக) இதில் ஒன்று கொலை முயற்சி வழக்கு.

* பரிதி இளம்வழுதியின் மீது சட்ட மன்றத்தில் குமாரதாஸைத் தாக்க முயன்ற தாக கொலை முயற்சி வழக்கு.

* சைதை தொகுதி தி.மு.க. பிரமுகர் மா. சுப்பிரமணியத்தின் மீது காவலரைத் தாக்க முயன்றதாக கொலை முயற்சி வழக்கு.

* முன்னாள் அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர் செல்வத்தின் மீது கொலை முயற்சி வழக்கு.

* தாமரைக்கனியின் மீது மேடைப் பேச்சு அவதூறுக்காக பல வழக்குகள்.

* ஆண்டிப்பட்டி, சைதாப்பேட்டை, சாத்தான்குளம் இடைத் தேர்தல்களின்போது நூற்றுக்கணக்கான தி.மு.க. தொண்டர்களின் மீது பல காரணங்களுக்காக வழக்குகள் போடப்பட்டுள்ளன.

ஊழல் வழக்குகள்:

* சென்னையில் மேம்பாலங்கள் கட்டி யதில் ஊழல் என்று முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து, கலைஞர், ஸ்டாலின், கோ.சி.மணி, முன்னாள் தலைமைச் செய லாளர் நம்பியார் ஆகியோரைக் கைது செய்தார்கள். ஆனால் ஒன்றரை வருடங்கள் ஆகியும் இதுவரை குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யவில்லை.

* வருமானத்திற்கு அதிகமாக சொத்து சேர்த்து விட்டார்கள் என்ற அடிப்படையில் முன்னாள் தி.மு.க. அமைச்சர்கள் பொன்முடி, அந்தியூர் செல்வராஜ், துரை முருகன், சமயநல்லூர் செல்வராஜ், நேரு, சுரேஷ்ராஜன், ஜெனிபர் சந்திரன், பேராசிரி யர் அன்பழகன், ஐ. பெரியசாமி மற்றும், மதுரை முன்னாள் துணை மேயர் குழந்தை வேலு, தூத்துக்குடி பெரியசாமி ஆகியோரின் வீடுகள் ஊழல் கண்காணிப்புத் துறையால் சோதனையிடப்பட்டன. ரொக்கம் பறிமுதல், ஆவணங்கள் பறிப்பு என்று பரபரப்பான செய்திகள் அடிபட்டதே தவிர, இவர்களில் யார் பேரிலும் இதுவரை குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்படவில்லை.

* மதுரை திருநகர் கூட்டுறவு வீடுகட்டும் சங்கத்தில் முறைகேடுகள் நடந்ததாக, முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் அக்கினி ராஜ் கைது செய்யப்பட்டார்.

தொகுப்பு : **கௌசி**

''என்னங்க... உங்க அம்மா எல்லை தாண்டிய பயங்கரவாதத்துக்குத் துணை போறாங்க!''

''எப்படிச் சொல்ற வேணி?''

''அடுக்களையை விட்டு திண்ணையில் வந்து எங்கிட்ட சண்டை போடறாங்க!''

– புளியரை கணேசன்



மும்பை மசாலா



• ஐஸ்வர்யா ராய்

ஜூலியாவின் சிபாரிசு!

"என்ன மீனா... உங்க வீட்ல இன்னைக்கு மீனா?" என்று வீட்டுக் கதவைத் தட்டி விசாரிக்கும் குரல் எதிர்வீட்டு எலியாகவோ பக்கத்து பில்டிங் பிரத்யூஷாவாகவோ இருக்க வேண்டுமென்பதில்லை; தென் மும்பையைப் பொறுத்தவரையில் சிவசேனைத் தொண்டரிலிருந்து தலைவர் வரை யாராக வேண்டுமானாலும் இருக்கலாம். "ஸம்திங் ஃபிஷி" (fishy) என்கிறீர்களா? உண்மைதான்! "ஏற்கெனவே உ.பி, பீகார், பங்களாதேஷ், குஜராத், தென்னிந்தியா போன்ற இடங்களிலிருந்து இங்கே வந்து டேரா போட்டு, எங்களுக்கே உரித்தான காற்று, தண்ணீர், நிலம் போன்ற அடிப்படை வசதிகளையே பறித்துக் கொண்டு விட்டார்கள்; அலுவலகங்களில் உயர் பதவிகளைத் தட்டிச் சென்றுள்ளீர்கள். இப்போது மும்பையின் ஆதி இனமான "கோஹ்லி"களின் அடிமடியிலேயே கை வைத்துவிட்டார்களே? எங்கள் மீனவ நண்பர்கள் எப்படிப் பிழைப்பது?" என்று மண்ணின் மைந்தர்கள் மாய்ந்து போகிறார்கள்.

எல்லாம் சில அமைப்புகள் "வெஜிடேரியன்ஸ் ஒன்லி" போர்டு போட்டதால் வந்த வினை! சில பிரமோட்டர்களும், 'அசைவம்' என்றால் அசைந்து கொடுப்பதில்லையாம். 'ஃப்ளாட் காலி இல்லை' என்று 'புக்'இங்கின் போதே மறுத்து விடுகிறார்களாம். அசைவத்தை வெறுப்பவர்கள் வீட்டுக்குப் பக்கத்திலேயே மீன் கடை போடுவோம் என்று சிவசேனைக்காரர்கள் பயமுறுத்துகிறார்கள். நாறடிக்க வேண்டும் என்று தீர்மானித்து விட்டார்கள்... அப்புறமென்ன? மீன்தானே முதல் சாய்ஸ்?

முதல் சாய்ஸ் என்னமோ ஐஸ்வர்யா ராய்தான்! ஆனால் இரண்டு, மூன்று... நான்காவது சாய்ஸ்கூட இருக்கும் போலிருக்கிறதே? ஹாலிவுட் ஜேம்ஸ் பாண்ட் மூவிகளுக்கு பாலிவுட் ஹீரோயின்களின் சாய்ஸைப் பற்றித்தான் சொல்கிறோம். பாண்டுக்கு ஜோடியாக முதலில் ஐஸைத்தான் சொன்னார்கள். இப்போது, ப்ரியங்கா சோப்ரா, லாரா தத்தா,

ப்ரீத்தி ஜிண்டா என்று வரிசையாகப் பெயர்கள் அடிபடுகின்றனவே? பாண்ட் மூவிஸென்றாலே அடிதடிதான்... அதற்காக நாயகி விஷயத்திலுமா அப்படி? ஆனால் அயல்நாட்டுப் பத்திரிகைகள் ராயைத்தான், நிக்கோல் கிட்மென், கேமிரோன் டயாஸ், கேதரீன் ஜீடா ஜோன்ஸ் ஆகியோரின் கலவை என்று வர்ணிக்கின்றன. ஜூலியா ராபர்ட்ஸோ 'ஐஸ்'தான் உலகிலேயே அழகி என்று, ஏற்கெனவே வழங்கப்பட்டுள்ள உலக அழகிப் பட்டத்தைப் புதுப்பித்து சிபாரிசு செய்திருக்கிறார்! சிபாரிசு செல்லுபடியாக வேண்டுமே?

சிபாரிசு செல்லுபடியாகுமா ஆகாதா? என்பதை பரீட்சித்துப் பார்க்கும் காலமும் அதை ஒட்டிய ரகளைகளும் மும்பையில் களை கட்டத் துவங்கி விட்டன. பிள்ளையார் சுழி போட்டிருப்பது புனித சிலுவையர் பள்ளி! ஆம்... தேசியவாத காங்கிரஸ் கட்சிக்காரர் ஒருவரின் குழந்தைக்கு அங்கே அட்மிஷன் மறுக்கப்படவே, சிபாரிசுக் கடிதம் அனுப்பிய லோகல் தலைவர் தலைமையில், பிரின்சிபாலுக்குக் கறுப்புப் பெயிண்ட் அபிஷேகம் நடந்தேறியது. இது ஒரு முன்னோடிதான்...



• ப்ரீத்தி ஜிண்டா

வரிசையாகப் பல தொடர்கதைகள் அரங்கேறும். 'நாங்கள் சிபாரிசு செய்தால், மறுப்பதுடன், எங்களிடம் முகம் கொடுத்துப் பேசக் கூட மறுக்கிறார்கள் பள்ளித் தலைமை ஆசிரியர்கள். தொகுதி மக்களோ, 'ஒரு கே.ஜி. சீட் வாங்கித் தரத் துப்பில்லை; உங்களுக்கு எம்.எல்.ஏ, எம்.பி., அட்லீஸ்ட் கார்ப்பொரேஷனிலாவது சீட் வாங்கித் தந்தோமே' என்று காறித் துப்புகிறார்கள். என்ன செய்வது?'' என்று அழுகிறார்கள் அரசியல்வாதிகள்! ஹூம்... இரத்தத்துக்கு இரத்தம் போல், 'சீட்டுக்குச் சீட்'டா? பலே... பலே...

பலே திருடர்களை எல்லாம் கூட பிடித்து விடுகிறார்கள்... ஆனால் சில சமயம் சம்பந்தப்பட்டவர்கள் ஒத்துழைக்காததால், சாதாரணர்களைக் கூட கோட்டை விட வேண்டியிருக்கிறது. பாருங்களேன்... பாந்த்ராவில் வி.என். ஜூவல்லர்ஸின் அதிபருக்கு நிறைய ஃபோன் மிரட்டல்கள் வந்தும் அவர் கம்ப்ளெயிண்ட் கொடுக்க பயந்திருக்கிறார். அவருக்கே ஒரு 'பாம்' பார்சலில் வந்து, வாட்ச்மேன் அதை வாங்கி பத்திரமாக முதலாளியிடம் கொடுத்து, முதலாளி அதை வாட்ச்மேனையே திறக்கச் சொல்லி, அது வெடித்து, காவலர் உயிரிழந்தும் விட்டார். பார்சலிலேயே 'ஆறு லட்சத்தை இன்ன இடத்துக்குக் கொண்டு வா' என்ற கடிதம் இருந்தும்... நகைக் கடைக்காரர், 'எனக்கு ஒன்றுமே தெரியாது; எனக்கு தப்புத் தண்டாவான யாருடனும் தொடர்பேயில்லை' என்று மறுத்தால்... எப்படி கொலையாளியைப் பிடிப்பது?

— ஜெய்ஸ்ரீ ராஜ்

ஜெ.வின் அரசியல் வேகம் பற்றி..?

● பெ. பொன். ராஜபாண்டி, மதுரை.

? அப்துல் கலாமைப் போல் எளிமையான ஜனாதிபதி உண்டா?

! அவர் என்னவோ எளிமை ஏகாம்பரம் தான். ஆனால் அவருடைய ஹேர் ஸ்டைலுக்குத் தொள்ளாயிரம் ரூபாய் கட்டணம் வசூலிக்கிறார்களாம். அதுதான் இடிக்கிறது.

● ஜி.ஜெயராமன், கூந்தலூர்.

? ஜெயலலிதாவின் அரசியல் வேகம் பற்றி தராசு என்ன நினைக்கிறது?

! நம்ம ஆட்டோ அண்ணாச்சிகள் சொல்வதை அப்படியே வழிமொழிகிறேன். வேகம் விவேகமல்ல!

● பொன்விழி, அன்னூர்.

? ஆயிரம் பொய்கள் சொல்லி திருமணம் செய்யலாமா?

! ஆயிரம் முறை போய்ச் சொல்லி, அதாவது உறவுக்காரர்களுக்குத் தெரிவித்து திருமணம் செய்யணும் என்பதுதான் இப்படி திரிந்து விட்டது என்று எங்கோ படித்த ஞாபகம். உங்கள் வழிக்கே வர்றேன். பத்தே நாளில் விவகாரத்து ஆகிவிடும், பரவாயில்லையா?

● கே.எம்.ஸ்வீட் முருகன், கரடி கொல்லப்பட்டி.

? இயற்கையிலேயே யார் தங்களை மிகவும் கவர்ந்தவர்?

! இயற்கையேதான்.

● யோகஸ்ரீ ராஜ், மும்பை - 81.

? நீங்கள் எப்படி? படுத்தவுடன் தூங்கி விடும் ரகமா?

! கொஞ்சம் உல்டா! தூக்கம் வந்ததும் படுத்துவிடும் ரகம்.

● எஸ்.டி.ராமன், மயிலாடுதுறை.

? திரைப்பட உலகின் சாதனையாளராகவும் நல்ல சிந்தனையுடையவருமான கமல் ஹாசனின் குடும்பப் பிரச்னை, பத்திரிகைகளில் இப்படி சிரிப்பாய்ச் சிரிப்பது வேதனையான விஷயமில்லையா?

! 'கடவுள் பாதி, மிருகம் பாதி, விளக்க முடியா கலவை நான்' என்று அவரே சொல்லிவிட்ட பிறகு நாம் என்ன சொல்ல?

● கே. சஞ்சீவி பாரதி, அவ்வையார்பாளையம்.

? தமிழகத்தில் என்ன நடக்கிறது?

! போலீஸ் ராஜ்யம்.

● மு. வணங்காமுடி, திருவான்மியூர்.

? கலைஞரின் 'தாய்' கவிதையைத் தராசு படிப்பதுண்டா?

! உண்டு. ரசனையான தமிழாக்கப் பகுதிகளைத் திரும்பப் படிப்பதும் உண்டு. இலக்கியத்தில் ஈடுபாடு, அரசியல் அநாகரிகங்களைத் தாங்கும் சக்தியைத் தருகிறது என்பதைப் புரிந்து கொண்டதுமுண்டு.

● எஸ்.கோவிந்தராஜன், கோவை.



• வேகம்



• இடிக்கிறது

? சதாம் உசேன், மக்களின் நூறு சதவிகித ஆதரவையும் வாக்குகளையும் பெற்றதாகக் கூறப்பட்டார். ஆனால் இன்று மக்கள் அவரது வீழ்ச்சியைக் குதூகலத்துடன் கொண்டாடுகிறார்கள். தமிழ் நாட்டின் சர்வாதிகாரி புரிந்து கொள்வாரா?

! கஷ்டம் தான். Power corrupts; absolute power corrupts - absolutely - Lord Acton.

● எஸ். சாந்தி, காட்பாடி.

? காட்டிலிருந்து வால்டர் தேவாரம் வெற்றிகரமாக வாபஸ் பெறப்பட்டு விட்டாரே?

! அவலை நினைத்துக் கொண்டு உரலை

இடித்த கதையாக, காட்டில் பெற்ற தோல்விக்கு நாட்டில் வேறு யாரையோ பழி வாங்கிக் கொண்டிருக்கிறார்.

● தேவி, பாபநாசம். ✱

? பொறியியல் கல்வியைத் தமிழில் தரலாமா?

! தாராளமாகத் தரலாம். சீனர்கள், ஜப்பானியர்கள், பிரெஞ்சுக்காரர்கள், ஜெர்மானியர் ஆகிய எல்லோரும் தாய்மொழியில்தான் தருகிறார்கள். ஆனால், கூடவே ஆங்கிலத்திலும் ஆழ்ந்த புலமை பெறாமல் போனது தப்பு என்று இப்போது உணர ஆரம்பித் திருக்கிறார்கள். அந்தத் தப்பை நாமும் செய்யா மலிருந்தால் சரி.

● கா.மு.ஜக்காரியா, எலந்தங்குடி.❐

? மதிப்புக் கூட்டப்பட்ட வரியை (VAT) கடைசியாக சுமக்கப் போகிறவர்கள் யார்? வணிகர்களா, மக்களா? மக்கள் தான் என்றால் வியாபாரிகள் போர்க் கொடி பிடிப்பதேன்?

ம.கூ.வ.ன்னா என்னன்னே முதல்ல புரிய லைங்க. விலைவாசி உயரும்னு சிலரும், குறையும்னு சிலரும், 'ஏறவும் ஏறும்; இறங் கவும் செய்யும்'னு மிச்சப்பேரும் சொல்லிக் கிட்டு அலையறாங்க. புதிய வரி எப்படிப் பட்டது என்பதை விளக்கிச் சொல்ல வேண்டிய கடமை தங்களுக்கு இருக்கிறதா எந்த அமைச்சரும் நினைக்கக் காணோம். ஒருவேளை அவங்களுக்கே புரியலையோ என்னமோ!

● கே. முரளிதரன், மதுரை - 10.


? "234 தொகுதிகளையும் தன் தொகுதி களாக பாவிக்கிறார் முதல்வர் ஜெய லலிதா" என்கிறாரே அமைச்சர் நத்தம் விஸ்வநாதன்?

! இன்னும் ஒருபடி மேலே போய், தமிழ் நாடே தம்முடைய சொந்த சொத்து போல முதல்வர் பாவிப்பதாகக் கூடச் சொல்ல லாமுங்க. அவருடைய போக்கு இன்னைக்கு அப்படித்தானிருக்கு.

● ஆர். அப்துல்சலாம், திருச்சி.

? 'சந்தனக் கடத்தல் வீரப்பனை வரும் ஜூன் மாதத்துக்குள் பிடித்து விடுவோம்' என்று கர்நாடக மந்திரி கார்கே கூறி யிருப்பது எதைக் காட்டுகிறது?

! கேட்டுக் கேட்டுப் புளித்துப் போன விஷயத்தை திரும்பத் திரும்பச் சொல்வதற்கு ஆட்சியிலிருப்போருக்குக் கசப்பதில்லை என்பதை.



* கலவை

❐ ரூ. 100/- பரிசு பெறுபவர்:
கா.மு. ஜக்காரியா,
178, ஆசாத் தெரு.
எலந்தங்குடி - 609 401

✱ ரூ. 50/- பரிசு பெறுபவர்:
தேவி,
33/3, சன்னதி தெரு,
பாபநாசம்,
தஞ்சை மாவட்டம்.



கதைக் கச்சேரி!

'க்ளீவ்லேண்டில் கல்கி' பற்றி இரண்டு வாரங்களுக்கு முன்பு படித்தது நினைவிருக்கிறதா...?


க்ளீவ்லேண்ட் வரை போய் விட்டுச் சும்மா இருப்பதாவது, என்று கொஞ்சம் கதை சொல்ல முடிவு செய்திருக்கிறோம். முத்துஸ்வாமி தீக்ஷிதர், சியாமா சாஸ்திரி தொடங்கி, பாபநாசம் சிவன், அமரர் கல்கி வரையிலான பாடலாசிரியர்கள் பற்றிய சின்னச் சின்ன கதைகள். – பாடல் பிறந்த விவரத்தைச் சொல்லும் அந்தக் கதைகளையொட்டி அப்பாடல்களைப் பாடப் போகிறார் டி.எம். கிருஷ்ணா.

ஏப்ரல் 27, பிற்பகல் 2.30 மணிக்கு க்ளீவ்லேண்ட் தியாகராஜ ஆராதனை விழாவில் நடைபெறவிருக்கிற இந்தக் கதைக் கச்சேரி, கதை வித்தகரான கல்கி கிருஷ்ணமூர்த்தியின் நினைவுக்குச் சிறந்த அஞ்சலியாக அமையும்.

கிருஷ்ணாவுடன் இந்தக் கச்சேரியில் வயலினில் இணையப் போகிறார் முல்லைவாசல் சந்திரமௌலி. டி.கே.மூர்த்தி, பி. சிவராமன் என்று இரட்டை மிருதங்கம். பாட்டும் கதையும் இணையும் இந்த நிகழ்ச்சியில், கிருஷ்ணாவின் உற்சாகமும் இரண்டு மடங்காக இருக்கும் என்று ரசிகர்கள் காத்திருக்கிறார்கள்.

கவனமாகத் தேர்ந்தெடுத்த பொறுக்குமணியான பாடல்களாலான கதைக் கச்சேரியைப் பற்றி கல்கியில் இனிவரும் இதழில் படித்து மகிழலாம்.

– ஆசிரியர்



மக்களை வதைக்கும் லாரி ஸ்டிரைக்!

ரூபாய்க்கு ஒரு தம்பிடி (அதாவது, ரூபாயில் நூற்றுத் தொண்ணூற்று இரண்டில் ஒரு பாகம்!) விற்பனை வரி விதித்தார் ராஜாஜி. அதற்கே முணுமுணுப்பு எழுந்தது, அந்த நாளில்!

சலசலப்பு என்று கேள்விப்பட்ட மறுநாளே பொதுக் கூட்டம் போட்டார் அன்றைய சென்னை ராஜதானியின் பிரதம மந்திரி! எங்கே? கொத்தவால் சாவடியில்! அத்தனை வியாபாரிகளையும் அழைத்துப் பேசினார்:


சேலம் ஜில்லாவில் மதுவிலக்கு அமல்படுத்துகிறது அரசு. அது படிப்படியாக மற்ற ஜில்லாக்களுக்கும் விரிவுபடுத்தப்படும். இதனால் ஏழை மக்கள் ரொம்பவும் நன்மை அடையப் போகிறார்கள். ஆனால் அரசுக்கு, கள்ளுக்கடை ஏலம் இல்லாததால் ரொம்ப வருவாய் இழப்பு ஏற்படும். அதை ஈடுகட்டத்தான் ரூபாய்க்கு ஒரு தம்பிடி கேட்கிறேன். ஏழைகள் வீட்டில் விளக்கேற்றி வைக்க பொது மக்கள் ரூபாய்க்கு ஒரு தம்பிடி தரக் கூடாதா? அதை வசூலித்து அரசிடம் வழங்க நீங்கள் தயங்கலாமா?

இன்னொன்று: மதுவிலக்கு காரணமாக, கள்ளுக்கடைக்குப் போன பணம், இனி மக்களிடம் தங்கும். அவர்களுடைய வாங்கும் சக்தி அதிகரிக்கும். அதாவது வியாபாரம் பெருகும். கடைசியில் பயன் பெறப்போவது நீங்கள்தானே!

இப்போது சொல்லுங்கள், விற்பனை வரி வேணுமா, வேண்டாமா?




கல்கி



2003 ஏப்ரல் 27
சுபானு சித்திரை 14
மலர் : 61
இதழ் : 39

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற தாயென்று கும்பிடடி பாப்பா - பாரதியார்.




அத்தனை பேரும் கை உயர்த்தி ஆதரவு தெரிவித்தார்கள். எதிர்ப்பு, முளையிலேயே கிள்ளி எறியப்பட்டது. எல்லாருக்கும் திருப்தி.

ஆனால் இன்று என்ன நடக்கிறது? நான்கு நாட்களாக லாரி ஸ்டிரைக். தக்காளி கிலோ நாற்பது ரூபாய்க்கு விற்கிறது. அப்படியே மற்ற விலைவாசிகள் கிடுகிடு உயர்வு. ஒரு பாட்டில் பெட்ரோலுக்காக பைக் சொந்தக்காரர்கள் 'பங்க்'வாசலில் பதை பதைக்கும் வெயிலில் மணிக் கணக்கில் கியூ. கட்டுமானப் பணிகள் நின்று போக, கூலியில்லாமல் ஏழைகளின் பரிதவிப்பு. இன்னும் ஏதேதோ துன்பங்கள் மக்களை வதைத்த பிறகு, 'அப்பாடா, ஒரு வழியாக மத்திய அரசு ஆழ்ந்த உறக்கத்திலிருந்து விழித்துக் கொண்டு விட்டது; லாரி உரிமையாளர்களுடன் பேச்சு வார்த்தை நடத்த சம்மதித்தும் விட்டது; ஏதோ இப்போதாவது அரசு அசைந்து கொடுத்ததே' என்று மக்கள் ஆறுதல் அடைய முற்பட்ட வேளையில், "பேச்சு வார்த்தை தோல்வி" என்ற செய்தி வந்து பேரிடியாய் இறங்குகிறது!

பேச்சு வார்த்தைகள் மீண்டும் நடந்து முடிய வேண்டும்; இழுத்தடிக்காமல் சமரசத் திட்டம் விரைவில் உருவாக வேண்டும்; ஸ்டிரைக் வாபஸ் பெறப்பட வேண்டும்; மக்கள் வாழ்க்கை சகஜ நிலைக்குத் திரும்ப வேண்டும். இதற்கெல்லாம் இன்னும் எத்தனை நாட்களாகுமோ!

லாரி ஸ்டிரைக் என்பது சாதாரண விஷயமல்ல; அது நாட்டையே பொருளாதார ரீதியில் செயலிழக்கச் செய்யக் கூடியது. கணக்கிலடங்காத கோடிகள் நம் தேசத்துக்கு நஷ்டம் ஏற்படும். மக்களின் அன்றாட வாழ்க்கை நரகமாகும். அப்படிப்பட்ட ஒரு வேலை நிறுத்தம் நடக்கப் போகிறது என்பதும் அரசுக்கு முன்பே தெரியும். அதை எப்படி சமாளிப்பது என்று யோசித்திருக்க வேண்டாமா?

ஒன்று, லாரிப் போக்குவரத்து அத்தியாவசியப் பணிகளில் ஒன்று என அறிவித்து ஸ்டிரைக்கைத் தடை செய்திருக்க வேண்டும். அப்படித் தடை செய்வதால் ஏற்படக் கூடிய பின் விளைவுகளுக்கு அரசு தன்னைத் தயார் நிலையில் வைத்துக் கொள்ளவும் வேண்டும். ராணுவத்தை அழைத்தேனும்



லாரிப் போக்குவரத்து தடைப்படாமல் நடத்திக் காட்டுவோம் என்று உறுதியாய் இருக்க வேண்டும்.

இல்லையா, வேலை நிறுத்தம் தொடங்குவதற்கு முன்னதாகவே, "என்னப்பா உங்க கோரிக்கை; வாங்க பேசலாம்" என்று லாரி உரிமையாளர்கள் சங்கத்தினரை அழைத்து, மரியாதை கொடுத்து விவாதத்தில் இறங்கியிருக்க வேண்டும். 'அதிகாரிகளுடன் பேசுங்க, அமைச்சர் வர முடியாது' என்பது போன்ற வீம்புப் பிடிவாதங்கள் உதவாது. பிரச்னைகளுக்குத் தீர்வு கண்டு, வேலை நிறுத்தத்தைத் தவிர்ப்பது ஒன்றே குறியாக செயல்பட்டிருக்க வேண்டும்.

இரண்டில் ஒன்றையும் செய்யாமல், கையைக் கட்டிக் கொண்டு உட்கார்ந்திருந்த ஆட்சித் தலைவர்கள், மக்கள் படும் துன்பத்தைக் கண்டும் காணாமல் நாலு நாள் தாமதம் செய்த தலைவர்கள், திடும்மென்று விழித்துக் கொண்டு, "அடடா, நிலைமை கட்டுக்கடங்காமல் போய் விடும் போலிருக்கிறதே, வெகு சீக்கிரம் லாரிகள் ஓடாவிட்டால் அடுத்த தேர்தலில் நம் கதி அதோகதி ஆகிவிடும் என்று தோன்றுகிறதே" என்பதாகப் புரிந்து கொண்டு, பேச்சுவார்த்தைகளுக்கு அழைப்பு விடுக்கிறார்கள். அப்புறம், "பேசிப் பார்த்தோம்; ஒரு முடிவுக்கும் வர முடியவில்லை; மறுபடி சில நாள் சென்று பேசிப் பார்ப்போம்" என்று அதிமேதாவித்தனமான அறிக்கை விடுகிறார் அமைச்சர்! சாலைப் போக்குவரத்து அமைச்சரின் சாதனை இது தான்.இனியாவது, பிரதமரா, அமைச்சரா, அதிகாரிகளா, யார் பேசுவது என்ற ஈகோ பிரச்னைகள் தீரவேண்டும். அரசு இறங்கி வந்ததும் லாரி உரிமையாளர்கள் முறுக்கிக் கொள்ளாமல், நேசப்பான்மையுடன் ஓரளவுக்கு விட்டுக் கொடுத்துப் பேச முன்வரவேண்டும். ஒன்பது அம்சக் கோரிக்கைகளில் நாலோ, ஐந்தோ நிறைவேறினாலும் வெற்றிதான்' என்ற மனப்பக்குவத்தைப் பெற வேண்டும். அரசும் லாரி உரிமையாளர்களை ஏதோ எதிரிகள் போல் எண்ணாமல், நாட்டின் பொருளாதாரத்தை உயர்த்த உதவும் தோழர்களாகக் கருதவேண்டும்.

இத்தனை நாட்களாக மக்களை அவதிக்குள்ளாக்கியது போதும். "மக்களுக்கு உழைக்க வந்தோம்; மக்கள் ஆதரவால் வாழ்கிறோம்" என்ற உணர்வுடன் இரு தரப்பினரும் செயல்படட்டும். ○



காதல் சடுகுடு

இலைகளும் கூட உதிர்ந்து, வெறும் முட்களோடு முறைத்துக் கொண்டிருக்கிற முற்றிய செடி. இனி எங்கே பூத்துத் தொலைக்கப் போகிறதென்று பார்ப்பதைக் கூடத் தவிர்த்து விடுகிறோம். ஆனால் காலைப் பொழுதொன்றில், கற்றை இதழ்களோடு ஒளி வீசியபடி ஒற்றை ரோஜா அதில் மலர்ந்திருந்தால் எப்படி நம் மனம் மலருமோ, அப்படியொரு மலர்ச்சியான உணர்வைத் தந்து விடுகிற படம். ஆனால் 'காதல் சடுகுடு' என்ற படத்தின் தலைப்பு, படைப்பின் மீது நம்பிக்கை வைக்காத வியாபார முனைப்பின் திணிப்பு.

முதல் பார்வையில் ஏற்படுகிற பாதிப்பை மட்டும் வைத்துக் கொண்டு, ஒருவரை நல்லவர் என்றோ, கெட்டவர் என்றோ இறுதி முடிவுக்கு வந்துவிடக் கூடாது என்ற சிறு பொறிதான் கதை. இதற்குள் அசட்டுத்தனம் இல்லாத, பொறுப்பான காதலொன்றை உள்ளீடு செய்து, தேர்ந்த சிற்பியைப்போல பிசிறில்லாமல் திரைக்கதையைச் செதுக்கியிருக்கிறார் இயக்குனர்.

திரைக்கதையை ஒரே சீராக நகர்த்திக் கொண்டு போகும் காட்சிகளில் சினிமாச் சாயம் மிக மிகக் குறைவு. உதாரணத்திற்கு, தூரத்தில் சாரலாய் சீறி வரும் மழையின் ஒரு துளி கூட தன்னை நனைத்துவிடக் கூடாதே என்று, நாயகி பிரியங்கா வீடு நோக்கி ஓட, மழை துரத்த, அந்தக் காட்சி மட்டுமல்ல, காட்சியைப் படமாக்கியிருக்கும் விதமும்கூட எளிய கவிதை.

மழை நாளைத் தொடர்ந்து விரியும் அடுத்த காட்சியிலும் மழை பெய்ததற்கான அடையாளங்களைக் காட்சிப்படுத்தியிருக்கும் விதம் யதார்த்த இதம்.

காதல் வசப்பட்டு விடுகிற யாரும், தங்களின் குறுகுறுப்பான காதல் அனுபவங்களை, ஒன்றுக்கு இரண்டாய் உறவினர், நண்பர்களிடம் மிகைப்படுத்திச் சொல்லி, சந்தோஷப்படும் உளவியல் பாங்கை, ரசிக்கும்படி காதல் காட்சிகளாக்கி இருப்பதைப் பாராட்டலாம். என்றாலும் திணிக்கப்பட்ட அந்த மேற்கத்திய முத்தம் பிசினஸ் பித்தம்.

நீ என்னைப் பொறுத்தவரை விஷம்' என்று எதிராளி திரும்பத் திரும்ப சிலுவையில் அறைகிற போதெல்லாம், இதய வலியை கண்களின் வழியே வழிய விடுகிற விக்ரம், சுரேஷ் என்கிற பொறுமைசாலி இளைஞனாய் பளிச்சிடுகிறார்.

படத்தின் நாயகன் விக்ரமா இல்லை பிரகாஷ் ராஜா என்ற அழுத்தமான சந்தேகம் எழுகிற அளவிற்கு, வெளிப்பார்வைக்கு முட்களும், உள்ளே இனிய சுளைகளும் நிறைந்த லோப்பலா போல, கலவையான உணர்ச்சிகளை அநாயாசமாக வெளிப்படுத்தும் சிதம்பரம் பாத்திரத்தில் பிரகாஷ் ராஜ் பொருத்தமென்றால், அப்படியொரு பொருத்தம். கிளாமரும் உண்டு. 'கிளவரா'ன நடிப்பும் உண்டு என்று புருவம் உயர்த்த வைக்கிற பிரியங்கா திரிவேதி, தமிழில் ஒரு ரவுண்ட் வருவதற்கான சாத்தியக் கூறுகள் அதிகம்.

பின்னணி இசையைத் தவிர பாடல்களோ வரிகளோ மனத்தில் நிற்கவில்லை என்றாலும், காந்தமாய் ஈர்க்கிற வசனமும், இயக்கமும் இறுதிவரை நம்மை இருக்கையிலேயே ஆணி அடித்து இறுத்தி விடுகின்றன.

- விஷுவல்தாசன்

● அபவ் ஆவரெஜ்

"டிராவிட்கிட்டே கேளுங்க!"

• விஜேதா



களை கட்டியிருக்கிறது நாக்பூர் நகரம்! ஏதோ பிக்னிக் போவது போல அங்கிருக்கும் ராகுல் டிராவிட்டின் மாமனார் வீட்டுக்கு விஸிட் அடிக்கிறார் களாம் ரசிகர்கள்!

"தினமும் நிறையப் பேர் வீட்டுக்கு வந்துடறாங்க. 'நாங்க ட்ராவிட் ரசிகர் கள். பொண்ணைப் பார்க்கணும்'னு சொல்றாங்க. கேட்லயே பாதிப் பேரை சமாளிச்சு அனுப்பிடறோம். என்ன சொன்னாலும் சில பேர் ட்ராயிங் ஹால் வரை வந்திடறாங்க. ரொம்ப தொந் தரவா இருக்கு" என்கிறார் டிராவிட்டின் மாமனாராகப் போகும் பென்டார்கர்.

"எங்களுக்குப் பப்ளிசிட்டி தேவை யில்லை. கல்யாணத்துக்கே வேண்டிய வங்களை மட்டுந்தான் அழைக்கப் போறோம். கண்டிப்பா இந்திய கிரிக் கெட் அணி நட்சத்திரங்கள் கலந்துப் பாங்க. மகாராஷ்ட்ர முறைப்படிக் கல்யா ணம் நடக்கும். மீடியாக்கள், ரசிகர்கள் தொந்தரவால என் மகள் விஜேதா ரொம்ப டிஸ்டர்ப் ஆகியிருக்கா. வழக் கமா நாய்க்குட்டியோட அவ போற வாக் கூட இப்ப தடைப்பட்டுப் போச்சு. கல்யாணம் பற்றி மீடியாக்கள் எங்ககிட்ட ரொம்ப கேள்வி கேட்குது. கல்யாணத்தை நடத்தப் போறது டிராவிட்தான். அவர் கிட்ட கேளுங் களேன்" என்று டென் ஷனாகிறார் பென்டார்கர்.




• டிராவிட்

கேமராவும் கையுமாக விஜேதாவை படமெடுக்க வரும் பத்திரிகை ஃபோட்டோ கிராபர்களுக்குத் தடைதான்! இந்தப் படம் கெஞ்சிக் கூத்தாடி ஆல்பத்திலிருந்து உருவியது?!

நன்றி: 'ஹிந்துஸ்தான் டைம்ஸ்'

— ஏக்ஜி



''என்னய்யா இது, இங்க அரசு அலுவலகம் வரப் போகுதுன்னாங்களே!''

''அதுக்கென்ன செய்ய, காலேஜை இடிச்சுத் தோண்டினப்ப மாரியத்தா சிலை கிடைச்சுதாம்.''



இடியாமல் இருங்க!



''எல்லாப் போலீஸையும் விட்டுட்டு மாணவிகள், அந்தப் பெண் போலீஸை மட்டும் ஏன் துரோகின்றாங்க?''

''அவங்க இதே காலேஜில படிச்சவங்க.''



கார்ட்டூன்கள் : பிள்ளை



"இதென்ன புதுக்குழப்பம்?"

"இங்க முன்ன ஒரு காலத்தில் ஆண்கள் கல்லூரி இருந்ததா அகழ்வாராய்ச்சியிலே தெரிய வந்திருக்கு"

"காந்தி சிலையைச் சுத்தி ஏன் அளவெடுக்கறாங்க?"

"தலைமைச் செயலக ஊழியர்களுக்கு நல்ல கான்டீன் கட்டடம் இல்லையாம்"

குல்லூ



தமது 'தகப்பன் கொடி' - நாவலுக்காக தமிழக அரசின் விருதைப் பெற்றிருக்கிறார் எழுத்தாளர் அழகிய பெரியவன்.

"இன்னைக்குத் தலித்துகள் நிலமில்லாம கஷ்டப்படறாங்க. பஞ்சமி நிலங்கள் கூட அவங்ககிட்ட இல்லை. நிஜமாவே நில மற்ற வங்களாத்தான் தலித்துகள் இருந்தாங்களா? என்ற கேள்வி எனக்குள்ள எழுந்தது. இதற் கிடையில நான் சந்திச்ச எழுத்தாளர் ஒருவர், தலித்துகளிடம் நிலம் இருந்ததற் கான ஆதாரம் இருக்கிறதாகச் சொன்னார். அந்தத் தகவலின் அடிப்படையில என்னோட கேள்வியை ஆராய ஆரம்பிச்சேன். பஞ்சமி நிலங்களை மீட்ட தலித்துகளிடம் போய், பேசினேன். நிலத்துக்கும் மனு ஷனுக்குமான உறவு அருகி வர்ற இந்தக் காலத்துல, ஒரு தலித்துக்கும் நிலத்துக்கு மான உறவு என்னவா இருக்கும்னு நான் கேட்ட கேள்வியின் அடிப்படையில தான் 'தகப் பன் கொடி'யைப் படைச் சேன்" என்கிறார்.

தலித் நாவல் என்று இவர் குறிப்பிட்டாலும் ஒரு தனி மனித அனுபவத்திலிருந்து, இது எல்லோருக்குமான கதையாகத் தானிருக்கிறது!



• அழகிய பெரியவன்

''படைப்பாளர்களை அவமானப்படுத்துகிறது

"சொந்த வாழ்வனுபவங்களை எழுதற போதுதான் அந்தப் படைப்புல ஜீவன் இருக் கும். என் அனுபவம் இன்னொருத்தரு டைய அனுபவத்தோடு ஒத்துப் போவதா இருந்தா, அது படைப்புக்கான வெற்றியாகத் தான் சொல்வேன்'' என்கிற அழகிய பெரியவன் கடந்த பதினைந்து வருடங் களாக எழுதி வருகிறார்.

"நான் எழுத ஆரம்பித்ததற்கு மாமாதான் காரணம். அவர் குழந்தைகளுக்காக நிறைய எழுதியிருக்கார். அவருடைய சேகரிப்பி லிருந்த புத்தகங்கள்தான் என் வாசிப்பை அதிகப்படுத்தியது. நிறைய படிக்க ஆரம்பிச் சேன். இலக்கியம் பற்றிய எளிதான புரிதல் கிடைச்சுது. தொடர்ந்த வாசிப்புகள் என் அனுபவங்களையும் எழுதத் தூண்டிச்சு. படைக்க ஆரம்பிச்சேன்'' என்கிற இவரது சிறுகதைத் தொகுப்பு தீட்டு. பெண்ணிய பார்வையுடன் கூடிய அடித்தட்டு மக்களின் கதைகள் இத்தொகுப்பில் இடம் பெற்றிருக் கின்றன.

"நான் எப்படி எழுதுகிறேனோ அப் படியே வாழணும்னு நினைக்கிறேன். எழுத் தும் வாழ்க்கையும் என்னைப் பொறுத்த

வரை வேறு வேறா தெரியலை. பெரும்பாலும் அப்படித்தான். இன்றைக்கு நிறையப் பேர் மேலை இலக்கியம் படிச்சுட்டு அதைப் புரியாத நிலைல எழுதிட்டு வர்றாங்க. இதை நவீன இலக்கியம்னு சொல்லிக்கறாங்க. இவங்க மேற்கோள் காட்டற எந்தவொரு எழுத்தாளரா இருந்தாலும் சரி, அவங்க எதையும் ரொம்ப எளி



அரசு!"

மையாத்தான் சொல்லியிருக்காங்க. மிகச் சிறந்த இலக்கியங்கறது எளிமையான வாசிப்புத் தன்மையைக் கொண்டிருக்கறதுதான். அதிக பாராட்டைப் பெற்ற, பரிசு பெற்ற படைப்பு எதுவா இருந்தாலும் அது எளிமையான வாசிப்பனுபவத்தைத்தான் கொண்டிருக்கு. புரியக்கூடாதுன்னு எழுதுவது தங்களது அதிமேதாவித் தனத்தைக் காட்டணுங்கறதுக்காகக்கூட இருக்கலாம். ஆனா மக்கள் பாரம்பரியத்தைப் புறந்தள்ளி எழுதும் எந்த எழுத்தாளர்களும் நீண்ட காலம் நிற்க முடியாதுங்கறதுதான் உண்மை" என்று சொல்கிற அழகிய பெரியவன், இனி வரும் எழுத்துக்களில் தலித், மற்றும் பெண்ணிய படைப்புகள் மட்டுமே நம்பிக்கை தரக்கூடிய எழுத்தாக இருக்கும் என்கிறார்.

"தலித் படைப்புகள் மீது வைக்கப்படற விமர்சனங்களே இன்றைய தலித் படைப்புகளோட பெருக்கத்துக்கு முட்டுக்கட்டையா மறைமுகமா பங்காற்றுது. தலித் படைப்பாளிகளோட படைப்புகள், தலித் விமர்சகர்களைக் கொண்டே எதிர் விமர்சனம் செய்யற நிலைக்குத் தளம் அமைக்கப்பட்டிருக்கு. தர அளவுகோல்களை வச்சிருக்கற இலக்கியக் கண்காணிப்பாளர்கள், அளவுக்குப் பொருந்தாத தலித் கதைகளை இலக்கியமா ஏற்பதில்லை. ஆனா வேறொரு வகையில பார்த்தா, எவராலும் நிராகரிக்க முடியாத படியான நேர்த்தியும் ஆழமும் கொண்ட படைப்புகளை வழங்கும் நிலைக்குத் தலித் இலக்கியம் வந்து சேர்ந்திருக்குன்னுதான் சொல்வேன்."

" தர அளவுகோல்களை வச்சிருக்கிற இலக்கிய கண்காணிப்பாளர்கள் அளவுக்குப் பொருந்தாத தலித் கதைகளை இலக்கியமாக ஏற்பதில்லை! "



இதுவரையிலான தமது வாழ்பனுபவத்தை 'பயாகிராபி' மாதிரி எழுதத் தொடங்கியிருக்கும் அழகிய பெரியவனுக்குத் தமிழக அரசு மீது கடும் அதிருப்தி இருக்கிறது.

"இலவச தையல் மெஷின் கொடுப்பதற்கெல்லாம் பிரம்மாண்ட விழா நடத்தற தமிழக அரசு, படைப்பாளர்களுக்கான பரிசளிப்பை – பத்திரிகை செய்தி கூட இல்லாம – தேர்ந்தெடுக்கப்பட்ட படைப்பாளர்களுக்குத் தபால் மூலம் தெரிவிச்சிருக்கு. வாழும் சமூகத்தை, அதன் ஜீவனைப் பதிவு செய்கிற படைப்பாளர்களை அவமானப்படுத்துவதாகத்தான் இதைக் கருத முடியும்" என்று கொதிக்கும் இவர், தாற்காலிகமாக பேராணாம்பட்டு பெண்கள் பள்ளியில் பணிபுரிகிறார்.

– ஏக்நாத்

படங்கள்: சிவகுமார்

பெரிய குடும்பம்!

விண்வெளி வரலாற்றில் அதிமுக்கியமானது வரப் போகிற இரண்டாயிரத்துப் பத்தாம் ஆண்டு. இதற்குச் சரியாக நானூறு ஆண்டுகளுக்கு முன்னால், கி.பி. ஆயிரத்து அறுநூற்றிப் பத்தாம் ஆண்டில்தான் கலீலியோ கலீலி என்கிற இத்தாலிய வானியல் அறிஞர் நம்முடைய வியாழன் கோளின் நான்கு சந்திரன்களைக் கண்டறிந்து சொன்னார்.



இப்போது இந்த எண்ணிக்கை பதினாறு, முப்பது, நாற்பது என்று வளர்ந்து அண்மையில் நாற்பத்தேழு சந்திரன்கள் வியாழனைச் சுற்றி வருவதாய்க் கண்டறிந்திருக்கிறார்கள்.

ஹவாய் பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த டேவிட் ஜ்யூவிட் என்பவரும், கேம்பிரிட்ஜ் பல்கலையின் ஜன் லென்யா என்பவரும் இந்தக் கண்டுபிடிப்பை வெளியிட்டிருக்கிறார்கள்.

ஏழு புதிய சந்திரன்களைக் கண்டறிந்ததன் மூலம், வியாழன் எப்படி உருவானது என்பது பற்றியும், சந்திரன்கள் என்னும் துணைக் கோள்களை அது எப்படிக் கவர்ந்து இழுக்கிறது என்பதையும் புரிந்து கொள்ள முயல்வார்கள்.

சூரியக் குடும்பத்திலேயே மிகவும் பெரியதானது வியாழன்தான். நம்முடைய பூமியைப் போல் பதினோரு மடங்குக்கும் கூடுதலான விட்டமுடையது.

ஆனாலும், வியாழனின் மூன்று சந்திரன்கள்தான், நம்முடைய நிலவை விடவும் பெரியவை. அயோ, கானிமீட், கால்விஸ்டோ என்கிற இந்த மூன்று சந்திரன்களையும், நம்முடைய நிலவை விடச் சற்றே சிறியதான யூரோப்பாவையும்தாம் நானூறு ஆண்டுகளுக்கு முன்னால் கலீலியோ கண்டறிந்து சொன்னார். இன்றைக்கும் சிறிய தொலைநோக்கியின் மூலமோ பைனாக்குலர் மூலமோ நாம் பார்க்கக் கூடியவை இந்த நான்கு தான். கொஞ்சம் சக்தி வாய்ந்த கருவியானால், இன்னும் இரண்டைக் காணலாம். மற்றவற்றைக் காண வெகு நுட்பமான, திறனுள்ள பெரிய தொலைநோக்கிகள் வேண்டும்.

இப்போது கண்டறியப்பட்டுள்ள ஏழு புதிய சந்திரன்களின் அளவு மதிப்பிடப்படவில்லை. இரண்டு முதல் நான்கு கி.மீ. விட்டமுடையதாய் இருக்கலாம் என்கிறார்கள். இந்தப் புதிய கண்டுபிடிப்புக்கள் உலகின் மிகப் பெரியதான டிஜிடல் காமராக்களால் சாத்தியமாகியுள்ளன. சென்ற நூற்றாண்டின் பிற்பகுதியில் தொடங்கி இதுவரை முப்பது வியாழச் சந்திரன்களை ஹவாய்ப் பல்கலைக்கழகக் குழுவினர் கண்டறிந்துள்ளார்கள்.

மற்ற கோள்களில் காணப்படாத அற்புதக் காட்சியாக, வியாழனில் மட்டும் மிகப் பெரியதான நீள் வட்ட திலகம் மாதிரி, சிவப்பான ஒரு பகுதி உண்டு. இதை 'கிரேட் ரெட் ஸ்பாட்' என்கிறார்கள். அமெரிக்க 'நாஸா' நிறுவனம் அனுப்பிய வாயேஜர் விண்கலம், கால் நூற்றாண்டுக்கு முன்னால் இந்தத் திலகத்தைப் பல கோணங்களில் படம் எடுத்து அனுப்பி பிரமிக்க வைத்தது. அழகான மாடர்ன் ஓவியங்கள் போல் இருக்கின்றன இந்தப் படங்கள்!

படம் 'நாஸா'

- சுப்ர. பாலன்

அழுமூஞ்சி சீரியல்களில் கூட மணிகள் ஒலிப்பதுபோல கலகலவென்று இடைவிடாமல் வாயாடிக் கொண்டிருக்கும் டீ.வி நடிகை ரேணுகா, நிஜமாகவே மணிகளை உருட்டி விளையாடிக் கொண்டிருந்தார்! இருபத்தியோரு அங்குல டீ.வி பெட்டி அகலத்திற்குச் செவ்வகமாய் இருந்த சட்டத்தில் கோர்க்கப்பட்டிருந்த அத்தனையும் பிளாஸ்டிக் மணிகள்.

ரேணுகாவின் அருகில் ஐந்து முதல் பத்து வயது வரையிலான பதினைந்து குழந்தைகள். எல்லோர் கையிலும் இதே மணிச்சட்டங்கள். "என்னங்க இன்னிக்குச் சஹானா படப்பிடிப்பு இல்லியா, இவ்வளவு ஜாலியா விளையாடிட்டு இருக்கீங்க?" என்றால், "படப்பிடிப்பு பத்து மணிக்குத்தான். அதுக்கு முன்னாலே அபாகஸ் விளையாடிட்டு கிளம்பினாத்தான் மனசு உற்சாகமாக இருக்கு" என்கிறார்.

"அது என்ன அபாகஸ்?"

"அபாகஸ் என்றால் நம் ஊர் மணிச்சட்டம்தான் சீனாவில் அபாகஸ். சின்ன வயதில் கலர் கலராய் மணிகள் கொண்ட சிலேட்டுப் பலகையை வைத்துக்கொண்டு விளையாடியதைக் கொஞ்சம் நினைவு படுத்திப் பாருங்களேன். அதன் மேம்படுத்தப்பட்ட வடிவம்தான் அபாகஸ்."

இரண்டாயிரம், மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே அபாகஸ் பயன்பாட்டுக்கு வந்துவிட்டது என்கிறார்கள். கணக்குப் போடுவதற்காக முதன்முதலில் மனிதன் கல்லைப் பயன்படுத்தினான். அடுத்ததாகப் பயன்பட்டது இந்த மணிச் சட்டம்தான். சீனர்கள் கண்டுபிடித்ததால் சைனீஸ் கால்குலேட்டர் என்றும் இதை அழைக்கிறார்கள். சீனாவில் அபாகஸ் இல்லாத கடைகளே இல்லை எனலாம். இதைப் 'பிராஸ்பரிட்டி சைன்' என்றே சீன மக்கள் குறிப்பிடுகிறார்கள். அபாகஸை கடையில் வைத்திருப்பதன் மூலமும், அதை நன்றாகக் குலுக்குவதன் மூலமும் வாடிக்கையாளர்கள் அதிகம் வருவார்கள், லாபமும், பெருகும் என்பது சீன வாஸ்துவின் (ஃபெங் ச்சூ) அசைக்க முடியாத நம்பிக்கை" என்று அபாகஸ் பற்றி அரிச்சுவடி சொல்லித் தந்த ரேணுகாவுக்கும் இந்த அபாகஸ் மணிச் சட்டங்களுக்கும் என்ன சம்பந்தமாம்?

"ஏங்க... டீ.வி நடிகை வேறு உருப்படியான எந்தக் காரியத்தையும் பண்ணக் கூடாதா?" என்று செல்லமாய் கோபித்த படியே, "நானும் கணவரும் இணைந்து அலோஹா பள்ளியைத் தொடங்கியிருக்கோம்" என்றவரை இடைமறித்து "இருங்க... இருங்க... கொஞ்சம் முன்னால் அபாகஸ், இப்போ அலோஹாங்கறீங்க... என்ன குழப்பறீங்க?" என்றால் "இதில் குழப்பமே இல்லை. அபாகஸ் லேர்னிங்





ஆஃப் ஹையர் அரித்மெடிக் (ALOHA- ABACUS LEARNING OF HIGHER ARITHMETIC) என்பதன் சுருக்கம்தான் அலோஹா" என்று பொறுமையாக விளக்கம் தந்து விட்டு தொடர்ந்தார்.

"கணிதம் – பல புத்திசாலி மாணவர்களுக்குக் கூட வேப்பங்காய். இந்த வார்த்தையை ஐஸ்கிரீம் போல இனிப்பாக மாற்றித் தருகிறது இந்தப் பயிற்சி. தவிர வாழ்க்கை முழுமைக்கும் பயன்படக் கூடிய பல்வேறு திறன்களை, மாணவர்களிடத்தில் வளர்ப்பதுதான் அலோஹா பயிற்சியின் அடிப்படை. இந்தப் பயிற்சியைத்தான் இப்போது

இங்கே இறக்குமதி செய்திருக்கிறோம்'' என்கிறார்.

இறக்குமதி?

''வெளிநாடுகளில் குறிப்பாக மலேசியாவில் எங்களுக்கு நிறைய நண்பர்கள் உண்டு. ஒருமுறை மலேசியா சென்றிருந்தபோது, நண்பர்களின் குழந்தைகள், பள்ளிக்குச் சென்று வருவது மட்டுமின்றி, வேறொரு இடத்திற்கும் பயிற்சியையும் கொடுக்க அவர்கள் தயங்குவதேயில்லை.

அப்புறமென்ன! இந்தியாவில் அலோஹா பயிற்சி தரும் உரிமையைப் பெற்று வந்திருக்கிறோம்'' என்கிறார். இந்தப் பயிற்சிக்கென்றே ராஜா அண்ணாமலைபுரத்தில் கே.கே. அகாடமி பிரைவேட் லிமிடெட் என்ற நிறுவனத்தையும் தொடங்கியிருக்கிறார் ரேணுகா.



• ரேணுகா

போய் வருவதைக் கவனித்தோம். அது குறித்து விசாரித்தபோதுதான், அலோஹா பயிற்சி பற்றி எங்களுக்குத் தெரிய வந்தது. அது பற்றி அங்கே நாங்கள் சந்தித்த எல்லாப் பெற்றோர்களுமே உயர்வாகச் சொன்னார்கள். உடனே அலோஹாவை ஏன் நமது நாட்டுக்கு எடுத்துச் சொல்லக் கூடாது, என்று யோசித்தபோது எங்களுக்குத் தயக்கமே வரவில்லை. காரணம், தங்களது குழந்தைகளுக்கு மிகச் சிறந்த கல்வியை அளிக்க விரும்புகிறவர்கள் இந்திய பெற்றோர்கள். அது மட்டுமல்ல, கல்விக்குத் துணை புரியக் கூடிய எந்தப்

அலோஹாவைப் பயில வயது வரம்பு ஏதாவது உண்டா? என்றால் கண்டிப்பாக உண்டாம். ஐந்து முதல் பதிமூன்று வயது வரையிலான குழந்தைகளுக்கு மட்டுமே என்று கண்டிப்பாக வரையறுத்திருக்கிறார். அதற்கொரு முக்கிய காரணமிருக்கிறது. நான்கு முதல் பன்னிரண்டு வயது வரை உள்ள பருவம்தான் குழந்தையின் மூளை வளர்ச்சி தொடங்கி, நிறைவடையும் பருவம். இந்தப் பருவத்தில் கற்றுக் கொள்ளும் எந்த உத்தியும் அப்படியே நிரந்தரமாக கல்வெட்டைப் போல அவர்களுக்குள் பதிந்து விடும். பிறகு வாழ்நாள் முழுக்க அது



''என்னங்க... உங்க வீட்டு நாய்க் குட்டியின் வால் ரொம்பச் சின்னதா இருக்கு...?''

''வாலையடி வாலை'யா அப்படித்தான் இருக்குது!''

– நாமக்கல் பாலு

பயன்படும். பதினைந்து வயது எனில் குறிப்பிட்ட ஒரு முறையில் கணிதம் பயில பழக்கப்படுத்தப்பட்டிருப்பார்கள். அவர்களுக்குப் புதிதாக ஒன்றை அறிமுகப்படுத்துவது கடினம்'' என்கிறார் ரேணுகா.

''இந்தப் பயிற்சியை கற்றுக் கொள்வதால், பள்ளியில் சொல்லித் தரும் முறையோடு குழந்தைகளுக்குக் குழப்பத்தை உண்டு பண்ணி விடாதா?'' என்றால் நிச்சயமாக இல்லையாம். ''இந்தப் பயிற்சியில் மொத்தம் எட்டு நிலைகள். ஒவ்வொரு நிலைக்கும் மூன்று மாதங்கள் என்று மொத்தம் இருபத்து நான்கு மாதங்கள் பயிற்சி தருகிறோம். சனி அல்லது ஞாயிற்றுக் கிழமைகளில் இரண்டு மணி நேரம் மட்டும்தான் வகுப்பு. ஒவ்வொரு நிலை முடிந்த பிறகும் ஒரு தேர்வு உண்டு. அதில் தேர்ச்சி பெற்ற பிறகுதான் அடுத்த நிலைக்குத் தயார் படுத்துவோம். ஒவ்வொரு நிலையிலும் குழந்தைகளை கற்றுக் கொள்ளத் தூண்டும் சுவாரஸ்யமான சிலபஸ் வடிவமைக்கப்பட்டிருக்கிறது. கூட்டல், கழித்தல், பெருக்கல், வகுத்தல் எனத் தொடங்கி, ஒன்பதாவது மாதத்தில் அபாகஸைப் பயன்படுத்துவதை நிறுத்தி விடுகிறோம்.... இந்தக் கால கட்டத்திற்குள் குழந்தைகள் மனத்துக்குள்ளேயே அபாகஸை 'விஷுவலைஸ்' செய்து வைத்திருப்பார்கள். எனவே எவ்வளவு சிக்கலான கணக்குகளைக் கொடுத்தாலும் மனதுக்குள் மணிகளை நகர்த்தியே விடையை டக்கென்று சில நொடிகளுக்குள் சொல்லி விடுவார்கள். பயிற்சி ஆரம்பித்து ஒரு சில மாதங்களிலேயே குழந்தைகளின் திறனில் ஏற்பட்டிருக்கும் முன்னேற்றத்தை உணர முடியும். அலோஹாவின் மூலம் பள்ளிப் பாடங்களில் இன்னும் பிரகாசிக்க முடியும். காரணம், பொதுவாக நம்மில் பெரும்பாலானோர் வலது கைப்பழக்கம் உள்ளவர்கள் என்பதால், இடது பக்க மூளையைத்தான் அதிகமாகப் பயன்படுத்துகிறோம். ஆனால் அபாகஸை இரண்டு கைகளாலும் இயக்க வேண்டும். இதனால் குழந்தைகளின் இரு பக்க மூளையும் துடிப்பாக செயல்பட ஆரம்பிக்கும்'' என்று சொல்லும் ரேணுகா அலோஹா பயிற்சியை நாங்களே தொடங்கி நடத்துவது ஒருபுறம் இருக்க, வீட்டில் இருந்தபடியே இதை குழந்தைகளுக்குக் கற்றுத் தர விரும்பும் வேலையற்ற இளைஞர்களுக்கு வாய்ப்புக்களை வழங்கவும் தயாராக இருக்கிறோம்'' என்கிறார்.

விடைபெறும் முன் ரேணுகா சொன்னது: ''மலேசியர்கள், சீனர்கள், தமிழர்கள் என மூன்று இனத்தவர்கள் வாழும் மலேசியாவில் சீனர்கள், தமிழர்கள் மட்டும் படிப்பில் புலியாக இருப்பதைக் கவனித்திருக்கிறார் மலேசியப் பிரதமர். என்ன காரணம் என்று விசாரித்ததில், சீனர்களும் தமிழர்களும் மட்டும் தங்கள் குழந்தைகளை அலோஹா பயிற்சிக்கு அனுப்பி வருவது பிரதமருக்குத் தெரியவர , அந்தப் பயிற்சியை மலேசியாவிலுள்ள அனைத்துப் பள்ளிகளிலும் கண்டிப்பாக வழங்க வேண்டும், என்கிற அரசு உத்தரவையே பிறப்பித்து விட்டார் என்றால் அலோஹாவின் மகத்துவத்தைப் பாருங்கள்!''

- ஸ்ரீசக்கரம்

உ

விட்டல் நாம ப்ரசார ஸபா, ஆதம்பாக்கம், சென்னை 600 088.

பக்தர்களுக்கு வேண்டுகோள் !

சென்னை ஆதம்பாக்கத்தில் உள்ள சாந்தி நகரில் அமைந்துள்ள **ஸ்ரீ** கற்பக **விநாயகர்** ஆலய வளாகத்தில், **ஸ்ரீ** ரகுமாயி ஸமேதராக **ஸ்ரீ** பாண்டுரங்கன் ப்ரதிஷ்டையாகி பக்தர்களைப் பரிபாலிக்கத் திருவுள்ளம் கொண்டு, அதற்கேற்ப **ஸ்ரீ** பண்டரிநாதனுக்கு நூதன ஸன்னதி நிறுவும் திருப்பணி செவ்வனே நடைபெற்று வருகிறது. ஷை ஸந்நிதியில் ப்ரதிஷ்டையாக இருக்கும் மூலவர், பூலோக வைகுண்டமாகக் கருதப்படும் **பண்டரி க்ஷேத்ரத்திலிருந்து** தருவிக்கப்பட்டுள்ளது. திருப்பணியை திறம்படப் பூர்த்தி செய்ய மேலும் சுமார் ஏழு லட்சம் தேவைப்படுகிறது. **ஒரு சதுர அடிக்கு செலவாகும் ரூ.3000/–யை பக்தர்கள் ஏற்றுக்கொண்டும்,** பெயிண்ட், கிரானைட், மார்பிள் போன்ற கட்டுமானப் பொருட்களை உபயமாக அளித்தும் உதவும்படி பக்தர்களை அன்புடன் வேண்டுகிறோம். செக் / டிராப்ட் (“ஸ்ரீ விட்டோபா ப்ரதிஷ்டை திருப்பணி கமிட்டி” என்ற பெயரில்) அனுப்புவதற்கும், விபரங்கள் அறியவும், தயவு செய்து தொடர்பு கொள்க.

K.S. வாஸுதேவன் (044–22445193) நெ.1, தாமிரபரணி தெரு,
பாரத் நகர், ஆதம்பாக்கம், சென்னை – 600 088.

"5 வருட இடுப்பு வலியிலிருந்து ஆப்ரேஷன் இன்றி குணமடைந்தேன்!!!"



Lakshmi Iyer

ஸ்ரீமதி. லக்ஷ்மிஐயர்,
மேட்டூர்டேம் R.S.,
சேலம் மாவட்டம்.
தமிழ்நாடு.

கடந்த ஐந்து வருடங்களாக இடுப்பில் வலி இருந்து வந்தது. இதனால் குனிந்து நிமிரும் பொழுதும், சிறிது தூரம் நடக்கும் பொழுதும், உட்கார்ந்து எழுந்திருக்கும் பொழுதும், மாடிப்படி ஏறி இறங்கும்பொழுதும் , பிடிப்புடன் கூடிய வலி இருந்தது. ஆங்கில மருத்துவரிடம் சென்று **C.T. Scan** எடுத்துப் பார்த்த போது. இடுப்பில் கடைசி இரண்டு எலும்புகள் விலகி இருப்பதாக கூறினார்கள் **(L4, L5, DISC PROLAPSE)**இதற்கு சில மருந்துகளையும், இடுப்பில் போட்டு கொள்வதற்கு **Belt**-ம் எழுதிக் கொடுத்தார்கள். இருப்பினும் வலி திற்கவில்லை. பின்பு ஆப்ரேஷன் **(Operation)** செய்தால் குணமடையும் என்று கூறினார்கள் அப்பொழுது **"MARC HERBAL CARE(P)LTD."** நிறுவனத்தின் விளம்பரத்தை செய்தித்தாள்களில் கண்டு நானும் எனது கணவரும் அங்கு சென்றோம். டாக்டரின் ஆலோசனைபடி அவர்கள் கொடுத்த மூலிகை பவுல்டிசை (Poultice) வெளிப்பிரயோகமாக தினமும் தவறாமல் தடவி வந்தேன். 9 வார தொடர்ச்சியான சிகிச்சைக்குப் பிறகு தற்பொழுது எனது வலிகள் அனைத்தும் நீங்கி பரிபூரண நிவாரணம் அடைந்தேன். நன்றி.

★ காலம் காலமாக வேதமகரிஷிகள் சித்தர்கள் கண்டுபிடித்து பரிசோதித்து அனுபவப்பட்டு வெற்றிகண்ட ஆயுர்வேத மூலிகை மருத்துவமுறைப்படி எங்களது நிறுவனம் ஒரு வெளிப்பிரயோக மூலிகை பவுல்டிசை (Poultice) கொண்டு ஆர்த்திரைட்டீஸ், ஸ்பாண்டிலைட்டீஸ், தோள்பட்டை வலி, முதுகுவலி, குதிக்கால்வலி, கைகால் மூட்டுவலி ஆகியவைகளுக்கு தகுதிவாய்ந்த அனுபவம் மிக்க ஆயுர்வேத, சித்தா மற்றும் அலோபதி மருத்துவர்களின் மேற்பார்வைகளின் கீழ் சிகிச்சை அளித்து வருகிறோம்.

★ ஒரு வரைப்போல் மற்றொருவரது உடல்வன்மை இருப்பது இல்லை என்பது யாவரும் அறிந்த உண்மை எனவே கால மாற்ற விளைவுகளால் மனிதனின் உடல்வன்மையில் ஏற்படும் மாறுதல்களுக்கு ஏற்ப சிகிச்சையும் பலன்களும் வேறுபடலாம் என்பதை **MARC HERBAL CARE (P) LTD** நன்கு உணர்ந்துள்ளன.

கலந்து ஆலோசிக்க
இப்போதே
தொடர்பு கொள்க.
தொலைபேசி
0413 - 2346683

காலை 9 மணி முதல், இரவு 7 மணி வரை
வாரத்தில் 7 நாட்களும் திறந்திருக்கும்.

MARC ஹெர்பல் கேர் (பி) லிமிடெட்
32, செயின்ட் தெரெஸ் வீதி, பாண்டிச்சேரி – 1
(ராமன் தியேட்டர் எதிர் வீதி, ஃபார்ச்சூன் பேக்கரி எதிரில்)
Fax : 91 - 0413 - 346683


கிணற்றடி

மனத்தின் ஆழத்தில்
ஊறிக் கிடக்கும்
கிணற்றடிகள்.

பேருந்தில் பயணிக்கும் போதெல்லாம்
கிணற்றடி ஸ்டாப்பிங்காகவும்
கேணிப்பாலம் நிறுத்தமாகவும்
காதுகளில் இப்போது -

பைப்படிகள் வந்ததால்
பயனற்றுப் போனக்
கிணற்றடிகள்
போஸ்டர் ஒட்டவும்
உட்கார்ந்து பேசவும்.

சிவராஜ்



கீபோர்டும் இன்னபிற வாத்தியக் கருவிகளும் குழப்பமான ஒலிகளை இறைத்துக் கொண்டிருந்த அந்த ரிக்கார்டிங் தியேட்டர், "கோயிந்தன் சார் வந்தாச்சு" என்று குரல் ஒலித்ததும் அமைதியானது. டைரக்டர் தங்கராஜ் வெளியே வந்து, வாசலில் நின்ற கறுப்பு ஹோண்டா காரை சிரிப்போடு அணுகினார். உள்ளிருந்து தயாரிப்பாளர் கோவிந்தன், முதலில் தான் இறங்கிக் கொண்டு, தன் தொப்பையை உடன் இறக்கி "என்னயா எல்லாரும் வண்டாங்களா!" என்று பதிலுக்குக் காத்திராமல் நடந்தார். ரிக்கார்டிங் தியேட்டரின் உள்ளே இருந்த பெரிய சோபாவில் ஆயாசமாய்ச் சாய்ந்தார். அவரது சமீபத்திய படம் ஒன்று மண்ணைக் கவ்வியதில் புன்னகை கொஞ்சம் மறந்திருந்தார்.

"என்ன டல்லா இருக்கீங்க!" தங்கராஜ் ஆரம்பித்தார்.

"பச்... 'என்னை பெத்தா ஆத்தா' காலி. (அவர் படம்!) ஒரே மாசத்துல பொட்டி திரும்பிடுச்சு. முழுசா ஒரு ரூபா போச்சு. கோவிந்தன் படம்னா, படம் எப்படி இருந்தாலும் பாட்டெல்லாம் சூப்பரா இருக்கும்னு பேரு இருந்தது. இந்தப் படத்துல அந்த இமேஜ் அடி வாங்கிருச்சு."

"சரி கட்டிடலாம் சார். அதுக்குதான் இந்தத் தடவை எல்லாம் புது செட்டப்பா வச்சிருக்கோம்."

"மியூசிக் டைரக்டர் எங்க?"

தங்கராஜ், அறிமுகத்துக்குக் காத்திருந்த இளைஞரைக் கூப்பிட்டார். "இதோ இவரு தாங்க. பிரான்சு பிரபு. நல்ல கிடாரிஸ்ட். கீபோர்ட்ல விளையாடுவாரு. டேலண்டட் ஆர்டிஸ்ட். ஃபிலிம் மியூசிக் டெக்னிக்கெல்லாம் கரைச்சுக் குடிச்சிருக்காரு."

பிரான்சு பிரபு என்று அறிமுகம் செய்யப்பட்ட அந்த நபர் கோவிந்தனை அணுகி அருகில் அமர்ந்து வணக்கம் சொல்லக் குனிந்ததில், அவர் நெஞ்சளவு கூந்தல் சரிந்து வந்து அவர் முகத்தை மறைத்தது. கூந்தலைத் தள்ளி தன் முகத்தை கோவிந்தனுக்குக் காட்டினார்.

"என்னப்பா தோள் வரை முடி, அதுல வளையம் வளையமா மாட்டிகிட்டு, காதுல வேற வளையம். தலைக்கு என்ன கலரா அடிச்சிருக்கு? ஜிப்பா, ஜீன்சு, என்னயா வேஷம் இது?"

"தப்பா நினைக்காதிங்க. சாதாரண ஹேர் கட் பண்ணி ஒழுங்கா டிரஸ் பண்ணிகிட்டு

• ஆனந்த் ராகவ்

காதுவளையமும், மக்கன்வாலாவும்



இருந்தா மியூசிக் டைரக்டர்னு யாரும் ஒத்துக்க மாட்டேன்றாங்க சார். அதான்."

"பேர் என்ன சொன்ன? பிராங்க பிரபுவா? பிரான்கல போய் மியூசிக் படிச் சிங்க போல..."

"இல்ல சார். போன வருசம் பிராங்க போயிட்டு வந்தேன். அது ஞாபகமா வச்சு கிட்டேன்."

"சரி. கேட்டுக்க பிராங்க. தங்கராஜு சொல்லியிருப்பாரு. போன படத்துல சரியாவே அமையல ஒரு பாட்டும். இந்தத் தடவை அதான் சிட்டி சப் ஜெக்ட். காலேஜ் பசங்க, ஹாஸ்டல், லவ் ட்ரையாங்கிள்னு சூப்பர் யூத் சப்ஜெக்ட். ஆறு பாட்டு. பாட்டெல்லாம் சூப்பரா இருக் கணும். புதுசு புதுசா சவுண்ட் வேணும். ஆட்டத்துல தியேட்டர் கிழியணும்..."

"அமக்களப்படுத்திடலாம் சார்!"

"ட்யூனெல்லாம் ப்ளே பண்ணச் சொல்லு கேப்பம்."

"வெறும் ட்யூன் வேணாம், ஃபுல் சாங்கே பாத்துடலாம் சார். புல் சாங் கேட்டாதான் ஐடியா கெடைக்கும்."

"வேணாம், ட்யூனை போடுப்பா முதல்ல கேப்பம்."

பிராங்க. கொஞ்சம் தயக்கத்துடன், தயாராய் வைத்திருந்த கேசட்டைப் போட ஒவ்வொரு மெட்டாய் வரிசையாய் ஒலித்தது. கோவிந்தன் கண்ணை மூடிக் கொண்டு சலனமில்லாமல் கேட்டுக் கொண்டிருக்க, பிராங்க அவர் முகத்தில் எதிரொலி தேடி னார். அவர் முகத்தில் உற்சாகம் குன்றி யிருந்தது. உதட்டைப் பிதுக்கியபடி தலையை அசைத்தார்.

"அவ்வளவு சுகமில்லே பிராங்க."

"இன்னொரு தடவை கேளுங்க சார்" என்றார் தங்கராஜ்.

"இல்ல தங்கராஜ், எனக்கு ஒரு தடவை கேட்டா போதும். எனக்கென்னமோ எல்லா ட்யூனும் ஒரே போலத்தான் கேக்குது."

"ட்யூன் ஒரே மாதிரி இருந்தாலும் ஃபுல் மியூசிக்கும் போட்டு கேட்டா, பாட்டு கம்ப்ளீட்டா மாறிடும் சார்."

"ட்யூன் வேற, பாட்டு வேறயா?"

"ட்யூன் யாருக்கு சார் வேணும். ரிதம்.. பீட்டு.. அது தான் இப்ப ட்ரெண்ட்.. அது தவிர சில ஸ்பெஷல் எபெக்ட் டெக்னிக்ஸ் வச்சுப் பாட்டையே மாத்திடுவேன்."

"பாட்டுக்கு ஸ்பெஷல் எபெக்ட்?"

"முதல் பாட்டு ட்யூன் இருக்குல்ல. பாருங்க கெட்டப் ஏத்தறேன். தமிழ்ல ஏதாவது கம்ப ராமாயணம், புறநானூறு மாதிரி செய்யுள் நாலு வரி எடுத்துப்பம். இல்லன்னா சுலோகம். அதன் அர்த்தம் தெரியவாணாம். பாட்டுக்கும் அந்தச் செய்யுளுக்கும் சம்பந்தமும் இருக்கவேணாம். சீனிவாசன்.. அந்தச் சுலோகம் சொல்லுயா.."

"சுக்லாம் பரதரம் விஷ்ணும்..." என்று அறையின் மூலையிலிருந்து வெட்கத்துடன் சன்னமாய் ஒலித்தது.

"கேட்டீங்கல்ல. இப்ப இதை வச்சு ஒரு ஸ்பெஷல் எபெக்ட் பண்றன் பாருங்க. ஒரு பதினைந்து கோரஸ் சிங்கர்ஸ் வச்சிப்பேன். ஐந்து பேரை இந்த ஸ்லோகத்தை ஹை பிச்சுல, ஐந்து பேரை லோ பிச்சுல, மிச்ச ஐந்து பேரை கட்டைக் குரல்ல வாய்பாடு மாதிரி ஒரே நேரத்தில பாடவைப்பேன். அதுல ஒரு சூப்பர் எபெக்ட் கிடைக்கும். வெஸ்டர்ன் சிம்பொனி, கர்நாடிக் ஆலாபனை, நாட்டுப் பாடல் மூணையும் கலந்த மாதிரி ஒரு யுனீக் டச் கிடைக்கும். கேளுங்க.. சீனிவாசன் அந்த ட்ரேக் போடுங்க."

ஸ்டீரியோவில் விஷ்ணு சகஸ்ரநாமம் விநோத ஸ்வரத்தில் குழப்பக் கோரசாக ஒலிக்க, கோவிந்தன் சுவாரஸ்யமாய் கேட்டார்.

"இது முடிஞ்சதும் ஒரு பத்து செகண்ட் சைலன்ஸ். அப்புறம் இந்த பீட்" என்று கீ போர்டைத் தட்டினார். "தடாங்கு தங் தடாங்கு தங்" என்று தாளத்தில் தியேட்டர் அதிர்ந்தது. "இது பாட்டு முடியற வரை கூட்ஸ் ரயில் மாதிரி போய்கிட்டே இருக்கும்."

"கொஞ்சம் சப்தமா இருக்கு பிரான்சு" என்றார் கோவிந்தன், தன்னிச்சையாய் காதைப் பொத்தியபடி.

"காரணம் இருக்கு சார். அப்பால சொல்றன். அப்புறம் பாருங்க" என்று சின்னதாய் கீ போர்டில் ஒரு புல்லாங்குழலால் பீடிகை போட்டார். இந்தக் கெட்டப்புக்கு அப்புறம் தான் பாட்டு. நடுநடுல இது வரும். பாட்டு முடியறப்ப மறுபடி "சுக்லா பரதம், விஷ்ணும்" வரும். முதல் ட்யூனோட இதெல்லாம் சேத்து வச்சு கேளுங்க இப்ப பாட்டே மாறிடும்."

பிரான்சு மறுபடி அத்தனையும் கலந்து இசைக்க, கோவிந்தன் புன்னகைத்தார். "ஆமா பாட்டே மாறிடிச்சு" என்றார்.

"இரண்டாவது பாட்டுக்கு வேற ராகம் வச்சிருக்கேன். அமெரிக்கன் டாப் டென் பாட்டு ஒண்ணு "கெட்சப் சாங்"னு செம பீட்டு. அந்த ட்யூனை எடுத்துப்பம். ஒரிஜனல் பாட்டையும் நடுவுல கலந்து அடிப்போம். கேளுங்க..."

"....."

"என்ன பாஷை இது?"

"யாருக்குத் தெரியும் சார். ஸ்பானிஷோ என்னமோ?"

"ஏதாவது கெட்ட வார்த்தையா இருக்கப் போவுதுய்யா. இந்த வெள்ளகாரனுங்களுக்கு வெவஸ்தயே கிடையாது."

"அமெரிக்கால ராப்னு ஒரு வகை. ஆபீஸ் போற அவசரத்துல, பொண்டாட்டி கிட்ட பேசறமாதிரி ஒரு பாட்டு டெக்னிக் வச்சிருக்காங்க. அது மாதிரி ஒரு சாங். கேளுங்க" என்று கீ போர்டை தட்டிவிட்டு அது ஒரு கூட்ஸ் வண்டி தாளம் போட, கூடவே ஒரு பாடலைப் பாடினார்.

"... இது தனிப்பாட்டா?"

"இல்லீங்க. காதல் பிரிவுல ஹீரோயின் பாடற பேதாஸ் சாங் இருக்குல்ல, அதுல ஊடால ஊடால இந்த சாங் வரும் சோகமா ஒரு பல்லவில. நடுல ராப். சோகமா ஒரு சரணம். நடுவில ராப்... மாறி மாறி கேட்டுப் பாருங்க சூப்பர் எபெக்ட்..." என்று இசைத்துக் காட்டினார்.

"ஆமா... சிங்கர்ஸ் யாரு?"

"அதித் மஹாபாத்ரா பாடினா சூப்பரா இருக்கும். ஒரிசால பெரிய சிங்கர் ... இப்ப தான் தமிழ்ல பாட வந்திருக்காரு..."

"ஆபீஸ் போனா எனக்கு ஒரே டென்ஷன்தான்..."

"ஏன்... அவ்வளவு வேலையா?"

"இல்லே, கொடுத்த கடனை பியூன் திருப்பிக் கேட்டு நச்சரிக்கிறான்!"

- மலர் சூர்யா



"ஓ... சக்ரவர்த்தி மியூசிக்ல ஒரு பாட்டு பாடினாரே அவரா?" என் பெரியம்மா பெண்ணை நான் காதலிக்கிறேன்..."

"அவருதான். அது பெரியம்மா பொண்ணு இல்ல சார்... என் பிரியமான பெண்ணை சார்."

"நான், கவிஞர் தான் ஏதோ புதுசா எழுதினார்னு நினைச்சிகிட்டு இருக்கேன். சரி அந்தாளு ஒரியா பாட்டு பாடறவங்கற..."

"அவரு பாடினாதான் பாட்டு எடுக்கும் சார். அவரு தமிழ் பாடறதே ஒரு கிக். ஒரே தமிழ் வார்த்தையை விதவிதமா உச்சரிச்சுப் பாடறாரு. தமிழ் தெரிஞ்ச பாடகர்களால முடியுமா சொல்லுங்க! யெங்ஸ்டர்ஸ் ரொம்ப லைக் பண்றாங்க. டமில் சிங்கர்ஸ் யாரும் வேணாம். அதித் மஹாபாத்ரா, முக்கேஷ் மக்கன்வாலா, கீதா மட்கோன்கர்.. கணேஷ் மைக்கல்..."

"கணேஷ் மைக்கலு... மெட்ராசு ஆளேச்சே..."

"பரவால்ல சார். அவரு கான்வென்ட்ல படிச்சவரு. தமிழ் தெரியாது. அவரு பாட றார்னு தெரிஞ்சா போதும். மிச்சத்தை மியூசிக்னால அட்ஜஸ்ட் பண்ணிக்கலாம். அந்த டிரம் பீட்டு கொஞ்சம் சப்தமா இருக்குன்னு சொன்னீங்க பாருங்க, அது இதுக்குதான்."

"தங்கராஜி, கவிஞரை அப்படியே கூப்டு கிட்டு வந்திருந்தா புல் சாங்கும் பாத் திருக்கலாம் போலிருக்கே..."

"கவலைப்படாதீங்க. கவிஞர் வேணாம். நானே போட்டுக் காமிக்கறேன்.. அந்த மூணாவது பாட்டு ஒரு ஃபாஸ்ட் ட்ரேக்... டூயட் இல்லியா. அதுக்கு இந்தப் பாட்டு வச்சிக்கலாம். கேளுங்க.. என்று கீ போர்டை அணைத்துக் கொண்டு கண்கள் சொருகி ஒரு கையால் சொடுக்கிக் கொண்டே பாடினார்.

பாலு
அ...பலம்
க்..க்க்க்க்..க கைல ஏந்தி
பவல லிப்ஸ் ல
ஏய்... ஸ்மைலு சிந்தி..
கோல மயிலு மாத்ரி நீ வர்வ
க்க்க்க..க.. கொஞ்சம் கிளியே சைலண்டா கொல்வாயே"

"சூப்பரு பிரான்சு. நீயே எழுதினியா"

"ஏம்பா இந்த வரியை எங்கியோ கேட்ட மாதிரி இருக்கு.." என்றார் தங்கராஜ் தாடியைச் சொறிந்து கொண்டே...

"பழைய பாட்டு. யார்துன்னு ஞாபகம் இல்ல. இது பேரு 'ரீ மிக்ஸ்'. இதுதான் இப்ப அமெரிக்கால லேட்டஸ்ட். புதுசா பாட்டு எழுதி எழுதி பேஜாராப் போய், இப்பல்லாம் புதுசா பாட்டே எழுதறதில்லே. பழைய பாட்டு ஒண்ணை எடுத்து லிரிக்ஸ் மட்டும் பீறாஞ்சிகிட்டு. டரம் பீட்டை கொஞ்சம் ஜாஸ்தியாக்கி, சுருதி ஒன்று ஏத்தி, கொஞ்சம் புது இன்ஸ்ட்ருமெண்ட்ஸ் எல்லம் போட்டா கெட்டப்பு மாறிடும். அந்த பழைய சாங் கொஞ்சம் ஸ்லோ. அதை ப்ரேக் டான்சுக்கு ஏத்தமாதிரி மாத்திக்கலாம். முதல் தடவை கேக்கறப்ப கஷ்டமாயிருக்கும். போகப் போக பழகிடும். ஒரு தடவை எல்லாத்தையும் கேட்டுப் பாருங்க."

பிரான்சு எல்லாவற்றையும் இசைக்க ரிக்கார்டிங் தியேட்டர் கலகலத்தது. பிரான்சின் திரை இசை இலக்கியம் புரிந்து போன சந்தோஷத்தில் காலைத் தட்டிக் கொண்டே சந்தோஷமாய் பாடல்களைக் கேட்டார் கோவிந்தன்.

பாட்டு முடிந்ததும் எழுந்து மெலிதாய் கைத்தட்டினார். "பிரான்சு ஆறு பாட்டை யும் கம்போஸ் பண்ணு. ரிக்கார்டிங்க எவ்வளவு சீக்கிரமா முடியுமோ அவ்வளவு சீக்கிரமா செஞ்சி கேசட்டை ரிலீஸ் பண்ணு வம். தங்கராஜி, வாங்க பேசிகிட்டே போலாம்" என்று பிரான்சை முதுகில் தட்டிக் கொடுத்துவிட்டு உற்சாகமாய் கிளம்பிப் போனார்.

வழிநெடுக காரில் பிரான்சைப் பத்தி சிலாகித்துக் கொண்டே போனார். "தங்க ராஜு புடிச்சாலும் புடிச்ச செம்ம ஆளா புடிச்சிருக்கயா... இண்டஸ்டிரியையே கலக்க போறான்யா பய!"

தங்கராஜ், "அந்த வரி யார் எழுதிய துன்னு ஞாபகம் வர மாட்டங்குதே" என்று யோசித்துக் கொண்டே வந்தார்.



"சரியான தண்ணீர் கஷ்டமாச்சே, தொடர்ந்து எப்படி மீன் பண்ணை நடத்தறீங்க...?"

"ஸிம்பிள். மீன் பண்ணையைத் தாற்காலிகமா கருவாடு பண்ணையா மாத்திட்டேன்!"

- ஜி. வினோத்



புக்பேங்க்

இனிப்புக்குள் திராவகம்!

கதைகள் படிப்பதை மகிழ்ச்சிக்குரிய செயலாக ஆக்குகிற எழுத்து பாஸ்கர் சக்தியுடையது. பதினைந்து கதைகளடங்கிய இத் தொகுப்பில் மூன்றைத் தவிர, பிற யாவும் தேனி, பெரிய குளம், தென்மதுரை ஜில்லாக்காரர்களைக் கதைமாந்தராய்க் கொண்டவை.

தலைப்புக் கதையும் தத்துவக் கதையுமாகிய 'பழுப்பு நிறப் புகைப்பட'த்துக்கு அட்டை வடிவமைப்பு கச்சிதம். நகைச்சுவைத் தொனியுடன் ஓடுகிற கதைகள் முடிவில் சோகத்தை அடைகிறபோது சோகம் கனரக அழுத்தத்தை அடைந்து விடுகிறது. கனவுகள் மிகுந்த சம்சாரிகளுக்குப் பிறந்த தறுதலைகளை வர்ணிப்பதில் பாஸ்கர் சக்தி சமர்த்தர் என்பதை வீராச்சாமி (பி.காம்), செண்பகப் பாண்டியன் (காதல்கள்) ஆகியோர் தென்படும் கதைகளால் அறியலாம்.

இனிப்புத் திராவகம், தக்ளி ஆகிய கதைகளில் தொழில் மற்றும் வரலாறு பற்றிய பதிவுகளில் அவரது கவனமும் சிரத்தையும் தனித்துத் தெரிகிறது.

சமகால அரசியல் மற்றும் சுற்றுச் சூழல் பற்றிய உள்ளுறை விமரிசனமாக, தீர்த்த யாத்திரை, கட்சிக்காரன், அரசனின் மரணம், வேலப்பர் மலை ஆகியன விளங்குகின்றன.

சுற்றுச்சூழல் சித்திரமும் சமூக மணங்களில் குழுமிய விகாரங்களின் சித்திரிப்பும் இரண்டறக் கலக்கும் இவரது திறமையை 'விரியன் பாம்புக் குட்டிகள்' கதையில் காணலாம்.

எழுத்தின் சிரமம் தராத சரளம், 'ஆழமற்ற எழுத்து' என்கிற மயக்கத்தைப் பலருக்குத் தரக்கூடும்.

ஆனால் இவரது எழுத்து, அதன் சமகாலத் தன்மை கருதி, கணக்கில் கொள்ள வேண்டிய ஒன்று. ரேஷன் கார்டாய்த் தொலைந்து, மினரல் வாட்டராய்த் தொங்கி, லட்சுமணனின் காலில் முடிச்சிட்டுக் கொண்டு மிதக்கும் சோகம் பற்றியும், தேசத்தின் நசிவு பற்றியும் சிரித்துக் கொண்டே சொல்கிற கதைகள் இவை.

இதில் ஒரு டஜன் கதைகள் முதல் பக்கத்திலேயே நகைச்சுவைக்கான சாத்தியத்தைத் தேடி வைத்துக் கொண்டே தொடங்கித் தொடர்பவை. இத்தன்மையால் சில போழ்து, சிறு சிக்கல் நேர்கிறது. கதைகளின் முடிவோ அல்லது மையச் சரடான கருவோ – மற்ற திரவங்களிடை கிடந்து ஒட்டாது உருளும் பாதரசம் போல – தனித்துத் தெரிவதுதான் அந்தச் சிக்கல். இந்த நோய் தீர்க்கக் கூடியதே. மற்றபடி எட்டாண்டு எழுத்துழைப்பில் உருவாகி வெளியான இந்தச் 'சாதனம்' பொழுதுபோக்க மட்டுமின்றி சில(ரது) அறியாமைகளைப் போக்கவும் உதவக் கூடியதே.

– க.சீ. சிவகுமார்

புத்துணர்ச்சி + புத்தொளி!

வை.கோ. வழக்கு குளறுபடிகள் படித்தேன். மத்தியில் ஆளும் பா.ஜ.க.வுக்கு ம.தி.மு.க. ஆதரவு தேவை. தமிழகத்தில் பா.ஜ.க.வுக்கு ஆளும் அ.தி.மு.க. ஆதரவு தேவை. எனவே இருதலைக் கொள்ளி எறும்பாக பா.ஜ.க. இருப்பதால் பொடா சட்டத்தில் கைது செய்யப்பட்ட வை.கோ.வை மத்திய அரசால் விடுவிக்கவும் முடியவில்லை. விடுவிக்காமல் இருக்கவும் முடியவில்லை.

லால்குடி, இராஜேந்திரன்



சிம்ரனின் பேட்டி அருமை. திரையுலகில் அவரது அனுபவமும், தேர்ச்சியும் பேட்டியில் முழுமையாகப் பிரதிபலித்தன.

திருப்பரங்குன்றம், டி.கே. சுப்பிரமணியன்

'ஏட்டிக்குப் போட்டி' பட்டிமன்ற கருத்துக்கள் பிரமாதமாக இருந்தன. பெரியார்தாசனின் தீர்ப்பு விலை மதிக்க முடியாதது.

சென்னை, சீனிவாசன்

'வி.எச்.பி.யின் விபரீதத் திட்டம்!' தலையங்கம் படித்தேன். நீங்களும் கரடியாய் கத்திக் கொண்டு தான் (எழுதிக் கொண்டு) இருக்கிறீர்கள். இந்த வாஜ்பாய் காது கொடுத்துக் கேட்டால் தானே! வி.எச்.பி.யும், ஆர்.எஸ்.எஸ்.ஸும் வாஜ்பாயின் இரு கண்கள் மாதிரி சார். அவ்வியக்கங்கள் குறித்து யார் என்ன சொன்னாலும் அது செவிடன் காதில் ஊதிய சங்கு மாதிரிதான்.

மொரட்டுப்பாளையம், இரா.வி.சௌந்தர்யா

'இந்த நூற்றாண்டில் இந்து மதம்' என்ற டாக்டர் சுதா சேஷய்யனின் ஆன்மிகத் தொடர் காலத்திற்கேற்ற ஒன்று. இனி வரும் இதழ்களில் நசிந்து வரும் மனித நேயம் தழைக்கவும், சமய சகிப்புத் தன்மை பெருகவும் நாட்டின் அனைத்து மக்களும் ஒருவரையொருவர் ஆழமாகப் புரிந்து கொள்ளவும் இத் தொடர் பெரிதும் உதவும் என்று நம்புகிறேன்.

எலந்தங்குடி, கா.மு.ஜக்கரியா

புது வருடம் பிறக்கும் முன்னரே புதுப்புது விஷயங்களுடன் புத்தம் புது சிறப்பிதழாக கல்கியை எங்கள் கரங்களில் தவழச் செய்து 'புத்துணர்ச்சி + புத்தொளியை' ஊட்டி விட்டீர்கள்.

நெய்வேலி, எஸ்.கண்ணன்



'மனசெல்லாம்' விமர்சனம் புதுசு. படத்தில் பல புது மேட்டர்கள் இருந்தும் 'ஆவரெஜ்' மார்க் பழசு!

திருவாரூர், எஸ்.பாலச்சந்தர்

''தமிழ் இலக்கிய மகா சமுத்திரமாக இருந்து மறைந்தவர் சமுத்திரம்; அவரது அறச் சீற்றம் அலைகளாகப் பொங்கியதை எழுத்துலகம் என்றும் மறவாது'' எனத் திருப்பூர் கிருஷ்ணன் எழுதியது எங்கள் நெஞ்சத்தை உருக வைத்துவிட்டது.

திருவண்ணாமலை, ஆர். ராமசாமி



இந்திய வீரர்களுக்கு டிமாண்ட்!

மழை விட்டும் தூவானம் விடவில்லை என்பது போல், கிரிக்கெட் உலகக் கோப்பைப் பந்தயம் ஒருவழியாக முடிவடைந்தாலும் அது குறித்த சுவாரஸ்யமான செய்திகள் தொடர்ந்து கொண்டுதான் உள்ளன.

இந்த உலகக் கோப்பை போட்டி 37 மில்லியன் டாலர் லாபத்தை சம்பாதித்துக் கொடுத்திருக்கிறது. தொலைக்காட்சி உரிமைகளை விற்றும், பிற ஸ்பான்சர்கள் மூலமாகவும் வந்த தொகை இதில் முக்கால்வாசி. மீதித் தொகை நுழைவுக் கட்டணத்தின் மூலம் வசூலானதாம்.

வெஸ்ட் இண்டீஸ் கிரிக்கெட் குழு கொஞ்சம் வருத்தப்பட்டுக் கொண்டிருக்கிறது. 2007ல் அடுத்த கிரிக்கெட் உலகக் கோப்பை அங்குதான் நடப்பதாக திட்டம். ஆனால் இதில் ஒரு சின்ன மாறுதலைச் செய்யலாமா, என்று யோசித்துக் கொண்டிருக்கிறது சர்வதேச கிரிக்கெட் குழு. 'சில பந்தயங்களை அமெரிக்காவில் நடத்தலாமே! அதுவும் டிஸ்னி வொர்ல்ட்டில் நடத்தினால் மேலும் சிறப்பாக இருக்குமே'. இப்படியெல்லாம் குழுவின் யோசனை தீவிரமாகச் செல்வதால்தான் அந்த வருத்தம்.

நியூஸிலாந்து அணியும் இங்கிலாந்து அணியும் ஜிம்பாப்வேயிலும், கென்யாவிலும் விளையாட மறுத்தது தெரியும். இதன் விளைவாக அவர்கள் இழந்தது பாயிண்டுகளை மட்டுமல்ல என்பது இப்போது தெரிய வந்திருக்கிறது. உலகக் கோப்பையில் கலந்து கொண்டதற்காக ஒவ்வொரு அணிக்கும் ஒன்பது மில்லியன் டாலர் கொடுக்க வேண்டும் என்று ஏற்பாடு. ஆனால் மேற்படி அணிகளுக்கு அளித்த தொகையில் தலா சுமார் மூன்று மில்லியன் டாலர் தொகையை அளிக்காமல் நிறுத்தி வைத்து விட்டது. சர்வதேச கிரிக்கெட் குழு. நாளைக்கே ஸ்பான்சர்கள் தங்களை நஷ்டஈடு கேட்டால் என்ன செய்வது என்ற பயத்தில்தான் இப்படியொரு நடவடிக்கை.

தென்னாப்பிரிக்காவில் நடைபெற்ற உலகக் கோப்பைப் பந்தயங்களில் பால் காண்டன் என்பவருக்கு முக்கிய பங்குண்டு. எந்தவித ஊழலும் நடைபெறாமல் மேற்பார்வையிட வேண்டிய பொறுப்பு, இவரைத் தலைவராகக் கொண்ட குழுவுக்கு அளிக்கப்பட்டிருந்தது. சமீபத்தில் அவர் விட்ட அறிக்கையில் "இந்த ஆண்டின் உலகக் கோப்பைப் பந்தயங்களில் எந்தவித மாட்ச் ஃபிக்ஸிங்கும் நடைபெறவில்லை" என்று அறிவித்திருக்கிறார்.


சில இந்திய வீரர்களுக்கு வேறு விதமாக டிமாண்ட் கூடியிருக்கிறது. ஸ்காட்லாந்து அணி, தங்கள் குழுவில் சேர்ந்து கொண்டு "இங்கிலீஷ் நேஷனல் லீக்" பந்தயங்களில் ஆடுமாறு ராகுல் டிராவிடுக்கு அழைப்பு விடுத்திருக்கிறது. ஜகீர் கானுக்கும் வார்விக்ஷையர் எனும் கவுண்டியிடமிருந்து இதே போன்ற அழைப்பு. அக்தர், ஷேன் வார்ன், ஷேன் பாண்ட் போன்றவர்கள் எல்லாம் இதுபோன்ற அழைப்புகளை கடந்த காலங்களில் ஏற்றுக் கொண்டார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

- குல்லூ

தீராத போராட்டம்!

பெங்களூரை நோக்கிச் சென்று கொண்டிருந்தது அந்தச் சரக்கு லாரி. நள்ளிரவு. பூந்தமல்லி தாண்டியதும் லாரியை ஓரங்கட்டிவிட்டு, கையேந்தி பவன் ஒன்றில் சாப்பிடப் போனார் டிரைவர். லாரிக்குக் காவலாக அங்கேயே இருந்தார் கிளீனர். சிறிது நேரத்தில் வந்தது ஒரு வேன். தட தடவென்று பயங்கர ஆயுதங்களுடன் சிலர் இறங்கினார்கள். கிளீனரைக் கத்தியைக் காட்டி மிரட்டி, கட்டிப் போட்டார்கள். தார்ப்பாலின் போட்டு, கட்டப்பட்டிருந்த சரக்கு மீது ஏறி, கத்தியால் கிழித்து, உள்ளே இருந்த அட்டைப் பெட்டிகளைக் கடகட வென்று வேனில் ஏற்றிக் கொண்டனர். கால்மணி நேரத்தில், லாரிக்குத் திரும்பிய டிரைவருக்கு,

• நரசிம்மன்





நடந்ததை அறிந்து அதிர்ச்சி. போலீஸ், புகார் என்று கதை தொடர்ந்தது.

“இது ஏதோ அபூர்வமாக நடக்கும் வழிப்பறி என நினைத்து விடாதீர்கள். நாங்கள் தினம் தினம் அனுபவித்துக் கொண்டு இருக்கும் பிரச்னைதான் இது” என்கிறார் நரசிம்மன். சென்னை சரக்கு லாரி சங்கத்தின் தலைவர்.

“கடந்த ஒரு வருடத்தில் மட்டும் எங்கள் சங்க உறுப்பினர்கள், பல்வேறு வழிப்பறிக் கொள்ளைகளில் பத்து கோடி ரூபாய் மதிப்புள்ள சரக்குகளைப் பறிகொடுத்திருக் கிறோம். போலீசில் புகார் கொடுப்பது என்பது எங்களைப் பொறுத்தவரை கட்டாயமான ஒரு சம்பிரதாயம். மற்றபடி, கொள்ளை போன சரக்கில் பாதி வந்தால் கூட, ஏதோ பண்ணின புண்ணியம்தான் காரணம்.

“சோப்பு, டால்கம் பவுடர், டி.வி., கம்ப்யூட்டர், துணிமணி என்று கன்ஸ்யூமர் ஐட்டங்கள்தான் அதிக அளவில் கொள்ளை போகின்றன. பாண்டிச்சேரியில் இரவு சரக்கை ஏற்றிக் கொண்டு புறப்பட்டால், விஷயத்தைத் தெரிந்து கொண்டு, துரத்திக் கொண்டு வந்து, தனிமையான இடத்தில் மடக்கி, கொள்ளையடித்துப் போகிறார்கள். கடந்த சில வருடங்களில் மிஷின் உதிரி பாகங்கள் (மதிப்பு பன்னிரண்டு லட்சம்) முகப்பவுடர் மதிப்பு ஏழெட்டு லட்சம்) சோப்பு (ஐம்பதாயிரம்) ஷாம்பு (இரண்டரை லட்சம்) என்று கொள்ளை போயிருக்கிறது. பல சமயங்களில் டிரைவர் மற்றும் கிளீனர்கள் பலத்த தாக்குதலுக்கு ஆளாகியிருக்கிறார்கள்.

“இதுபோன்ற வழிப்பறிகளில் ஈடுபடுவது, ஒரு சிலர் அடங்கிய கொள்ளைக் கூட்டங்கள்தான் என்பது போலீஸ் அனுமானம். வாடிக்கையாளர்கள், சரக்கு அனுப்பும் போது, அதை இன்சூர் செய்வதில்லை. லாரி கம்பெனிகள், வாடிக்கையாளர்களுக்காக இன்சூரன்ஸ் பிரிமியம் கட்ட முடியாது. ஆனால், சரக்கு கொள்ளை போனால், பொறுப்பேற்று நஷ்ட ஈடு தரவேண்டியுள்ளது. எனவே, மே மாதம் முதல் இன்சூர் செய்யப்படாத சரக்குகளை ஏற்றுவதில்லை என்று முடிவு எடுத்திருக்கிறோம்” என்கிறார் நரசிம்மன். பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி லாரி உரிமையாளர்கள் போராட்டம் நடத்திக் கொண்டிருக்க, இது தீராத போராட்டமாக இருக்கிறது என்கிறார் இவர்.

— மௌலி



சிதைவல்ல...

இரைகின்ற
கணங்களை அலட்சியப்படுத்தி
கண்ணாடி முன்
வடிவம் பார்த்து
விகசித்த விடலைத்தனம்
கனவாய்த் தான் தெரிகிறது.

வெயிலோ, மழையோ
கவலையின்றி
காற்றைக் கிழித்துக் கொண்டு
பைக்கில் பறந்த
வேகப் பயணங்கள்
நின்று போனது - இன்று
நாலு தெரு
திரும்புவதற்குள் கிளம்பும்
முதுகுவலியை முன்னிட்டு!

வேலைக்கான
வேட்டை நாயின்
நாக்குத் தொங்கலாய்
வாய்ப்புகளைத் தேடி தேடி
வளைய வந்தபோதே
காணாமல் போனது
கவிதை பேசிக்
களித்த பெரும்பொழுதுகள்!

பொட்டல் வெளியில்
உதிர்ந்த சருகாய்
அல்லாடும் வாழ்க்கையில்
அனைத்தும் சிதைந்ததாய்
அரற்றுகையில்
கண்ணாடி முன்
சிகை கோதும் தன்
மகனைக் கண்டு
அப்பா சொல்கிறார்
இது சிதைவல்ல
வளர்சிதைவு என்று!

பா.உஷாராணி

கல்வெட்டுகள் எப்போதும் உண்மையான செய்திகளைத் தருவதாகக் கொள்ள முடியாது. சில சமயங்களில் மிகைப்படுத்தப்பட்ட செய்திகளையும், கற்பனை கலந்த செய்திகளையும் கல்வெட்டுகளில் காண நேரிடும். ஒரு தலைப்பட்சமான செய்திகளையும் கல்வெட்டுகளில் காணக் கூடும். செய்திகளை உறுதிப்படுத்துவதற்கு முன்னர் இரு சாராரின் கல்வெட்டுகளையும் நன்கு ஆராய்ந்து பார்க்க வேண்டும்.

- எம்.ஏ. வரலாற்றுப் புத்தகத்திலிருந்து

"குரு... என்ன விஷயம் அவசரமா வரச் சொன்னே?..." என்றபடியே உள்ளே நுழைந்தான் ஷிவா. சாயம் போன நீல நிற ஜீன்ஸும், அதற்குத் தோதாக அடர்ந்த சிவப்பில் டீ ஷர்ட்டும் அணிந்திருந்தான்.

இன்ஸ்பெக்டர் குருபிரசாத் தனது நாற்காலியில் விறைப்பாக உட்கார்ந்திருக்க, எதிரே ஒரு முதியவர் வேட்டி சட்டையில் இருந்தார். அவர் முகத்தில் கவலை.

"வா ஷிவா. உட்கார். இவர் பேரு மிஸ்டர் பரமசிவம். இவர் பையனை பத்து நாளா காணலை."

ஷிவா, "அப்படியா? ஸாரி ஸார். நான் வக்கீல். குருதான் காவல் துறை. நல்ல திறமையான இன்ஸ்பெக்டர். உங்களுக்குக் கண்டிப்பா உதவுவார். சரி குரு, நான் வரட்டா?" என்றபடியே எழுந்தான்.

"என்ன அவசரம் ஷிவா?"

ஷிவா, " 'தூள்' டிக்கெட் வாங்கியிருக்கேன். விக்ரம் காட்டுல மழையாம். என்னன்னு பாத்துட்டு வரலாம்னு போறேன். எனக்குத் துணைக்குச் சீதா வர்றா. உதயம் வாசல்ல வெயிட் பண்ணிட்டிருப்பா..." என்றான்.

"ஷிவா... திஸ் ஈஸ் சீரியஸ்." என்றான் குருபிரசாத்.

ஷிவா, "நான் என்ன பண்ண? இது உன்னோட வேலை. மாசக் கணக்குல டிரை பண்ணி இன்னைக்குத்தான் சீதா ஓ.கே. ஆகியிருக்கா. தியேட்டர்ல என்ன என்னவோ பண்ணலாம்னு நினைச்சுகிட்டு இருக்கேன். என் கனவைத் தூளாக்கிடாதே..." என்றான்.

குருபிரசாத், "ஷட் அப் ஷிவா. நீ இன்னைக்கு சினிமாவுக்குப் போகலை. இவர் பையனை விசாரிச்சுட்டு வா. எட்டு மணிக்கு மேல கவுசல்யாவை அறிமுகப்படுத்தறேன்." என்றான்.

• வஸந்த் செந்தில்

மினி தொடர்

தணந்தர் புதையல்

"அய்யோ. அந்தக் கவுசல்யாவா?" என்று முகம் மலர்த்தின ஷிவா, தன் பாக்கெட்டில் இருந்த யூரோடெல்லை எடுத்து சடசடவென்று அமுக்கினான்.

"கீதா? ஸாரிடா. நான் திருவொற்றியூர் அம்மன் கோயில் பின்னால நிக்கறேன். இங்க ஒரு கொலை. அய்யோ, பயப்படாத. நான் பண்ணல. பண்ணின ஆளைக் கண்டுபிடிக்க வந்துருக்கேன். போலீஸ் நான் இல்லன்னா திண்டாடிடுவாங்க. ஸாரிப்பா. இப்ப நீ வீட்டுக்குப் போ. நாளைக்கு வசீகராவும், தூளும் அடுத்தடுத்த ஷோ காட்டறேன். சரியா...?"

ஷிவா செல் ஃபோனை அணைத்தான். பிறகு அந்த முதியவர் பக்கம் திரும்பினான்.

"சொல்லுங்க ஸார். உங்க பையன் எந்த ஸ்டாண்டர்ட்?"

குருபிரசாத், "இடியட். அவர் பையனுக்கு இருபத்தி எட்டு வயசு. பேர் சரவணன். வரலாற்றுப் பைத்தியம். மெட்ராஸ் யுனிவர்சிடியில சோழராஜான்னு ஒரு ஹிஸ்டரி புரபஸர் இருக்கார். அவர்கிட்ட ரிஸர்ச் ஸ்டுடண்ட்டா இருக்கான். ஆளை பத்து நாளா காணோம்.." என்றான்.

அந்த முதியவர் தளர்வாகப் பார்த்துக் கொண்டிருந்தார்.

ஷிவா அவரைப் பார்த்து, "ஸாரிங்க. இப்பல்லாம் ஆண்கள் வழுக்கை விழுந்ததும் தான் கல்யாணம் பண்ணிக்கறாங்க. அதான் எந்த ஸ்டாண்டர்ட்னு கேட்டுட்டேன். சரி. உங்க பையனுக்கு ஏதாவது காதலா?" என்றான்.

"இல்லைங்க ஸார். இப்பதான் எல்லாத்தையும் இன்ஸ்பெக்டர்கிட்ட சொன்னேன்" என்றார்.

குருபிரசாத், "ஷிவா.. நான் அந்த புரபஸர் கிட்ட போன்ல பேசினேன். என்னமோ உளர்றார். கொஞ்சம் சந்தேகமா இருக்கு" என்றான்.

ஷிவா, "ஏன்.. காவல்துறை எங்க போகுது?" என்றான்.

"கவர்னர் மலேசியா போறார். ஏர்போர்ட் வரைக்கும் போறேன்."

ஷிவா, "உன் வேலை ஒழுங்கா நடக்கணும். என் கீதா எப்படியோ போகணுமா?" என்றான்.

குருபிரசாத், "கவலைப் படாதடா. ஷார்ப்பா எட்டு மணிக்கு உன்னை கவுசல்யா முன்னால நிறுத்தறேன்..." என்றான்.

ஷிவா, அந்த பெரியவரைப் பார்த்து, "ஐயா,



கவலைப்படாதிங்க. உங்க முகத்தைப் பாத்தா உங்க பையன் யூரின் பாஸ் பண்ணக் கூட தனியா போகமாட்டான் போலிருக்குது. கண்டு பிடிச்சுடலாம். விசாரிச்சுட்டு உங்களுக்குச் சொல்றேன். நீங்க வீட்டுக்குப் போங்க..'' என்றான்.

சென்னைப் பல்கலைக் கழகத்தின் சிவப்பு கரைந்த கட்டடங்கள் கடற்காற்றுக்கு உதிர்ந்து கொண்டிருந்தன. ஷிவா புகுந்து தேடி வரலாற்றுத் துறைக்குச் சென்றான். சிதைந்த பளிங்குக் கற்கள் நடக்கத் தோதுவாக இருக்க, வெளிறிப்போன அந்த அறைக் கதவினை சும்மா பேருக்குத் தட்டிவிட்டு ஷிவா உள்ளே நுழைந்தான். அறை இல்லை. மிக விஸ்தாரமான ஹால். சுவர் முழுக்க பழைய கண்ணாடி பீரோக்களில் முதுகு வீங்கின புத்தகங்கள் புதைந்திருந்தன. ஷிவா சுற்றிலும் பார்த்தான். ஒரு ஓரத்தில் டேபிள் டென்னிஸ் விளையாடலாம் போல இருந்த ஒரு பெரிய மேசையின்மீது ஏகப்பட்ட செல்லரித்த தாள்களுக்கும், புத்தகங்களுக்கும் நடுவே தனது உடைந்த சேரில் உட்கார்ந்திருந்தார் ஒருவர்.

ஷிவா, "புரபஸர் சோழராஜா?" என்றான் அவரை அணுகி.

"ஆமாம்." என்றார் உட்கார்ந்திருந்தவர். சாளேஸ்வரம் படர்ந்திருந்த கண்களில் தேடுதல் இருந்தது. அணிந்திருந்த கட்டம் போட்ட நீல நிறச் சட்டை கசங்கி, அவரது உடைமேலான அக்கறையின்மையைக் காட்டியது.

ஷிவா, "நல்ல வேளை. புரபஸர்ஸ் எல்லாம் கேன்டீன்ல டீ குடிச்சுட்டு வரேன்னு சொல்லிட்டு மூணு மணிக்கு வீட்டுக்குப் போயிடுவாங்கன்னு நினைச்சேன். இல்லன்னா உங்களைத் தேடி வீட்டுக்கு அலைஞ்சிருக்கணும்." என்றான்.

''பொண்ணை, டாக்டர் பையன் பார்த்துட்டுப் போனானே... என்ன சொன்னான்?''

''எதையும் இருபத்து நான்கு மணி நேரம் கழிச்சுத்தான் சொல்ல முடியும்னு சொல்லிட்டுப் போயிட்டான்!''

- நெல்லை ராஜ்



"நீங்க யார்? ஏன் என்னைத் தேடறீங்க?"

ஷிவா, "நான் உங்களைத் தேடலீங்க. அந்த பையனைத் தேடறேன். சரவணன். உங்க கிட்ட ரிஸர்ச் ஸ்டூடண்ட்..." என்றான்.

சரவணன் என்ற பெயரைக் கேட்டதும் அவர் லேசான படபடப்புக்கு உள்ளாவதை ஷிவா கவனித்தான். மிக நேரடியாக உடனே, "எங்க அனுப்பியிருக்கீங்க அவனை?" என்று கேட்டான்.

"அவனைக் காணல. பத்து நாளா இங்க வர்றதில்லை..." என்றார் புரபஸர் சோழ ராஜா தன் இயல்பிழந்து.

"நிஜமாகவா?" என்ற ஷிவா அவரைக் கூர்மையாகப் பார்க்க, அவர் கோபமாகி, "நீங்க யாரு? உள்ள நுழைஞ்சி நீங்க பாட்டுக்கு கேள்வி கேக்கறீங்க?" என்றார்.

ஷிவா உடனே விறைப்பாக, "போலீஸ். உங்களை சந்தேகத்தின் பேரில் அரெஸ்ட் பண்ணப் போறேன்." என்றான் சினிமா பாணியில்.

"அதெல்லாம் முடியாது. வாரண்ட் வேணும் அதுக்கெல்லாம்..." என்றார்.

"இருக்கே..." என்ற ஷிவா, பாக்கெட்டில் வைத்திருந்த சினிமா டிக்கெட்டை வெளியில் எடுத்து "போதுமா?" என்றான், அதன் பின் பக்கம் காண்பித்துக் கொண்டு.

"என்ன இந்த சைஸ்ல இருக்கு?"

ஷிவா, "ஆமா... பேப்பர் மிச்சம் பண்றதுக்காக இந்த சைஸ்ல மாத்திட்டாங்க. ஜெயில் களி சாப்பிட்டிருக்கீங்களா?" என்றான்.

"அய்யா..." என்று அலறிய அவர், "ரொம்ப ஸாரி ஸார். எம்மேல எந்தத் தப்பும் இல்லை. அரெஸ்ட் பண்ணா குவார்ட்டர்ஸ்ல எல்லாருக்கும் தெரிஞ்சுடும். மானம் போயிடும்." என்றார்.

ஷிவா, "அப்ப உண்மையைச் சொல்லுங்க..." எனறான்.

புரபஸர் சோழராஜா ஒரு நிமிடம் மௌனமாக இருந்தார். மெல்ல எச்சில் கூட்டி விழுங்கினார்.

"சொல்லுங்க புரபஸர்?"

"சரவணன்... சரவணன் தனநந்தர் புதையலைத் தேடிப் போயிருக்கான்..."


ஷிவா, "தனநந்தர் புதையலா? எந்த ஊருக்கு?" என்றான்.

புரபஸர் சோழ ராஜா, ஷிவாவை நேருக்கு நேராகப் பார்த்துக் கொண்டு, மிகத் தெளிவாகச் சொன்னார்.

"ஆறாம் நூற்றாண்டுக்குப் போயிருக்கான். அங்க நந்தர்கள் சாம்ராஜ்யம் நடக்குது..."

(தொடரும்)





உன் பாட்டுக்கு...!

“காதலிப்பவர்களெல்லாம் இன்று கவிஞர்களாக இருக்கின்றார்கள். அந்தத் தாக்கத்தை ஏற்படுத்தியவர் வைரமுத்து. அதனால் காதலர்கள் டைரியில் வை.மு., வை.பி. என்று குறித்துக் கொள்ளுங்கள். வைரமுத்துவிற்கு முன், வைரமுத்துவுக்கு பின் என்று அர்த்தம். வைரமுத்து 'காதலர் முன்னேற்றக் கழகம்' என்று ஒரு கட்சியும் ஆரம்பிக்கலாம்” என்று வைரமுத்துவை ஐஸ் மழையில் நனைத்த நடிகர் பார்த்திபன், திருவிளையாடல் பாணியில் வைரமுத்துவைப் புகழ்ந்து 'சொல்லுக்கு' வைரமுத்து 'லொள்ளுக்கு நான்' என்று கூறி கைத்தட்டலை அள்ளிச் சென்றார்.

கருமுத்து கண்ணன், கு. ஞானசம்பந்தன், நடிகர் பார்த்திபன், ரவி ஆறுமுகம், குன்றக்குடி பொன்னம்பல அடிகளார் என்று ஒரு தமிழ்ப் பட்டாளமே வாழ்த்துரை வழங்க, பத்மஸ்ரீ விருதுக்கான முதல் பாராட்டு விழாவினை ஏற்றுக் கொண்டார் கவிப்பேரரசு வைரமுத்து.

“ஒரு கவிஞனுக்குச் சிறப்பு அவனுக்குக் கிடைக்கிற விருதுகள் அல்ல. அந்தக் கவிஞன் எத்தனை மனக்காயங்களுக்கு மருந்திட்டுள்ளான் என்பதுதான் உண்மையான சிறப்பு. அந்த வகையில் முதல் இடத்தில் இருக்கிறார் வைரமுத்து” என்றார் குன்றக்குடி பொன்னம்பல அடிகளார்.

ஏற்புரை நிகழ்த்திய வைரமுத்து, உணர்ச்சிப் பெருக்கில் அழுது விட்டார். “பதிமூன்று வயதில் வெறி நாய் கடித்து, பிண வாடை பிடிப்பதற்காக மதுரைக்கு வந்த என்னை, இன்று மலர் வாடை பிடிக்க வைத்த உங்களின் அன்பிற்காக வாழ ஆசைப்படுகிறேன். உங்கள் கரவொலிகள் தான் பலம். என்னை முதுகில் தட்டுங்கள். செல்லமாக கன்னம் கிள்ளுங்கள். என் கைகளைக் குலுக்குங்கள். என்னிடம் ஆசையோடு பேசுங்கள். நிறைய பாராட்டுங்கள். என் வாழ்க்கை முழுவதையும் அர்ப்பணிக்கிறேன். தமிழுக்காக, உங்கள் கட்டளையினை நிறைவேற்றுகிறேன்” என்றார் வைரமுத்து நா தழுதழுக்க.

அழைப்பிதழில் பெயர் இருந்தும், விழாவிற்கு வராமல் பாரதிராஜா நழுவியது ஏனோ!

“வைரமுத்துவை பாராட்டுவது என்னை நானே பாராட்டி பெருமைப்படுவது போன்றது.” என்ற டாக்டர் கலைஞரின் வாழ்த்தும் 'தாமரைத்திரு' என்று பத்மஸ்ரீ விருதை தமிழாக்கம் செய்திருந்த சபாநாயகர் காளிமுத்துவின் வாழ்த்துச் செய்தியும் ஏற்படுத்தாத தாக்கத்தை, பார்வையாளர் வரிசையில் அமர்ந்திருந்த ஒரு பெண், 'உன் பாட்டுக்கு இந்தப் பாண்டிய நாடு அடிமை' என்று கையில் பிடித்திருந்த வாசகம் ஏற்படுத்தியது.

- கி. சிங்காரவடிவேல்



சிவகாமியின் சபதம்

ஐம்பத்து ஆறாம் அத்தியாயம்

மகேந்திரர் கோரிக்கை

மாமல்லர், பரஞ்சோதி முதலியவர்கள் காஞ்சிக்குத் திரும்பி வந்தபோது, மகேந்திர பல்லவரின் தேகநிலை முன்னைவிட மோசமாகியிருந்தது. அவர்கள் சிவகாமியை அழைத்து வரவில்லையென்று தெரிந்த பிற்பாடு, அவருடைய உடம்பு மேலும் நலிவடைந்தது.

திருவெண்காட்டு நமசிவாய வைத்தியர் எவ்வளவோ திறமையாக வைத்தியம் செய்தும், தேக நிலைமையில் அபிவிருத்தி ஏற்படவில்லை.

மகேந்திர பல்லவர் ஒருநாள் தம் புதல்வர் மாமல்லரையும் மந்திரி மண்டலத்தாரையும், படைத் தலைவர்களையும், கோட்டத் தலைவர்களையும் அழைத்து வரச் செய்தார்.

படுக்கையில் படுத்தபடியே சுற்றிலும் சூழ்ந்து நின்றவர்களைச் சக்கரவர்த்தி பார்த்தார். எல்லாருடைய கண்களிலும் கண்ணீர் கசிந்திருப்பதையும், எல்லாருடைய முகத்திலும் பக்தி விசுவாசம் ததும்பிக் கொண்டிருப்பதையும் கவனித்தார்.

மகேந்திர பல்லவரின் பழைய சிம்ம கர்ஜனைக் குரலைக் கேட்டிருந்தவர்கள், இப்போது அவருடைய மெலிந்த ஈனஸ்வரமான குரலைக் கேட்டுத் திடுக்கிட்டார்கள். தங்களுடைய உணர்ச்சியை வெளிக்காட்டாமல் தடுத்துக் கொள்ள முயன்றார்கள்.

மகேந்திர பல்லவர் சொன்னார்: "நான் இந்தப் புகழ் பெற்ற பல்லவ சிம்மாசனத்தில் ஏறி, இன்றைக்கு இருபத்தைந்து வருஷம் ஆகிறது. இவ்வளவு காலமும் நீங்கள் காட்டிய

அமரர் கல்கி



பக்தியும் விசுவாசமும் இணையற்றவை. காஞ்சியின் புகழ் பாரத நாடெங்கும் ஓங்கி நின்ற காலத்தில், நீங்கள் என்னிடம் பக்தி விசுவாசத்துடன் நடந்து கொண்டீர்கள். என்னுடைய விருப்பமே கட்டளையாகவும் என்னுடைய வார்த்தையே சட்டமாகவும் பாவித்து வந்தீர்கள். அது பெரிய காரியமல்ல.



நான் தவறுக்கு மேல் தவறாகச் செய்து வந்த காலத்திலும் காஞ்சியின் புகழ் மங்கி வந்த நாளிலும் படையெடுத்து வந்த பகைவர்களை முன்னேற விட்டுப் பின்வாங்கி வந்த காலத்திலும், காஞ்சிக் கோட்டைக்குள் நாம் மறைந்திருக்க வேண்டி வந்த காலத்திலும் என்னிடம் இடைவிடாத விசுவாசம் காட்டி வந்தீர்கள். மாறாத பக்தி செலுத்தி வந்தீர்கள். சளுக்க மன்னன் புலிகேசியை உங்களுடைய விருப்பத்திற்கு மாறாக நான் விருந்துக்கு அழைத்ததையும், அதனால் விளைந்த விபரீதங்களையும் நீங்கள் பொறுத்துக் கொண்டிருந்தீர்கள். எனக்கு அந்திய காலம் நெருங்கியிருக்கும் இந்தச் சமயத்தில் உங்களுக்கெல்லாம் என் மனத்தில் பொங்கிக் கொண்டிருக்கும் எல்லையற்ற நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். நான் செய்த தவறுகளுக்காகவும் என்னால் உங்களுக்கெல்லாம் நேர்ந்த கஷ்டங்களுக்காகவும் மன்னிக்கும்படியாக ரொம்பவும் கேட்டுக் கொள்கிறேன்...''

இவ்விதம் மகேந்திர பல்லவர் பேசியபோது சபையிலே சிலர் விம்மி அழுதார்கள்.

முதன்மந்திரி ஓர் அடி முன்னால் வந்து, "பிரபு! இப்படியெல்லாம் பேசக் கூடாது என்று பிரார்த்திக்கிறேன். எங்களிடம் தாங்கள் மன்னிப்புக் கேட்பது எங்களைத் தண்டிப்பதேயாகும். தங்கள் மேல் இல்லாத குற்றங்களையெல்லாம் சுமத்திக் கொண்டு, எங்களை வேதனைக்கு ஆளாக்குகிறீர்கள். நடந்ததெல்லாம் விதிவசத்தினால் நடந்தது; சென்று போன காரியங்களைப் பற்றிச் சிந்திப்பதில் பயனில்லை!'' என்றார்.

மகேந்திர சக்கரவர்த்தி மேலும் கூறினார்:

"சாரங்கதேவ பட்டரின் மொழிகள் என்னை மேலும் உங்களிடம் நன்றிக் கடன் பட்டவனாகச் செய்கின்றன. இன்று உங்களையெல்லாம் நான் அழைத்ததன் காரணத்தைச் சொல்கிறேன். என் வாழ்நாளின் இறுதி நெருங்கிவிட்டது. இன்னும் சில நாளைக்கெல்லாம் இந்த மெலிந்து நைந்த தேகத்திலிருந்து என் ஆவி பிரிந்து போய் விடும். என் அருமைக் குமாரன் நரசிம்மன் வேத விதிப்படி இறந்து போன தந்தைக்குச் செய்ய வேண்டிய உத்தரக் கிரியைகளைச் செய்வான்...'' என்று சக்கரவர்த்தி சொன்னபோது, மாமல்லர் தாங்க முடியாத துக்கமும் ஆத்திரமும் பொங்க, "அப்பா! அப்பா!'' என்று அலறினார்.


மகேந்திர பல்லவர் அருகில் நின்ற மகனை அன்புடன் தழுவிக் கொண்டு, உச்சி முகந்து, "குழந்தாய்! நான் சொல்ல வேண்டியதைச் சொல்லித்தான் ஆக வேண்டும். உனக்குக் கேட்பதற்குக் கஷ்டமாயிருந்தால் சற்று வெளியே போய் இருந்துவிட்டு அப்புறம் வா!'' என்றார். ஆனால் அவ்விதம் மாமல்லர் வெளியேறவில்லை. மறுபடியும் மந்திரி பிரதானிகளைப் பார்த்துச் சக்கரவர்த்தி கூறினார்.


"என் அருமை மகன் எனக்குரிய உத்திரக் கிரியைகளைச் செய்வான். நீங்களும் காலஞ் சென்ற சக்கரவர்த்திக்குரிய மரியாதைகளைச் செய்வீர்கள். ஆனால், இதனாலெல்லாம் என் ஆத்மா சாந்தி அடையவே அடையாது. இப்போது நான் உங்களிடம் கேட்டுக் கொள்ளப் போகும் கோரிக்கையை நிறைவேற்றி வைத்தால் என் ஆத்மா சாந்தி அடையும். இல்லாவிட்டால் சொர்க்கத்திலே இருந்தாலும் என் ஆவி நிம்மதி அடையாது!''


"பிரபு! சொல்லுங்கள். தங்களுடைய ஆக்ஞை எதுவானாலும், அதை நிறைவேற்றி வைப்பதாக இங்குள்ளவர் அனைவரும் சபதம் செய்ய ஆயத்தமாயிருக்கிறோம்!'' என்று முதல் அமைச்சர் கூறினார்.

"என்னுடைய அஜாக்கிரதையினாலும் சளுக்க மன்னனின் வஞ்சகத்தினாலும் பல்லவ வம்சத்துக்குப் பெரிய அவமானம் நேர்ந்து விட்டதை நீங்கள் அறிவீர்கள். அறுநூறு வருஷத்து வீரப் புகழுக்கு என் காலத்தில் பங்கம் நேர்ந்து விட்டது. அந்த அவமானத்தை என்னாலே துடைக்க முடியவில்லை. இழந்து









விட்ட பல்லவ வம்சத்துப் புகழை நிலை நாட்டாமலே நான் உங்களிடம் விடை பெற்றுக் கொள்கிறேன். நான் செய்ய முடியாமற்போன காரியத்தை நீங்கள் நிறைவேற்றி வைக்க வேண்டும். பல்லவ சைனியம் படையெடுத்துச் சென்று சளுக்கரை வென்று, புலிகேசியைக் கொன்று, வாதாபி நகரை அழித்து, நீ



வைத்து எரிக்க வேண்டும். வாதாபி நகரம் இருந்த இடத்தில் பல்லவ ஜயஸ்தம்பம் கம்பீரமாக வானளாவி நிற்க வேண்டும். அப்போதுதான் பல்லவ வம்சத்துக்கும் தமிழகத்தின் வீரத்துக்கும் நேர்ந்துள்ள களங்கம் நிவர்த்தியாகும். இதுவே என் கோரிக்கை. என்ன சொல்கிறீர்கள்? நிறைவேற்று





வீர்களா?"

'நிறைவேற்றுகிறோம்'', 'நிறைவேற்றுகிறோம்" என்று ஏக காலத்தில் பல குரல்கள் ஒலித்தன.

"மகேந்திர பல்லவேந்திரர் வாழ்க! வீர மாமல்லர் வாழ்க!'' என்ற ஜயகோஷங்களும் முழங்கின.

மகேந்திர பல்லவர் இன்னொரு தடவை எல்லாரையும் பார்த்து, "மறுமுறையும் உங்களுக்கு என் இருதயத்தில் பொங்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்'' என்றார்.

அப்போது முதல் அமைச்சர், "பிரபு ஒரு விஷயம், தங்கள் கோரிக்கையை வெளியிட்ட போது, இங்குள்ள நாங்கள் அனைவரும் அதை நிறைவேற்றி வைப்பதாக ஒப்புக்கொண்டு கோஷித்தோம். ஆனால், முக்கியமாகத் தங்கள் கோரிக்கையை நிறைவேற்றி வைக்க வேண்டிய இருவரும் சும்மா இருந்தார்கள். குமார சக்கரவர்த்தியையும் சேனாதிபதி பரஞ்சோதியையுந்தான் சொல்கிறேன். அவர்கள் மௌனமாயிருந்தது எங்களுக்கு அர்த்தமாகவில்லை" என்றார்.

''மாமல்லனும் பரஞ்சோதியும் ஏற்கெனவே எனக்கு அவ்வாறு வாக்களித்துச் சபதம் கூறியிருக்கிறார்கள். அதனாலேதான் இப்போது சும்மா இருந்தார்கள். அவர்கள் செய்த சபதத்தை நிறைவேற்றி வைக்க நீங்கள் அவர்களுக்கு ஒத்தாசை செய்ய வேண்டும். சபையோர்களே! நான் மாமல்லனோடு ஒரு முக்கியமான விஷயம் பேச வேண்டியிருக்கிறது. அதனுடைய முடிவை உங்களுக்கும் நான் தெரிவித்தாக வேண்டும். சற்று எங்களுக்கு அவகாசம் கொடுப்பீர்களா?" என்று கேட்டார்.

(தொடரும்)



பித்ரு தோஷ நிவர்த்தி வம்ச விருத்திக்கு வழிகாட்டும்!

தடைப்பட்ட திருமணம், பிள்ளைப்பேறு, கடன் தொல்லை நீங்கி ஆயுள் விருத்தியாக

பரிகார ஸ்தலமான இராமேஸ்வரத்தில் அமாவாஸை திதியில் அன்னதானம் செய்வோம் வாருங்கள்!

உங்கள் நல்லாதரவுடன் 2ஆம் ஆண்டில் சாதனை......

அன்புடையீர், அனேக நமஸ்காரம். தலம், தீர்த்தம், மூர்த்தி இவற்றால் சிறப்புக்குரிய பல க்ஷேத்ரங்களில் இராமேஸ்வரம் பெருமைமிக்க புண்ணிய ஸ்தலமாகும். திருமாலின் அவதாரங்களான ஸ்ரீ இராமனும், ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மாவும், முனிவர்கள் பலரும் இங்கு வந்து நீராடியதால் இராமேஸ்வரம் க்ஷேத்ரத்திற்கு மென்மேலும் பெருமை உண்டு. இராமேஸ்வரத்தில் அன்னதானம் செய்வதும் ஜபம், ஹோமம், தானம் செய்வதும் அழியாத புண்ணியப் பலனை கொடுக்கும்.

இராமேஸ்வரத்தில் நீராடி அன்னதானம் செய்தால் கங்கை, யமுனை, சரஸ்வதி நதிகளில் நீராடிய புண்ணிய பலனும் ஒருசேர கிடைக்கிறது. இராமேஸ்வரத்தில் அமாவாஸை தினத்தில் அன்னதானம் செய்தால் மனித குலம் மாபெரும் புண்ணியத்தை பெறும். புத்திரப்பேறு உண்டாகும். நாகதோஷம் முதலியன நீங்கும். அனைவரும் நலம் பெறுவர். இராமேஸ்வரத்தில் அமாவாஸை அன்று அன்னமளிப்பவன் ப்ராணனளிப்பவன் ஆகிறான். அன்னமளிப்பது அமிர்தமளிப்பதற்கு சமம். இந்த புண்ணிய பூமியில் அன்னமளிப்பவன் மிக்க செல்வந்தராய் பிறப்பான். வறுமை நீங்கி, பெரும் பணக்காரனாவான். அன்னதானம் செய்பவனுக்கு போகமும், ஆயுளும், அழகும் பெருகும். பலம், புகழ், கீர்த்தி இவை உண்டாகும்.

★ தடைபட்ட திருமணம், புத்திர பாக்யம் இவை உண்டாகும் ★ வறுமை அகல ★ கொடிய நோய்கள் நீங்க ★ தொழில் மந்தம் நீங்கி முன்னேற்றம் காண ★ பிரிந்தவர்கள் ஒன்றுசேர ★ நீண்ட ஆயுள், கடன் தொல்லையிலிருந்து விடுதலை ★ மனநிம்மதி பெற ★ பெற்றோர், மூதாதையர் நினைவு நாளில் ★ ஆக நீங்கள் நினைத்த காரியம் நிறைவேற நாங்கள் உங்கள் சார்பாக வடை,பாயசத்துடன் அன்னதானமளித்து, பிரஸாதம் அனுப்பி வைக்கிறோம்.

★ *சிறிய தொகை மற்றும் அரிசி போன்ற உணவுப் பொருட்களும் ஏற்றுக் கொள்ளப்படும்.*

★ *ரூ.500 அனுப்பும் அன்பர்களுக்கு கோபுர தரிசனம் மாத இதழ் ஒரு ஆண்டுக்கு அனுப்பி வைக்கப்படும்.*

★ *ரூ.1000 அனுப்பும் அன்பர்களுக்கு கோபுர தரிசனம் இதழ் இரண்டு ஆண்டுகளுக்கு அனுப்பி வைக்கப்படும்.*

★ *ரூ.5000 அனுப்பும் அன்பர்களுக்கு கோபுர தரிசனம் இதழ் பத்து ஆண்டுகளுக்கு அனுப்பி வைக்கப்படும்.*

பிறந்த நாள், திருமண நாள் என நீங்கள் நினைக்கும் நாளில் அன்னதானம்!

இராமேஸ்வரத்தில் நீங்கள் நினைக்கும் நாளில் அன்னதானம் செய்வதற்கு எமது அறக்கட்டளை சிறப்பான ஏற்பாடுகள் செய்துள்ளன. ஆகவே, நீங்கள் நினைக்கும் தேதியில் இராமேஸ்வரத்தில் அந்தணர்களுக்கும், சாதுக்களுக்கும், ஏழை எளியவர்களுக்கும் அன்னதானம் செய்யலாம். ரூ.1000, ரூ. 5000 அனுப்பும் அன்பர்களுக்கு கந்தபுராணம் அல்லது பகவத்கீதை புத்தகம் அனுப்பி வைக்கப்படும்.

நன்கொடை அனுப்பும் அன்பர்கள் **GOPURA DHARISANAM ANNADHANA CHARITABLE TRUST, CHENNAI-41** என்ற பெயரில் CHEQUE/D.D./M.O. மூலம் கீழ்க்கண்ட முகவரிக்கு அனுப்பி வைக்கவும். என்றென்றும் புனித ஸேவையில் மனப்பூர்வமாக செயலாற்றும் எமது பணிக்கு உங்களது மேலான ஒத்துழைப்பை என்றென்றும் நாடுகிறோம்.

CHEQUE/D.D./M.O.அனுப்ப வேண்டிய முகவரி :

கோபுர தரிசனம் அன்னதான அறக்கட்டளை

GOPURA DHARISANAM ANNADHANA CHARITABLE TRUST

M-11/F-4, RAGAM APTS., I MAIN ROAD, THIRUVALLUVAR NAGAR, THIRUVANMIYUR, CHENNAI - 600 041. SOUTH INDIA

☎: (044) 24900303, 24900603, 24416122 Mobile : 94441 16300

★ நீங்கள் தேடும் மனநிம்மதி அன்னதானத்தில் கிடைக்கிறது ★ ஸர்வேஜனா: - ஸுகினோபவந்து



• பார்த்திபன் கனவு — ஸ்ரீகாந்த் • சினேகா

அழகான ராட்சஸி!

''எல்லோருக்குள்ளும் நிறைவேறாத கனவுகள் நிறைய இருக்கும். ஆனால் எனது ஹீரோவின் கனவுகள் அடுத்தடுத்து நிறைவேறிக் கொண்டே இருக்கும்'' என்றார் 'பார்த்திபன் கனவு' படத்தின் இயக்குனர் கரு. பழனியப்பன். ''நிறைவேறாத கனவுகளைச் சொல்வதில் தானே திரைக்கதையின் வேகம் கூடும்'' என்றால், ''ஹம் ஆப்கே ஹைன் கோன் - படம் பார்த்திருக்கிறீர்களா? அதுகூட இதுபோலத் தான்... முழுவதும் பாஸிட்டிவான படங்களுக்கு எப்போதுமே நல்ல வரவேற்பு இருக்கும்'' என்கிறார் ஒரு பக்கம் சினிமா இயக்குனராக இருந்துகொண்டே, சட்டமும் படித்து முடித்திருக்கும் இவர்.

படத்தில் பார்த்திபனாக ஸ்ரீகாந்த். அப்படியானால் அவரது கனவில் வரும் தேவதை? சினேகா! அதுவும் 'சினேகா'க்கள்! அதாவது முதல் முறையாக இரட்டை வேடத்தில் நடிக்கிறார் சினேகா. ஸ்ரீகாந்த் காதலிப்பது ஒரு சினேகாவை. கை பிடிப்பது இன்னொரு சினேகாவை! என்னது? 'சாய்ஸ்' ஆங்கிலப் படத்திலிருந்து சுட்ட மாதிரி தெரிகிறதா? மெதுவாப் பேசுங்க, இயக்குனர் காதுல விழுந்துடப் போகுது...!

நான்கு படங்கள் வரிசையாய் வெளியாகி சுமாராக வசூலும் ஆகி விட்டால், யோசிக்காமல் ஒரு கோடி சம்பளம் கேட்கும் ஹீரோக்கள் நிறைந்த கோடம்பாக்கத்துக்கு, புதுவையிலிருந்து வந்திருக்கிறார் ஒரு புது ஹீரோ!

''எனக்குச் சம்பளம் முக்கியமில்லைங்க. சினிமாங்கிற மாஸ் மீடியா மூலமா சமுதாயத்துக்கு என்ன சொன்னோம்கிறதுதான் முக்கியம்'' என்று ஆச்சர்யமூட்டும் அசோக், 'ஜஸ்' படத்தின் நாயகன்! பள்ளிப் படிப்பு சென்னையில் என்றாலும் வளர்ந்தது சிங்கப்பூரில். அப்பா அங்கே டாக்டர். ''சினிமா மீதுள்ள காதலால் சென்னைக்கு வந்து வாய்ப்புத் தேடியபோது, நிறையவே அசிங்கப் பட்டேன், அவமானப்பட்டேன். பணம் இருந்தால் மட்டும் இங்கே நினைத்த மாத்திரத்தில் ஹீரோ ஆகி விட முடியாது, என்று புரிந்து கொண்டேன். எனது வலிகள் எல்லாம் படம் வெளிவரும்போது ஜஸ் மாதிரி உருகி ஓடிவிடும்'' என்று தத்துவம் பேசுகிறார். சினிமான்னா, கொஞ்சம் முன்னபின்னதான் சார் இருக்கும்.

பட்டப்பகலில் அதுவும் சென்னை அண்ணாசாலையில், "வீல்...! வீல்...!" என்று அலறியபடி பின் இருக்கையில் அமர்ந்திருந்த ஒரு அழகான ராட்சஸியை ஸ்கூட்டியில் ஓர் இளைஞன் அழைத்துப் போனால் என்ன நினைப்பது? நாம் நினைத்ததைப்



• 'குறும்பு' நரேஷ் • நிகிதா

போல இது கடத்தல் இல்லை. 'குறும்பு' படத்தின் சூட்டிங். கடத்திக் கொண்டுபோன பொடியன், இளைஞன், படத்தின் ஹீரோ (எப்படி வேண்டுமானாலும் வைத்துக் கொள்ளலாம்) யாரென்று பார்த்தால் நரேஷ். ஆல்பம் படத்தில் நடித்த ஆர்யன் ராஜேஷின் தம்பி. அண்ணன் விட்ட இடத்தைப் பிடிக்க வந்திருக்கிறார். அந்த அழகான ராட்சஸி நிகிதா. பாசிலின் மலையாளப்படம் ஒன்றில் நடித்து முடித்துவிட்டு, ஆலப்புழை எக்ஸ்பிரசில் சென்னைக்கு வந்து இறங்கியிருக்கும் புது வரவு. இவர்களை இயக்கிக் கொண்டிருந்தவர் சந்தோஷ் சிவனின் உதவியாளர் விஷ்ணுவர்த்தன். ''டீன் ஏஜில், காதலுக்கும் நட்புக்கும் இடையில் இருக்கிற நூலிழை இடைவெளியை புரிஞ்சுக்கிறதுல இருக்கிற சங்கடம், ஜாலி, கலாட்டாதான் கதை சார். அதனாலதான் 'குறும்பு'ன்னு தலைப்பு வெச்சோம்'' என்கிறார். **தமிழில் வெச்சீங்களே! அதுக்கே பெரிய மனசு வேணும்!**

அழகி, சொல்ல மறந்த கதை ஆகிய கலைப் படைப்புகளைத் தந்த தங்கர்பச்சான், அடுத்து கார்த்திக்கை வைத்து 'தென்றல்' படத்தை இயக்குகிறார். இசை, இந்த முறை இளையராஜா அல்ல, வித்யாசாகர்.

ஓ... கவிதைக்கு மெட்டுப் போடுகிறவர் என்பதால் தங்கர் கட்டுப்பட்டு விட்டாரோ?

• ரவுண்ட்ஸ்பாய்

• 'ஜஸ்' – அசோக்



யுத்த பூமியில்..!

ஈராக் போர் முனைக்குச் சென்று திரும்பியிருக்கிறார் சன் நெட்வொர்க்கின் ஏ.எஸ். பன்னீர்செல்வம். தமது அனுபவங் களைப் பகிர்ந்து கொண்டார் நம்மிடம்.

★ போர் குறித்த தகவல்களைச் சேகரிக்க வந்திருந்த பத்திரிகையாளர்களை, போரில் பங்கேற்க, ராணுவம் அனுப்பிய நாட்டைச் சேர்ந்தவர்கள், போரை எதிர்க்கும் நாட்டைச் சேர்ந்தவர்கள், நடு நிலைக்காரர்கள் என்று மூன்று பிரிவுகளாக்கிவிட்டனர். முதல் பிரிவு பத்திரிகையாளர்களை, பாது காப்புடன் போர்முனைக்கே தாராளமாக அனுமதித்தனர். மூன்றாவது பிரிவினருக்குப் போதிய ஒத்துழைப்பு தரப்படவில்லை; இடைப்பட்ட பிரிவினருக்கு, பாது காப்பு என்ற பெயரில் கண்காணிப் புடன் ஒத்துழைப்பு கிடைத்தது!

★ போர் நடக்கிறபோது, ராணுவக் கட்டுப்பாட்டுத் தலைமை யகம் என்பது, வசதிகள் குறைந்த, தாற்காலிக ஏற் பாடுகளுடன் கூடிய இடத்தில் இருப்பதுதான் வழக்கம். ஆனால் அமெரிக் கக் கூட்டணிப் படைகளின் தலைமையகமாய் இருந்த இடம் ஹில்டன் ரிசார்ட் என்கிற ஐந்து நட்சத்திர ஓட்டல்.

★ இந்தப் போரில் அமெரிக்கக் கூட் டணிப் படைகள் அமைத்த வியூகம் துல்லியமாக இருந்தது. வடக்கு ஈராக், தெற்கு ஈராக், பாக்தாத் உள்ளடக்கிய மத்திய ஈராக் என்று மூன்று பகுதிகளாகப் பிரிக்கப் பட்டது. ஒவ்வொரு பகுதிக்கும் தனித்தனி வியூகம் வகுக்கப்பட்டது. ஆப்கானிஸ் தானில் போர் நடத்திய அனுபவத்தின் அடிப்படையில் வட ஈராக்கிற்கான வியூகம் வகுக்கப்பட்டது. அதாவது, வட ஈராக்கில், சதாமை எதிர்த்து பல்லாண்டு களாகப் போராடி வரும் குர்தூஸ் இன மக்களுடன் கூட்டு சேர்ந்து தாக்குதல் நடத்தி, அதைக் கைப்பற்றியது அமெரிக்கா.

தெற்கு ஈராக்கைக் கைப்பற்றும் பொறுப்பு முழுமையாக பிரிட்டனிடம் விடப்பட்டது. குவைத் வழியே, கடல் மார்க்கமாக நுழைந்து போரிட்டுக் கைப் பற்றியது பிரிட்டிஷ் படை. மத்திய ஈராக்கின் மீது அமெரிக்கப் படைகள் வான் வழித் தாக்குதல் நடத்தி, அதன்பின் தரைப்படை முன்னேறியது.

இப்படி மூன்று விதமான அணுகுமுறை கள் கையாளப்பட்டதால், ஒரே பத்திரிகை யாளர் போர்ச் செய்திகளை முழுமையாக சேகரிப்பது சாத்தியம் இல்லாமல் போனது. ஏதாவது ஒரு பகுதியில் இருந்துகொண்டு, அப்பகுதியில் நடப்பதை மட்டுமே விரி வாக கவர் பண்ண முடிந்தது.




★ அராபிக், பெர்ஷிய மொழி தெரியாமல் பத்திரிகையாளர்கள் ரொம்பவே திண்டாடிப் போனார்கள். துபாயின் அல் ரூபியா, அல் ஜஸிரா போன்ற 'வளைகுடா டி.வி சேனல்'களையே நம்பி இருக்கும் சூழ்நிலை நிலவியது.

★ வழக்கமாக, போர் என்றால், தாக்குதல் ஆரம்பிக்கும் முன்பாகவே மக்கள் அந்தப் பகுதியை விட்டு வெளியேறி, அகதிகளாக அண்டை நாட்டுக்குப் போவார்கள். அந்த அடிப்படையில், ஈராக்கின் எல்லையை ஒட்டி, மூன்று இடங்களில், பெரிய அளவில் அகதிகள் முகாம்கள் அமைக்கப்பட்டிருந்தன. ஆனால் ஈராக் மக்கள், நாட்டை விட்டு, அகதிகளாக வெளியேறவே இல்லை. மாறாக, தாக்குதலுக்கு



முன்பு, தங்கள் ஊரை விட்டு வெளியேறி, தாக்குதல் முடிந்து, அமெரிக்கக் கூட்டணிப் படைகள் அப் பகுதியைப் பிடித்தவுடன், மறுபடி தங்கள் ஊருக்கே திரும்பி விட்டனர். இதற்கு அவர்கள் தரப்பு விளக்கம்: "யூப்ரடிஸ், டைக்ரிஸ் நதிக்கரையில் உதித்த மெசபடோமியா நாகரிகம் உலகின் மிகப் பழைமையான நாகரிகம். அப்படிப்பட்ட சரித்திரப் பின்னணி கொண்ட எங்கள் மண்ணை விட்டு, வெளியேறுவது என்பது



★ பன்னீர்செல்வம்

எங்களால் நினைத்துப் பார்க்க முடியாத ஒன்று!"

★ பாக்தாத் பகுதியின் முப்பது மருத்துவமனைகளில் மூன்றே மூன்றுதான் செயல்பட்டன. இதனால் அங்கே ஒரே நெருக்கடி. டாக்டர்கள் நாற்பத்து எட்டு மணி நேரம் வரைகூட தொடர்ந்து கண் விழித்து, பாதிக்கப்பட்ட மக்களைக் கவனிக்க வேண்டிய நிலைமை. இதனால் சில டாக்டர்களே மன உளைச்சலுக்கு ஆளாகி, சிகிச்சை பெற வேண்டியதாகி விட்டது.

★ அமெரிக்கக் கூட்டணிப் படைகளின் தாக்குதலுக்குள்ளாகி மரணமடைந்த பத்திரிகையாளர்கள் மொத்தம் பத்தொன்பது பேர்.

★ ராணுவ வீரரின் மரணம் குறித்து அமெரிக்காவும், பிரிட்டனும் ஒரே அணியில் இருந்தாலும் நேரெதிர் அணுகுமுறையைக் கொண்டிருந்த விசித்திரத்தையும் காண முடிந்தது. ஒரு பிரிட்டிஷ் வீரர் மரணமடைந்தால், ராணுவத் தலைமையகத்தில் இறந்த வீரரின் உடலுக்கு மரியாதை செலுத்தி, அவர் பற்றிய விவரங்களை மீடியாவுக்குத் தெரிவித்து, 'விலை மதிக்க முடியாத உயிரைத் தந்த எங்கள் வீரருக்கு உரிய மரியாதை தர வேண்டியது தலையாய கடமை'' என்பதான அணுகுமுறையை பிரிட்டன் கையாண்டது. ஆனால், அமெரிக்கா, இறந்த வீரரின் உடலை, பாலிதின் ஷீட்டில் பேக் செய்து, உடனடியாக அமெரிக்காவுக்கு அனுப்பி விட்டது. இறந்த ராணுவத்தினருக்கு மீடியாவில் முக்கியத்துவம் தரப்பட்டால், அது, அமெரிக்காவின் போர் எதிர்ப்பாளர்களின் இயக்கத்துக்கு வலு சேர்க்கும்! அதை அனுமதிக்கக் கூடாது' என்பதே அமெரிக்க அணுகுமுறையாக இருந்தது. பத்திரிகையாளர்களுக்கு, அமெரிக்க வீரரின் மரணம் தெரிவிக்கப்படவில்லை என்பது மட்டுமில்லை; அவர்களைப் படமெடுக்கவும் அனுமதி மறுக்கப்பட்டது.

- மௌலி



• சண்டியரில் கமல்...

வளவள பேச்சில்லை. எந்தக் கேள்விக்கும் பளிச் பதில். கமல் பற்றிப் பேசும்போது மட்டும் ஏகப்பட்ட சிரிப்பு. பின்னே 'சண்டியர்' நாயகி ஆயிற்றே! ஆமாம், நாம் சந்தித்தது அபிராமியை. அண்ணா நகர் வீட்டில் ஹாயாக புத்தகம் படித்துக் கொண்டிருந்தவரிடம் பேசினோம்.

"நான் கமல்ஹாசனின் பரம ரசிகை. அவரது பல படங்களை, பல தடவைகள் பார்த்து ரசித்திருக்கிறேன்; அவரது இயல்பான நடிப்பைப் பார்த்து, அட! இப்படிக்கூட நடிக்க முடியுமா? என்று பிரமித்துப் போயிருக்கிறேன். கமலின் பரம ரசிகையாக இருக்கும் எனக்கு, இன்று, அவருக்கு ஜோடியாக நடிக்க வாய்ப்புக் கிடைத்திருக்கிறது. இதனால் ஏற்பட்டிருக்கும் ஆச்சரியத்திலிருந்து நான் இன்னும் மீளவே இல்லை. இது நிஜம்தானா என்று அடிக்கடி என்னை நானே கிள்ளிப் பார்த்துக் கொள்ளுகிறேன்" என்கிறார்.

*"**அ**பிராமி என்பது கமலின் 'குணா' படத்து ஹீரோயின் பெயராச்சே!"*

"குணா படத்தில் அவரது நடிப்பும், அபிராமி... அபிராமி... என்று சொல்லும் அவரது உச்சரிப்பும் என்னை ரொம்பக் கவர்ந்த விஷயங்கள். அதனால்தான் ஏசியா நெட் சேனலில் 'பெப்சி உங்கள் சாய்ஸ்' மாதிரியான நிகழ்ச்சியில் டெலிபோனில், நேயர்களுடன் உரையாடுவதற்கான வாய்ப்பு வந்தபோது, 'திவ்யா' என்கிற என் இயற்பெயரை, அபிராமி என்று மாற்றிக் கொண்டேன்.

''அப்படியென்றால், நீங்கள் டி.வியிலிருந்து சினிமாவுக்கு வந்தவரா?''

''சரியாகச் சொல்ல வேண்டுமென்றால் சினிமாவிலிருந்து டி.விக்குப் போய், அதன்பின் சினிமாவுக்கு வந்தேன்னுதான் சொல்லணும். நான் எட்டாம் வகுப்பு படித்தபோது, அடூர் கோபாலகிருஷ்ணனின் படத்தில் குழந்தை நட்சத்திரமாக நடித்தேன். ஆனால், அதற்குப் பிறகு சினிமாவிலிருந்து விலகி, படிக்கப் போய்விட்டேன். பள்ளிக்கூடப் படிப்பை முடித்து




• அபிராமி

கைக் கூட ஜாலியாய் நான் எடுத்துக் கிட்டேன். அப்புறம் என்னை கிண்டல் பண்ணின சீனியர்கள் பலர், என்னோட நட்பா இருக்கிறதையே பெருமைக்குரிய விஷயமா நினைக்க ஆரம்பிச்சுட்டாங்க."

"சினிமா வாய்ப்பு வந்தது எப்படி?"

"டி.வி.யில பார்த்திட்டு, சினிமாவுல நடிக்கக் கூப்பிட்டாங்க. என்னுடைய நேச்சருக்கு, இன்ன மாதிரி ரோல்கள்தான் பண்ணணும்னு நான் ஆரம்பத்திலேயே தீர்மானிச்சிட்டேன். ஒரு படத்தை ஒப்புக் கொள்வதற்கு முன்னால, கதை என்னன்னு கேட்கணும். அதிலே என்னோட கேரக்டர் எப்படிப்பட்டதுன்னு தெரிஞ்சுக்கணும். நான் ஒரு படத்துல எத்தனை சீன்ல வரேங்கிறது முக்கியமில்லை; என் நடிப்பு நல்லா இருக்குன்னு பேசப்படணும். இதைத்தான் அளவுகோலா வெச்சுக்கிட்டு நான் படங்



சண்டியர் நாயகி!

விட்டு, லீவில் இருந்த போது, ஏசியா நெட்டிலிருந்து அழைப்பு வந்தது. என் பெற்றோர்களும் சந்தோஷமாக அனுமதிச் சாங்க. டி.வி. மூலம் ரொம்ப சீக்கிரமாகவே பிரபலமாயிட்டேன்."

"காலேஜ்ல படிக்கிறபோது, டி.வி. மூலமா ரொம்பப் பிரபலமாயிருந்திங்களே! அந்த பாபுலாரிடி உங்களுக்குச் சந்தோஷமாக இருந்ததா?"

"காலேஜ்ல சேர்ந்த சமயத்தில் கொஞ்சம் சங்கடமாகத்தான் இருந்தது. நான் பாபுலர் என்பதால், புது மாணவிகளில் என்னை மட்டும் குறிவைச்சு ராகிங் பண்ணுவாங்க. ஆனா, டெலிபோன் மூலமா, முன்பின் தெரியாத டி.வி. நேயர்களோட நேரடியாய் உரையாடின அனுபவத்தால, அந்த ராகிங்





களை ஒப்புக் கொள்ளுகிறேன். சும்மா, காலேஜ், காதல் சப்ஜெக்ட் படங்கள்னு வந்த சிலவற்றை, தயக்கமே இல்லாம மறுத்திருக்கேன் நான்.

"என்னதான் ஸ்கேல் வைத்துக் கொண்டு அளந்து பார்த்து, படங்களை ஒப்புக் கொண்டாலும் இங்கே சினிமா என்பது,

ஹீரோக்களால் ஆக்கிரமிக்கப்படும் ஒரு சாதனம்தானே? இங்கே ஹீரோயினுக்கு கிளாமராக வந்து போவது தானே பிரதான பணி?"

"ஒரு விதத்தில் நீங்கள் சொல்லுவது சரிதான். ஹீரோ என்றால் ஆடணும், பாடணும், காதலிக்கணும், சண்டை போடணும். ஆனா, இதையெல்லாம் அவர் செய்வது ஒரு பெண்ணுக்காகத்தானே? எனவே அவளுக்கும்,



தன் திறமையை வெளிப்படுத்த காட்சிகளும், வாய்ப்புகளும் இருக்குமில்லையா? அதுபோல வாய்ப்புகள் இருக்கும் பட்சத்தில் தான் நான் நடிக்க ஒப்புக் கொள்ளுகிறேன்."

"கமல்ஹாசனை நீங்கள் இதற்கு முன் சந்தித்திருக்கிறீர்களா?"

"இரண்டு முறை, கமலை கலை நிகழ்ச்சிகளின்போது சந்தித்திருக்கிறேன். அப்போது, நான் அவரது ரசிகை என்றுதான் என்னை அறிமுகம் செய்து கொண்டேன். படங்களில் நடிக்க ஆரம்பித் தவுடன், அவருடன் நடிக்க வாய்ப்புக் கிடைத்தால் நன்றாக இருக்குமே என்று நினைத்திருக்கிறேன்."

"தமிழில் 'வானவில்' படத்தில் அறிமுகமாகி, பிரசாந்த், சரத்குமார் என்று சில படங்கள் பண்ணியபின், இத்தனை நாள் கழித்து கமல் நடிக்கக் கூப்பிட என்ன காரணம்?"

"இதற்கு என்னால் என்ன பதில் சொல்ல முடியும்? ஒரு நாள் கமல் எனக்கு ஃபோன் செய்து, சண்டியர் படத்தில் நான் நடிக்க வேண்டும் என்ற போது, எனக்கு இனிய ஆச்சரியம். இப்போது வாய்ப்பு கிடைத்திருப்பதுதானே பெரிய விஷயம்? இதுவரை வாய்ப்பு கிடைக்கவில்லையே என்று வருந்தப்பட்டு என்ன பயன்?"

"கமலுடன் நடிப்பதற்காக உங்களை எப்படி தயார்ப்படுத்திக் கொண்டு இருக்கிறீர்கள்?"

"அப்படியெல்லாம் ஒன்றுமில்லை. கமல் என்கிற மாபெரும் கலைஞரிடமிருந்து கற்றுக் கொள்ள நிறைய விஷயங்கள் இருக்கு. அவரிடமிருந்து நிறைய கற்றுக் கொள்ளணும் என்று ஆர்வமாய் இருக்கேன். இந்தப் படம் மூலம், என் நடிப்புக்கு ஒரு புது பரிமாணம் கிடைக்கும்னு நினைக்கிறேன்."

"சினிமாவைத் தவிர வேறு எது எதில் உங்களுக்கு ஆர்வம்?"

"முறைப்படி இசை கற்றுக் கொண்டிருக்கிறேன். எனவே இசையில் எனக்கு ரொம்ப ஆர்வம் உண்டு. நிறைய படிப்பேன். குறிப்பாக ஆங்கில நாவல்கள். ஜர்னலிஸ்ட் ஆகவேண்டும் என்று கூட நான் ஆசைப்பட்டிருக்கேன். நிறைய சினிமா பார்ப்பது உண்டு."

"நடிப்பில் உங்கள் இலக்கு என்ன?"

"நடிப்புடன் நின்று விடாமல், டைரக்ஷன் போன்றவற்றையும் எதிர்காலத்தில் தொட்டுப் பார்க்க ஆசை. 'மூன்றாம் பிறை ஸ்ரீதேவி, மௌனராகம் ரேவதி, கோபுரங்கள் சாய்வதில்லை சுஹாசினி' கேரக்டர்கள் எல்லாம் நான் ரொம்ப ரசித்தவை. அதுபோன்ற ரோல்களில் நடிக்க வேண்டும். நான் இப்போ குறிப்பிட்டது போல, பத்துப் பதினைந்து வருடங்கள் கழித்து, அன்றைய இளைய தலைமுறை, நான் நடித்த கேரக்டர்களை மேற்கோள் காட்ட வேண்டும் என்பதே என் ஆசை!

சந்திப்பு: **எஸ். சந்திரமௌலி**
அட்டை, படங்கள்: யோகா



வேலை வேணும்!

மருத்துவர்களின் கவனக் குறைவினால் ஏற்படும் அவலங்கள் பற்றி தினமும் கேள்விப்படுகிறோம். பெங்களூரிலிருக்கும் ரஜினியின் துயரத்தைக் கேட்டால் நெஞ்சு வெடிக்கிறது!

"எனக்கு அப்போ ஒன்பது - பத்து வயசிருக்கும். சாதாரண ஜலதோஷம்தான். டாக்டரிடம் போனோம். டெஸ்ட் டோஸ் போடாமலே பென்சிலின் போட்டு விட்டார். எனக்கு உடல் பூரா பற்றி எரியறாப் போலிருந்தது. உதடுகளில் ரத்தம் கசிய ஆரம்பித்தது. அந்த டாக்டரோ பென்சிலின் மாத்திரைகளையே மறுபடியும் கொடுத்தார். அதனுடைய பக்க விளைவினால் மெள்ள மெள்ள கண் பார்வையை இழந்தேன். மூன்று மாத காலம் விக்டோரியா ஆஸ்பத்திரியில் இருந்தேன். கண்ணிலிருந்து இருபத்தி நான்கு மணி நேரமும் தாரை தாரையாக நீர் வடியும். இன்னொரு அதிர்ச்சியும் காத்திருந்தது. கண்ணிமைகள் உள் பக்கமாக வளர ஆரம்பித்தன. பயங்கரமா முள் மாதிரி குத்தும். அதை வேறு ஒவ்வொரு மாதமும் வெட்டி எடுப்பார்கள். இருமுறை கார்னியல் கிராஃப்டிங் செய்தார்கள். ஆனால் தோல்விதான்..." என்கிறார் முப்பத்திரண்டு வயதாகும் ரஜினி. இத்தனை இன்னல்களிலும் சி.ஏ. தேர்ச்சி பெற்றிருக்கிறார் இவர்.

"சோதனை என்பது தொடர்கதை போல. என் அப்பாவிற்கு இரத்தப் புற்றுநோய் இருப்பது தெரிந்தது. அவரும் மூன்று வருடங்களுக்கு முன்னால் இறந்து போனார். இப்போது நானும் என் அம்மாவும்தான்" ரஜினி சொல்ல, நாம் உறைந்து போகிறோம்.

இத்தனைக் கஷ்டப்பட்டு படித்து முடித்த ரஜினிக்கு வேலையில்லை. பார்வையற்ற சி.ஏ.வா! என அவரது தகுதி மீது சந்தேகப்பட்டு உத்தியோகம் தர மறுக்கிறார்களாம். இதனால் மனத்தளவில் பாதிக்கப்பட்டிருந்த நேரத்தில் 'சஹஜ யோகா' என்ற தியான நிலை இவருக்கு கற்றுத் தரப்பட்டிருக்கிறது.

"இதனால் என் தன்னம்பிக்கை, பாஸிட்டிவ் எண்ணங்கள் வலுப்பட்டிருக்கின்றன" என்கிறார். "எனக்கு ஒரு வேலை வேணும். என் காலில் நான் நிற்க ஒரு உத்யோகம் கேட்கிறேன். இன்னமும் உடல் ஊனமுற்றவர்களை இந்தச் சமூகம் ஏளனத்துடனும் சந்தேகத்துடனும்தான் பார்க்கிறது. அது மாற வேண்டும்."

அது சரி, பென்சிலின் போட்ட டாக்டருக்கு என்ன தண்டனை?

"எங்களிடம் எழுத்து பூர்வமான ஆதாரம் இல்லை. மேலும் என் அப்பாவும் நோய்வாய்ப் பட்டதால் அதை விட்டுவிட்டோம்" என்கிறார்.

கட்டுரை, படம்: லதா சேகர்



காட்சிப் பிழை!

பார்த்துப் பார்த்து
நீ பாசிகளில் கோர்த்த
தாஜ்மஹால்;
உன்னால் புரட்டப்படாத
என் புதுக்கவிதைத் தொகுப்பு.
எது உன் விரல்?

வருகை உறுதியற்ற
பட்டாம் பூச்சிகளுக்கான
தோட்டக் காத்திருப்பு;
நின்று கொண்டிருத்தல்
நிச்சயமென்றறிந்தும்
கண்டுகொள்ளப்படாத
என் கால்தவம்.
எது உன் விழி...?

நள்ளிரவில்
எழுந்து போட்ட
நல்வரவுக் கோலம்;
தீண்ட மறுத்து
திருப்பி அனுப்பப்பட்ட
என் தீபாவளி வாழ்த்து.
எது உன் மனசு...?

சிவப்புக்குள்
மஞ்சள் மறைக்கும்
குங்குமம்;
பச்சைக்குள்
சிவப்பு பதுங்கும்
மருதாணி.
இதில் எதாக நீ...?

நெல்லை ஜெயந்தா

• பிரபஞ்சன்

காட்சி 10

மாலை, சற்று இருட்டும் நேரம்/வீடு.
பாத்திரங்கள்: வேதகிரி, விசாலம், சண்முகம்

கிராமாந்திரமான வீடு. முகப்பில் இரண்டு திண்ணைகள் கொண்டது. ஒரு திண்ணையை அறை மாதிரி செய்துள்ளார்கள். அந்த அறையில் விசாலம், நிறைய பத்திரிகைகள் புடை சூழ அமர்ந்திருக்கிறாள். அவள் சொல்லச் சொல்ல, உள்ளே வேதகிரி சமையல் செய்து கொண்டுள்ளார். இவள் சப்தம் போடுவதும், அவர் பதில் சொல்வதுமாக மாற்றி மாற்றிக் காட்சிகள்.



விசாலம்: *(சப்தமாக)* ஸ்டவ்வைப் பற்ற வச்சாச்சா?

வேதகிரி : *(சப்தமாக)* எரியறது.

விசாலம்: வாணலியை ஏத்தியாச்சா?

வேதகிரி : ரவை எந்த டப்பாவுல இருக்குன்னு சொல்லு.

விசாலம்: வெள்ளை டப்பாவில இருக்கு.

வேதகிரி: வெள்ளை... வெள்ளை டப்பா... வெள்ளைச் சனியன்... ஏழு வெள்ளை டப்பான்னா இருக்கு...

விசாலம்: கிழக்கால முதல் ரெண்டாவதா இருக்கிறதுதான் ரவா டப்பா.

வேதகிரி: கிழக்காலயா? எது கிழக்கு? எது மேற்குன்னு புரியலையே... எந்தக் கிழக்கும் மேற்கும்?

விசாலம்: சூரியன் உதிக்கும் திசை கிழக்கு.

வேதகிரி: 'கிளாஸ்' நடத்தறா... கஷ்ட காலம். *(ஜன்னல் வழியாகப் பார்க்கிறார்.)* சூரியனையே காணுமேடி... எந்த டப்பான்னு தெரியலையே.

விசாலம்: அதான்னா ரெண்டாவது இல்லை மூணாவது டப்பா.

வேதகிரி, எல்லாவற்றையும் எடுத்துத் திறந்து பார்க்கிறார்.

வேதகிரி : இதுவும் வெள்ளைச் சனியன்தான். ரவை

ஜீவநதி

மாதிரி இல்லையே...
(கையில் எடுத்துப் பார்க்கிறார். நீட்டிய பச்சைப் பயிறு என்னு தெரிகிறது.)
இந்தச் சனியும் வெள்ளையாத்தான் இருக்கு. உம்ம்...
(வாயில் போட்டுப் பார்க்கிறார்.)
இது மைதா...

(காட்சி மாறுகிறது. விசாலம், கதையில் சுவாரஸ்யமாக ஆழ்கிறாள். டப்பாக்கள் தரையில் விழும் சப்தம் கேட்கிறது.)



விசாலம்: அங்கென்ன பாத்திரம் உருள்றது... ஆகி வந்த பாத்திரம்னா. . உடைச்சுடாதேங்கோ.

வேதகிரி: உன் கல்யாண சீர். நாலு லாரியில போட்டு அனுப்பிச்சாரே உங்க தகப்பனார், அதை உடைக்கிறேனாக்கும்...

விசாலம்: என்ன சொல்றேன்? காதில விழலை. ஸாரின்னு சொல்றாப் போல இருந்ததே...

வேதகிரி: லாரி... லாரியில வந்துதே உன் சீர். அது பத்தித் தான் சொன்னேன்.

விசாலம்: பரவாயில்லை. சின்ன விஷயம். இதுக்குப் போயி 'ஸாரி' சொல்றேளே...

(சிரித்துக் கொள்கிறாள். வேதகிரி சர்க்கரை டப்பாவில் இருந்து, ரவை என்று நினைத்து எடுத்துப் போட்டுக் கொள்கிறார்.)

மாசா மாசம்தான் இந்தக் கூத்து நடக்கிறது. ஒரு மூணு நாள். ஒட்டல்ல சாப்பிட்டா என்ன கேடு? கத்துப் பிசுநாரிகள் குடும்பம்... பரம்பரை புத்தி... சரியான அழுக்கு மூட்டை· வகையறா...

ஒரு நாய் வந்து திண்ணையின் ஓரம் ஒண்டுகிறது. அதைப் பார்த்து...

என் மாமியாரை உனக்குத் தெரியுமே. ஒருநாள் ஒரு பிடி சாதம் வச்சிருக்காளா உனக்கு. ஊசிப் போனதைத் தின்ற மனுஷி. உனக்குத்தான் தெரியுமே...

(நாய் ஏதோ முனகுகிறது)

ஒரு தட்டில் உப்புமாவை வைத்துக் கொண்டு வருகிறார் வேதகிரி. எதிர்த் திண்ணையில் அமர்ந்து, ஸ்பூனில் எடுத்துச் சுவைக்கிறார். முகம், பலவிதமாக மாறுகிறது.

வேதகிரி: என்ன இது தித்திக்கிறது... என்னமோ மாதிரி இருக்கே...

விசாலம்: உப்புமா பண்றேன் பேர் வழின்னு, சொஜ்ஜி பண்ணி சாப்பிடறேளா... சமர்த்து...

(சிரிக்கிறாள். வேதகிரி அவளை வெறிக்கிறார். வாசலில் ஸ்கூட்டரை நிறுத்தி விட்டுப் படி ஏறுகிறான் சண்முகம். அப்பாவின் பக்கத்தில் அமர்கிறான்.)

விசாலம் தொடர்ந்து... சாப்பிட்டியோடா?

சண்முகம்: ஆச்சு. இந்தா (ஒரு பொட்டலத்தை அம்மாவிடம் நீட்டுகிறான். விசாலம் வாங்கிக் கொள்கிறாள்.)

விசாலம்: கோமள விலாஸ் டிபனாடா?

சண்முகம்: இல்ல. என் பிரண்ட் ஒருத்தர் வீட்டுக்கு வரச் சொல்லி 'ரிக்வெஸ்ட்' பண்ணிக்கிட்டார். அங்கயே டிபன் ஆயிடுத்து. உனக்கும் டிபன் கட்டிக் கொடுக்கச் சொல்லி வாங்கி வந்துட்டேன்.

விசாலம்: என்ன சாதி அவர்?

வேதகிரி: இது மாதிரி பேசப்படாதுன்னு சொல்லி இருக்கேனில்லையா?

விசாலம்: பார்டா சம்முவம்... உங்க அப்பா சொஜ்ஜி சாப்பிடறார்...

(வேதகிரி மனைவியை முறைக்கிறார். சண்முகத்திடம் திரும்பி)

வேதகிரி: உன் சம்சாரத்துக்கிட்டேந்து ஏதானும் பதில் வந்ததோ?

சண்முகம்: இல்லை.

விசாலம்: மகா அழுத்தக்காரியாச்சே, அவ.

வேதகிரி: சுசிலா அப்படி இல்லை. நீ ஒருவாட்டி நேரா போயிப் பேசிப் பாரேன்...

சண்முகம்: நானா...? அது முடியாது.

வேதகிரி: புருஷன் பெண்சாதிக்குள்ள என்னடா கௌரவம்?

விசாலம்: என் பிள்ளை ஆண் பிள்ளை. அவன் தாழ்ந்து போக அவசியம் இல்லை.

வேதகிரி: பேஷ். நடக்கட்டும். அம்மாவும் பிள்ளையும் மலை உச்சியிலே இருந்து தலைகீழா குதிக்கிறீங்க. செய்யுங்கோ...

(வேதகிரி கையில் இருக்கும் தட்டைப் பார்த்து)

சண்முகம்: என்ன டிபன் இது?

வேதகிரி: இதுவா... இது உப்போஜ்ஜி. அதாவது உப்புமா சொஜ்ஜி 'ஃபியூஷன்' காம்போஜியும் கல்யாணியும் கலந்து 'கல்போஜி' ஆற மாதிரி...

(திண்ணை நாய் இவர்களையே பார்க்கிறது)

காட்சி II

மதியம்/அலுவலகம் - வெளியிலிருந்து உள்ளே நோக்கி...

பாத்திரங்கள்: கீதா, அலுவலகச் சிப்பந்திகள்

நகரத்தின் சுறுசுறுப்பான இயக்கம். கடுமையான வெயிலில் வண்டிகளிலும் நடந்தும் நகரும் மனிதர்கள்; விரையும் மனிதர்கள்; நடைபாதையில் அழுக்குக் கந்தல் போல் சுருண்டு படுத்திருக்கும் பிச்சைக்காரன்/முகம் தெரியாத நோயாளி. வாழ்க்கை விரைந்தோடிக் கொண்டிருக்கிறது.

தரைப் பகுதியில் இருந்து மாடிக்கு, ஒவ்வொரு படியாக ஏறி மேலே வருகிறாள் கீதா. (காமெரா, மேலே இருக்கிறது. ஒவ்வொரு அடியாக மேலே காமெராவை நோக்கி வருகிறாள் கீதா.)

டைப்பிஸ்ட் அவளைக் கவனித்து விடுகிறாள். (இவள் முதல் பகுதியில், கீதாவுக்குத் தண்ணீர் கொடுக்கவும் தயங்கியவள்.) எழுந்து அவளிடம் சென்று வரவேற்கிறாள்.

டைப்பிஸ்ட்: வாங்க மேடம். எம்.டி. உங்களுக்கு அப்பாய்ண்ட்மென்ட் கொடுத்த போதே புரிஞ்சுக்கிட்டேன். வாழ்த்துக்கள்.

கீதா: ஒரு ரிக்குவெஸ்ட். நான் மேடம் இல்லை. கீதா. கீதா மட்டும்தான். அப்படிச் சொன்னாதான் எனக்குச் சந்தோஷம். அப்புறம், எனக்கு வேலை கிடைச்சுடுமா?

டைப்பிஸ்ட்: கிடைச்சாச்சு. வாங்க... ரெண்டு நிமிஷம் உக்காருங்க... தண்ணி குடிங்க... நிதானமா எம்.டி.யை பாருங்க...

கீதா அமர்கிறாள். நீர் அருந்துகிறாள். பையிலிருந்து, சிறிய கைக்குட்டையை எடுத்து முகம் துடைத்துக் கொள்கிறாள். உள்ளங்கை அகலக் கண்ணாடியில் முகம் பார்த்துத் திருப்தி கொள்கிறாள். கலைந்த தலைமுடியை, முகம் அழுந்தத் தடவி, சரி செய்கிறாள். துப்பட்டாவை ஒழுங்கு படுத்திக் கொள்கிறாள்.

கீதா: ரொம்ப தேங்க்ஸ்...

டைப்பிஸ்ட்: தெய்வநாயகி. ரொம்ப பெரிசா இருக்கு. தேவான்னு சொல்லலாம்.

கீதா: அழகான பெயர். எதுக்குச் சுருக்கணும்...

தெய்வநாயகி நட்பு தோன்றச் சிரிக்கிறாள்.

தெய்வநாயகி: ரெடியா...எம்.டி.யைச் சந்திக்கலாம் இல்லையா?

கீதா 'ஆம்' எனத் தலையசைக்கிறாள். தெய்வநாயகி எம்.டி.யிடம் பேசுகிறாள். வசனம் தேவையில்லை. கீதா, அலுவலகத்தைச் சுற்றிக் கண்ணோட்டம் இடுகிறாள். மீண்டும், காமிரா டைப்பிஸ்ட்டிடம் வரும்போது;

''நேத்து உங்களுக்குப் பண்ணின ஆபரேசனுல ஒரு சின்ன தவறு நடந்திடுச்சு... ஸாரி...''

''சின்ன தவறு இல்லை, டாக்டர்! பெரிய தவறு. நான் பேஷண்டுக்குத் துணையாய் வந்தவன்!''

- சகிதா முருகன்

தெய்வநாயகி: நீங்க போகலாம்.

கீதா, கதவைத் தட்டிவிட்டு அறைக்குள் நுழைகிறாள்.

காட்சி: 12

மாலை - இருட்டுக்கு முந்தைய நேரம்/தெரு.

பாத்திரங்கள்: சேது, ரேணுகா, கண்ணன்

நிறைய ஒண்டுக்குடித்தனங்கள் இருக்கும் பகுதி என்பது பார்த்தாலே தெரிகிறது. அந்தஸ்தில் கீழ் மட்டத்தில் இருப்பவர் வாழும் பகுதி. மிகவும் சிறிய வீடு. மேலே நிப்பிடிக்காத கூரை. கேங் பலகையால் ஆனது கதவு.

ரேணுகா தலை வாரிக் கொள்கிறாள். பவுடரை ஒற்றிக் கொள்கிறாள். கண்ணுக்கு மை வைத்துக் கொள்கிறாள். தண்ணீர்ப் பாத்திரத்தில் சுருட்டி வைக்கப்பட்ட பூவைத் தலையில் சூட்டிக் கொள்கிறாள். துவைத்த பழைய புடைவை உடுத்தியிருக்



கிறாள். மேட்ச் ஆன ஜாக்கெட்.

'சீப்'பான மினுக்கும் செருப்பை மாட்டிக் கொள்கிறாள். ஜன்னலின் ஓரம் இருந்த ஒரு டப்பாவை எடுத்து, பாக்குத் தூளை வாயில் போட்டுக் கொள்கிறாள். சாவியை எடுத்து, கதவை இழுத்துச் சாத்திவிட்டு, ஜாக்கெட்டுக்குள் இருக்கும் சின்ன பர்சில் சாவியை வைத்து மீண்டும் அங்கேயே வைத்துக் கொள்கிறாள்.

சந்துகளைக் கடந்து மெயின் ரோடுக்கு வந்து நிற்கிறாள்.

சேது, தன் ஆட்டோவை ஒரு கடையில் நிறுத்தி, இறங்கிச் சென்று, வாசனை வத்தி வாங்கி வந்து ஆட்டோவில் சொருகிப் பற்ற வைத்துக் கொண்டு, சாமி படத்தை வணங்கி ஆட்டோவை நகர்த்துகிறான்.

சேது, ரேணுகா பக்கம் வந்து நிறுத்துகிறான்.

ரேணுகா: சேது அண்ணனா? போலா மாண்ணே.

சேது: ஏறு... எங்க போகணும்?

ரேணுகா: குளோப் ஓட்டலுக்குப் போங்கண்ணே.

வண்டி புறப்படுகிறது.

ரேணுகா: எப்படி அண்ணே இருக்கீங்க?

சேது: வண்டி ஓடுது....

ரேணுகா: சொந்த ஆட்டோ போடுங் கண்ணா கேக்க மாட்டேங்கறேங்க... ராப்பூர கண்ணு முழிச்சி, சேட்டுக்கு அழுறீங்க.

சேது: போடுவோம்... பாங்க் மானேஜர், இதோ அதோன்னு வழுக்கறாரு..

ரேணுகா: எல்லார்க்கும் எதையாவது 'வெட்ட' வேண்டி இருக்குண்ணே. அவன் அவன், தன் வேலையைச் செய்யறதுக்கே 'மால்' கேக்கறான். என்னை எடுத்துக்க. தினம் நாநூறு, ஐந்நூறு கிடைக்குது. புரோக் கருக்குப் பாதி போயிடுது... மீதியில பாதி போலீசுக்கு. லாட்ஜ் பையன்களுக்குப் போவ என் கையில நிக்கறது அம்பது ரூபாதான். வெறும் அம்பது.

சேது: ப்ச்

காமெரா, பட்டணத்தைச் சுற்றுகிறது. குரல்கள் மட்டும் கேட்கின்றன. 5 நட்சத்திர ஓட்டல்கள், வீராணம் குழாய் வீடுகள், பெரிய பெரிய கம்பெனிகள், வீடுகள், தெருப் பிச்சைக்காரர்கள், துணிக்கடை பொம்மைகள்.

ரேணுகா: உன் பிரண்டுக்கு வேலை கிடைச்சுடுச்சாண்ணே.

சேது: தெரியலை. அவனைப் பார்த்து ஒரு வாரம் ஆச்சு.

சில காட்சிகள் சென்ற பிறகு

ரேணுகா: வீடு மாத்தணும்ணே.

சேது: ஏன்?

ரேணுகா: எங்களை மாதிரிப் பட்ட வங்க, ஒரே இடத்துல ரொம்ப நாள் இருக்கக்கூடாது.

சேது:......... எந்த ஏரியாவில பார்க்கலாம்?

ரேணுகா: பக்கத்து வீட்டுப் பொண்ணுகளைப் பத்திக் கவலைப்படாத, அவங்களைப் பத்தி 'பொறம்' பேசாத சனங்க இருக்கிற ஏரியாவா இருக்கணும்.

சேது: அப்படி ஒரு ஏரியா இருக்கா? எல்லார்க்கும் அடுத்த மனுஷர் பத்திதானே கவலையே... எங்க ஏரியா பெருமாள் கோவில்ல ஒரு பெரியவர் பேசினாரு... தருமன், துரியோதனன் ரெண்டு பேரையும்



"அம்மா வந்துட்டுப் போனாங்களாமே, என்ன விஷயம், மாவா?"

"யாரு கண்டா, நான் 'மெட்டி ஒலி' பார்க்கிறப்ப வந்தாங்க; அண்ணாமலை பார்த்துட்டு இருக்கறப்ப போனாங்க, அவ்ளோதான் தெரியும்."

- செ.ரா. ரவி

அவங்க குரு துரோணர் உலகத்தைப் பார்த்துட்டு வர அனுப்பினாராம். வந்து, தருமன், எல்லாரும் நல்லவங்கன்னானாம். துரியோதனன், உலகத்துல எல்லோரும் அயோக்கியப் பயலுகன்னானாம்.

காட்சி: 13

பகல்/வீடு

புறத்திலிருந்து அகத்தை நோக்கி

பாத்திரங்கள்: சேது, கண்ணன்

தெருவின் ஓரமாக ஆட்டோவை ஓரம் கட்டிவிட்டு இறங்கி, கேட்டைத் திறந்து கொண்டு, தெரு வாசலை ஒட்டிய மாடி அறைக்கான அழைப்பு மணியை ஒலித்து விட்டு மேலே வருகிறான் சேது.

அறையின் வெளியே குளியல் அறையில் சப்தம் கேட்கிறது. அதன் அருகே சென்று,

சேது: கண்ணா... நான்தான்டா... காத்திருக்கேன்...

அறைக்குள் வந்து, ஒற்றைக் கட்டிலில் அமர்கிறான். கட்டிலில் புத்தகங்கள், அவிழ்த்துப் போட்ட கைலி, பனியன் அடைத்துக் கிடக்கின்றன. சுவரில் ஐஸ்வர்யா அல்லது ஒரு நடிகை சிரிக்கும் காலண்டர் அல்லது படம். ஒரு பக்கம் ஓஷோவின் படமும். தரையில், பேப்பர் விரித்துப் புத்தகங்கள் அடுக்கப்பட்டுள்ளன. ஒன்றை எடுத்துப் புரட்டுகிறான், சேது. பிறகு, மேசைமேல் இருக்கும் 'டேப் ரிகார்டரை' இயக்குகிறான். பாரதியின் கவிதை வரிகளை எம்.எஸ் அல்லது மகாராஜபுரம் அல்லது ஜெயஸ்ரீ பாடுகிறார்.

இடுப்பில் துண்டோடு, தலையைத் துவட்டிக் கொண்டு வருகிறான் கண்ணன்.

கண்ணன்: வாடா!

சேது: வேலை விஷயம் என்னாச்சு?

கண்ணன்: தெரியலையே... கிடைக்கும்னா, இந்நேரம் கடிதம் வந்திருக்குமே...

குரலில் கவலை இல்லை. இயல்பாகவே பேசுகிறான்.

சேது: ரேணுகாகூட கேட்டுச்சு.

திரை அடைப்புக்குள் செல்கிறான். அங்கிருந்து,

கண்ணன்: எப்படி இருக்கு ரேணு?

சேது: வழக்கம் போல... வீடு மாத்தணும்பா. அதான் அலைஞ்சுக்கிட்டு இருக்கேன்.

கண்ணன்: பாங்க் மேனேஜர் இன்னா சொல்றாரு...

சேது: தயங்குறார்பா... 'வெயிட்டான' ஆள் சொல்லணும்னு எதிர்பார்க்கிறார் போல...

கண்ணன் பேண்ட்டோடு, சட்டை பட்டன் போட்டபடி வருகிறான்.

கண்ணன்: வா.. எங்கயாவது சாப்பிட்டு விட்டு, மேனேஜரைப் பார்ப்போம்... நான் 'வெயிட்டான ஆள்' இல்லியேம்பாரோ. என் வெயிட்டு அறுபத்தெட்டு கிலோதான்.

சேது, ஒரு சிகரெட்டை எடுத்துப் புகைத்துக் கொள்கிறான். கண்ணனும் சிகரெட் பற்ற வைத்துக் கொள்கிறான்.

கண்ணன்: சரோஜா என்ன சொல்லுது? பார்த்தியா?

சேது: சொந்த ஆட்டோ போட்டதும் தான் கல்யாணம்னு அவ அப்பா சொல்றாராம்.

கண்ணன்: சொந்த ஆட்டோவுக்கும் கல்யாணத்துக்கும் என்ன சம்பந்தமாம்?

சேது: அந்த முட்டாப் பயலைத்தான் கேக்கணும். மருமவனுக்குச் சொத்து இருக்கணும்னு நினைக்கிறார் போல...

கண்ணன்: அந்த ஆள் கிடக்கிறார். சரோஜா சம்மதிச்சா வரச் சொல்லு... கோயில்ல வச்சு கல்யாணத்தை முடிப்போம்.

சேது: (தலையசைத்தபடி) யோசிப்போம்.

வாசலில் மிளகாய் காயப் போட வந்த சுசிலாக்கா தலையசைத்துக் கொள்கிறான்.

சுசிலாக்கா: ம்...விடிஞ்சா, பொழுது போனா பசங்களுக்கு இதே பொழப்பா போச்சு...

(தொடரும்)



அமரர் கல்கி நினைவு
இளமைச் சிறுகதைப் போட்டி – 2003

படைப்பாளிகளே, வாசக எழுத்தாளர்களே! நீங்கள் அனைவரும் ஆவலோடு எதிர்பார்த்துக் கொண்டிருக்கும் சிறுகதைப் போட்டி வந்தே விட்டது!

முதல் பரிசு – ரூ.10,000 இரண்டாம் பரிசு – ரூ. 7,500
மூன்றாம் பரிசு – ரூ.5000

தவிர, பிரசுரத்துக்குத் தேர்வாகும் ஒவ்வொரு கதையும் ரூ.500 சன்மானம் பெறும். அறிமுக எழுத்தாளர் எனில், வழக்கம் போல் போனஸ் உண்டு! எழுதுபவர், முப்பத்தைந்து வயதுக்குட்பட்டவராக இருந்தால் கூடுதல் போனஸ்! மற்ற நிபந்தனைகள் வழக்க மானவை.

கதை இளைஞர்களை மையப்படுத்தி எழுதப்பட வேண்டும் என்பது முதல் நிபந்தனை.

விதிமுறைகள்:


- கல்கியில் 4 பக்கங்களுக்கு மிகாமல் இருப்பது நல்லது.
- சொந்தக் கற்பனைதான் என்பதற்கு உறுதிமொழிக் கடிதம் வேண்டும். அது இல்லாத கதைகள் பரிசீலிக்கப்படமாட்டா.
- அறிமுக எழுத்தாளர் எனில், இதற்கு முன் எந்தப் பத்திரிகையிலும் எழுதியதில்லையென்றும் போட்டி முடிவு வெளியாகும் வரை எழுதுவதில்லை என்றும் உறுதிமொழி தர வேண்டும்.
- படைப்பாளி முப்பத்தைந்து வயதுக்குட்பட்டவராயின் ஏதாவதொரு அத்தாட்சி (உம்: பத்தாம் வகுப்பு டி.சி.ஜெராக்ஸ்) கண்டிப்பாக இணைக்கப்பட வேண்டும்.
- முழு வெள்ளைத் தாளில் ஒரு பக்கத்தில் மட்டுமே எழுத வேண்டும்.
- தேர்வாகாத கதைகளைத் திரும்பப் பெற, போதிய தபால் தலைகள் ஒட்டிய அஞ்சல் உறை இணைக்கப்பட வேண்டும். பின்னால் தனியே அனுப்பிப் பயனில்லை.
- ஒருவரே எத்தனை கதைகள் வேண்டுமானாலும் அனுப்பலாம்.
- பரிசுக்குரிய கதைகளை நடுவர் குழு பரிசீலித்துத் தேர்ந்தெடுக்கும். சந்தேகம் எழும் விஷயங்களில் கல்கி ஆசிரியரின் தீர்ப்பே இறுதியானது.
- முடிவு வெளியாகும் வரை, எவ்வித கடிதப் போக்குவரத்தோ, தொலைபேசி விசாரிப்புகளோ கூடாது.
- **'அமரர் கல்கி நினைவுச் சிறுகதைப் போட்டி – 2003'** என்று உறையின் மேல் தவறாமல் குறிப்பிட்டு, அனுப்ப வேண்டிய முகவரி:

ஆசிரியர், கல்கி, கல்கி பில்டிங்ஸ், 47-NP, ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காட்டுதாங்கல், சென்னை - 600 097.

- கதைகள் வந்து சேரக் கடைசித் தேதி : **ஜூன் 15**
- போட்டி முடிவும் முதல் பரிசுக் கதையும் ஆகஸ்ட் 3 ஆண்டு மலரில் வெளியாகும்.


படைப்பாளிகள், வாசக எழுத்தாளர்கள் அனைவரும் உற்சாகத்துடன் கலந்து கொண்டு சிறப்பிக்க அழைக்கிறோம்.

– ஆசிரியர்









காவடி கணேசன்!

“ஒரு வருஷமாவது உடம்பு முழுவதும் கொக்கிகளை அணிந்து கொண்டு ஹெலிக்காப்டரில் பறவை போல தொங்கியபடியே பால் காவடி எடுத்து முருகனுக்கு அபிஷேகம் செய்ய வேண்டும் என்பதுதான் என் நீண்ட நாள் ஆசை” என்கிறார் கணேசன்.


சிவகங்கை மாவட்டம் பிள்ளையார்பட்டியைச் சேர்ந்த முப்பத்தெட்டு வயது கணேசனுக்கு ஆண்டு தோறும் வித்தியாசமான காவடிகளை எடுத்து முருகன் கோவிலுக்குச் செல்வதென்றால் மிகவும் பிடித்தமான விஷயம்.

கடந்த எட்டு ஆண்டுகளில் இவர் எடுத்த காவடிகள் வித்தியாசமானவை. சிங்கப்பூரில் உள்ள தண்டாயுதபாணி கோவிலுக்கு நூற்றியொரு லிட்டர் பால் காவடி எடுத்ததுதான் ஹைலைட். உடம்பு முழுவதும் இரும்பு கொக்கிகள் அணிந்து ஒரு லிட்டர் பால் கொண்ட சுமார் நூற்றுயொரு பால் பாட்டில்களை அந்தக் கொக்கிகளில் தொங்கவிட்டு நடந்து போக மிரண்டு போன சிங்கப்பூர் போலீஸ் சுற்றி பாதுகாப்பு கொடுத்ததாம். பால் பாட்டில்கள் அறுந்து விழுந்துவிடும் என்பதற்காகத் துண்டுகளால் மறைக்கச் சொல்லி அழைத்துப் போயிருக்கிறார்கள்.

பத்தொன்பது இளநீர், இருபத்தியொரு எலுமிச்சம் பழம், எண்பத்து நான்கு பன்னீர் சொம்புகள் என்று அத்தனையும் உடலில் மாட்டிக் கொண்டு சுமார் ஐந்து கி.மீ. தூரம், ஏறத்தாழ ஆறு மணி நேரம் சுமந்து சென்றிருக்கிறார். காவடியை தூக்கிச் செல்வது எவ்வளவு தூரம், எத்தனை மணி நேரம் என்றாலும் காவடி செலுத்தியபின் அதே கம்பீரத்துடன் வீட்டிற்குத் திரும்பி வருவதுடன் கொக்கிகள் குத்திய இடம் தெரியாமல் மாறிவிடுவதும் தான் முருகனின் அருள் என்கிறார் கணேசன்.

“நான் பெருமைக்காகவும், புகழுக்காகவும் இந்தக் காவடியை எடுக்கவில்லை. முருகனின் அருள் எனக்குக் கிடைக்கிறது. இருபத்தோரு நாள் விரதம் இருப்பேன். காவடி எடுக்க மூன்று நாள் இருக்கும்போது உணவு எதுவும் சாப்பிட மாட்டேன். தண்ணீர்தான் குடிப்பேன். வாழும்வரை முருகனுக்கு காவடி எடுக்கத் தவற மாட்டேன்” என்கிறார் கணேசன்.

- கி. சிங்கார வடிவேல்





மின் மினி
காய்த்த மரமொன்று

கொடி போன்றதொரு மனசுனக்கு
ஊஞ்சலாட
என் வார்த்தைகள்
உன்னுள் பூ மலர்த்தும்.

நட்டு வைத்த வயலின்
குறுக்கே பாய்ந்த
இளங்கன்றின் குளம்புப் பதிவுகளாய்
எது கொண்டும் மறைக்கவியலாது
நீ தொட்ட என் மனசை.

முன் செல்லும் ஒருவன்
இழுத்துவிட்ட முள் விளாரொன்று
பின் வருபவனின்
கண்ணிவெடிப்பது போல்
ஆகி விடுமென
எவரிடமும் பேசாது
ஒற்றைக் குருவி போல
கூடு கட்டிக் கொண்டிருக்கிறேன்.

உதறிச் செருகும் முந்தானையில்தான்
சுங்கு வைக்கிறாயெனில்
சொல்லிப் போகும்
வார்த்தையில் கூடவா
மிச்சம் வைப்பது?

- பச்சியப்பன்



கோபாலன் பஸ்ஸிலிருந்து இறங்கி தென்கரை கிராமத்தை நோக்கி நடக்கத் தொடங்கினான். மதுரைக்குச் சென்று காலையிலேயே மருந்து வாங்கி வந்திருந்தான். இன்றைக்கு எப்படியும் கொடுத்து விட வேண்டும். ஒரு மாதமாக வயலில் பயிர்கள் காய்ந்து போய், நிற்கவே தெம்பில்லாமல் கிடக்கின்றன. இன்றைக்குக் கொடுத்து மருந்து வைத்து விட்டால் ஒரு வேலை முடிந்து விடும்.

கோபாலன் எம்.ஏ படித்திருக்கிறான். அஞ்சல் வழியே படித்த படிப்பு. வருகிற வழியிலேயே சங்கரபாண்டியைப் பார்த்து விட்டு வந்தான்.

சங்கரபாண்டிக்கு வயது எழுபது. இன்னும் நன்றாகக் கண் தெரியும். நல்ல உயரம். நெடுநெடுவென்று தென்னை மரம் போல இருப்பார். வேட்டியும் மேல் துண்டும் மட்டும் அணிந்திருப்பார். உரக் கடைக்கு அருகில் இருந்த காலாவதியான லாட்டரிக்கடையில் அமர்ந்து அரசியல் பேசிக் கொண்டிருந்த சங்கரபாண்டி கொடுத்த ஐடியாதான் அது.

ஏற்கனவே வயலில் தண்ணீர் இல்லாமல் காய்ந்து கிடக்கிறது. நான்கு ஏக்கர் நிலமும் தரிசாகி விடக் கூடாதே என்று, கிணற்று நீரை மோட்டார் வைத்து ஹோஸ் பைப் மாட்டி தண்ணீரைப் பாய்ச்சினால், அது இரண்டு ஏக்கருக்குக்கூட போதவில்லை. வங்கியில் நகையை வைத்து பணம் வாங்கி போர் போட்டு விட்டு, தண்ணீரை அனுப்ப நினைக்கும்போது மோட்டார் பல்லை இளித்துக் கொண்டு நின்றுவிட்டது. அதை ரிப்பேர் பார்க்க ஆளைக் கொண்டு வந்து காண்பித்தான். அவன் பழைய சாமானைக் கொண்டு வந்து போட்டு விட்டு இன்னும் சிக்கலாக்கி விட்டான்.

ஒரு வாரமாக மெக்கானிக்குடன் வயல் பக்கமே இருந்து, வீட்டுப் பக்கம் செல்லாமல் பழியாகக் கிடந்ததில் இப்போது தண்ணீர் வருகிறது. ஆனால் கூடவே புதிதாக ஒரு பிரச்னை! வயலில் பயிர்கள் ஏறக்குறைய தள்ளாடிக் கொண்டு மிதிபட்ட மாதிரி கிடந்திருந்தன.

காரணம் புரியாமல் பார்த்தபோதுதான் அந்தக் காட்சி அவனுக்குள் பகீரென்றது. கூட்டமாக ஐம்பது, அறுபது நாரைகள் புழு, பூச்சிகளைச் சாப்பிடுவதற்காக வந்து அப்படியே பயிரின் மேல் அமர்கின்றன. அவற்றின் எடை தாங்காமல் பயிர்கள்



சூர்யகுமாரன்

நாரை

குடை சாய்ந்தது போல கவிழ்ந்து கொள்கின்றன. இப்படியே போனால் ஒரு பயிரும் தேறாது. இந்த வட்டம் பயிரும் வேணாம். ஒண்ணும் வேணாம். பேசாமல் நிலத்தை நாத்து நட்டதோடு நட்டம் போகட்டும் என்று தரிசாகப் போட்டு விடலாம் என்றார் அப்பா. அப்போதுதான் சங்கரபாண்டி அந்த யோசனையைச் சொன்னார்.

“விசனப்படாத செய்யணும்பா. நாஞ் சொல்றதைக் கேளு. உரக்கடையிலப் போய் ப்யூரிடான்னு கேளு, கொடுப்பான். அதை வாங்கிக்க. அப்படியே மீன் மார்க்கெட்டுக்குப் போய் சின்னச் சின்னதா பாம்புக் கெண்டை, இல்லைன்னா வட்டக் கெண்டை மீனு கிடைக்கும். அதை வாங்கிக்க”

“ப்யூரிடான் விஷமாச்சே.”

‘விஷம்தான். அதை பாம்புக்கெண்டையோட உடம்பில காதோரம் இருக்கிற செதில்ல இல்லைன்னா உடம்பை கத்தியால இலேசாக் கீறி மருந்தைத் தடவி, அதை வயல்ல அங்கங்க போட்டு வைச்சிடு.”

“அதை திங்க வர்ற நாரைங்க தின்னுட்டு

செத்துடுமா. இது பாவமில்லையா?"

"இந்த பஞ்ச காலத்துல உசிரோட இருக்கறதே பாவம்தாம்பா."

அரைகுறை மனத்தோடு சங்கரபாண்டி சொன்னபடி மருந்தும், மீனும் வாங்கிக் கொண்டு வந்துவிட்டான் கோபாலன். கூட்டம் கூட்டமாக தொலைவில் தெரிந்தன. வாதாமடக்கி மர நிழலில் அமர்ந்தான். மூட்டையைப் பிரித்து வைத்தான். பாம்புகெண்டை மீன்கள் சின்னஞ்சிறியதாக இருந்தன. அவற்றின் வாயைத் திறந்து விஷ மருந்தைத் திணித்தான். பிறகு அவற்றை வயலில் ஆங்காங்கே வீசிட்டு நடந்தான். அவற்றை வந்து கொத்தித் தின்னும் நாரைகள் தன் கண்ணெதிரே செதுப் போவதைப் பார்க்க விரும்பவில்லை கோபாலன்.

வயலிலிருந்து இரண்டு தெருவைக் கடந்தால் ஒரு தியேட்டரும் டீக்கடையும் வரும். அங்கே போய் உட்கார்ந்திருக்க மனமில்லாமல் அமர்ந்திருந்தான். அப்போது அவனைத் தேடிக் கொண்டு செல்வராக வந்துவிட்டான். வயலில் வேலைக்கு இருப்பவன். நேற்றிரவு வராமல் கம்பி நீட்டினவன். இப்போது எதுமே தெரியாதவன் போல சிரித்தான். நேற்று வராததற்குச் சிறு வருத்தம்கூட தெரிவிக்கவில்லை. அதே சிரிப்பு மாறாமல் ஐம்பது ரூபாய் கடனாகக் கேட்டான். நிச்சயம் திருப்பித் தர மாட்டான். பணத்தை எடுத்துக் கொடுத்தான். வயல் வேலையை தான் இருந்து பார்த்துக் கொள்வதாகச் சொன்னான். அவனை நம்பலாமா என்று தெரியவில்லை.

இன்றைக்குப் பூங்கொடியைச் சந்திக்க வேண்டும். பூங்கொடி அவனது அத்தை பெண். திருச்சியில் ஹாஸ்டலில் தங்கிப் படித்துக் கொண்டிருக்கிறாள். நன்றாகச் சமைப்பாள். கவிதை எழுதுவாள். தெருவையே அடைத்த மாதிரி கோலம் போடுவாள். சின்ன வயதிலிருந்தே ஊருக்குச் செல்வதென்றால் பூங்கொடியைப் பார்க்கப் போகிறோம் என்று உற்சாகம் வந்து விடும். ஆடிப்பெருக்கு பார்ப்பதற்கென்று காவிரிக் கரையில் பூங்கொடியின் அருகில் நின்று கொண்டிருக்கையில், தானும் அவள் பார்க்கும்போதே டைவ் அடித்து வீரம் காட்ட வேண்டுமென்று நினைத்துக் கொள்வான். ஸ்ரீரங்கம் செல்லும்போது காலில் சக்கரம் கட்டி விட்ட மாதிரி அவள், சக்கரத்தாழ்வார் சந்நிதியில் சுற்றிக் கொண்டிருப்பதைப் பார்த்துக் கொண்டே இருக்க வேண்டும் போலிருக்கும். இப்போது பூங்கொடி அவனது அம்மா வழியில் யாருக்கோ கல்யாணம் என்று வந்திருக்கிறாளாம். நாராயணபுரத்தில் இருக்கிறார்கள் என்று செய்தி வந்தது. இந்தத் தரம் எப்படியும் தன் மனத்தின் அடி ஆழத்தில் வைத்துக் கொண்டிருக்கும் பூங்கொடியைப் பற்றின அன்பை, இல்லை பாசத்தை..சே! காதலை, அவளிடம் சொல்லி விட வேண்டும் என்று தீர்மானித்துக் கொண்டான்.

"அவரு தமிழ் ஆசிரியராயிருக்கலாம். அதுக்காக தன்னோட நாலு பையன்களுக்கு இப்படியா பேர் வைக்கறது...!"

"என்ன பேர் வச்சிருக்காரு...?"

"'உயிரப்பன்', 'மெய்யப்பன், 'உயிர் மெய்யப்பன்', 'ஆய்தப்பன்'னு வச்சிருக்காரு...!"

– லட்சுமி ஆவுடைநாயகம்



அடுத்த நாள் தம்பியை வயலுக்கு அனுப்பி விட்டு மதுரைக்கு புறப்பட்டான். புறப்படும்போதே அம்மா, "அந்த ராங்கிக்காரிங்க எல்லாம் நாராயணபுரத்துக்கு வந்திருக்காளாமில்லை?" என்றார். அம்மாவுக்கு அத்தையைப் பிடிக்காது. பூங்கொடி பற்றின தனது நினைப்பை அறிந்தால் சாமியாடி விடுவாள். மதுரையில் நண்பர்களைப் பார்த்துவிட்டு வருகிறேன் என்று சுற்றிவிட்டு, அய்யர் பங்களா வரைக்கும் சென்று விட்டான். நாராயணபுரத்தில் பூங்கொடி எங்கிருக்கிறாள் என்று தெரியவில்லை. பூங்கொடி யார் வீட்டுக்கு வந்திருக்கிறாளோ, அந்த வீட்டு மகானுபாவர் அரசாங்க விதைப்பண்ணை அலுவலகத்தில் சீடு ஆபீசராகப் பணி புரிகிறார். அந்த அலுவலகத்துக்குச் சென்றுவிட்டான். விதைப் பண்ணைக்காக என்று அக்ரிமண்ட் போட்டுவிட்டு விளைச்சல் இல்லாமல் அல்லாடுவதை அவரிடம் சொல்லிக் கொண்டிருந்தபோதே பேச்சை சுற்றி வளைத்து, "ஓ... நீங்கள்தானா அது. அப்பா

சொல்லியிருக்கார். திருச்சியில இருந்துகூட வந்திருக்காங்களே'' என்று சொல்லிக் கொண்டிருக்கும்போதே, 'கடவுளே இந்த ஆளுக்கு என்ஜினீயரிங்கோ, மெடிக்கலோ படித்த பையன்கள் யாரும் இருக்கக் கூடாதே' என்று அழகரை வேண்டிக் கொண்டான்.

பூங்கொடியைப் பார்க்காமலே திரும்ப வேண்டியதாகிவிட்டது. வீட்டுக்குப் போகும் வழியில் சங்கரபாண்டி பார்த்து விட்டு சப்தமாகச் சொன்னார்.

"கோபாலா, உன் வயக்காட்டு ஆள் வந்து சொன்னான். சேதி தெரியுமா உனக்கு மொத்தம் இருபத்தேழு நாரைகள் செத்து விழுந்திருச்சாம். பாம்புக்கெண்டையில விஷம் வைக்கறதுன்னா பின்ன சும்மாவா?" என்றதும் மனத்துக்குள் திடுக் என்றது. இருபத்தேழு நாரைகள் செத்து விழுந்திருக் கின்றன.

வீட்டுக்குப் போனால் என்ன ஆச்சர்யம்! உள்ளே பூங்கொடியின் கொலுசு ஒலி. கண்களால் பேசினாள். கைகளில் புதிதாக மருதாணி இட்டிருந்தாள். ஒரு கண்ணில் மை சற்று அதிகமாக இருந்தது. கைகளில் பூனை முடி வழக்கம் போலவே கிறக்கமாக இருந்தது. அப்புறம் தனியே பேசும் சந்தர்ப் பம் வாய்த்தபோது, "நான் ஒரு கவிதை எழுதி இருக்கேன்" என்றாள் மெதுவாக.

"எதைப் பத்தி?"

"காதலைப் பத்தி. இரண்டு நாரைகள் நதிக்கரையில வந்து பண்ற காதலைப் பத்தி. அந்த இரண்டு நாரைகளும் பூர்வ ஜென் மத்துல ஏன் ஒரு ஒருமித்த காதலரா இருந்து இப்ப நாரைகளாகி இருக்கக்கூடாது?'' என்றாள்.

இருபத்தேழு நாரைகள்!

பியூரிடானும், பாம்புக்கெண்டைகளும் அவன் கண் முன்னால் வந்து போயின. சட்டென்று தீர்மானித்தான். இனி சொல்லப் போவதில்லை. இவளிடம் மட்டு மல்ல, யாரிடமும் சொல்லப் போவதில்லை. அப்படிச் சொல்லாமல் இருப்பது எனக்கு ஒரு தண்டனையாக இருக்கட்டும் என்று நினைத்த கோபாலன், "நான் இப்பெல்லாம் கவிதை எல்லாம் வாசிக்கறதில்லை பூங் கொடி, வர்றேன். எனக்கு வேலை இருக்கு" என்று அகன்றான்.

பூங்கொடியின் உஷ்ணமான மூச்சுக் காற்று அவன் முதுகில் சுட்டது. ○

இடி விழுந்தது!

திருவனந்தபுரம் வானொலி நிலையத்திற்காக வாங்கிய 29 இன்ச் டி.வி.யும் ஆடியோ - வீடியோ சி.டி பிளேயரும் 'மின்னல்' தாக்கி கேடாகிப் போனதாகவும், எனவே அவற்றைக் குறைந்த விலைக்கு விற்றுவிட்டதாகவும் புது டெல்லி பிரசார் பாரதிக்கு ஒரு தகவல் கிடைத்ததும் அங்குள்ள அதிகாரிகள் 'இடி' விழுந்தது போல ஆகிவிட்டார்கள். காரணம், எவ்வளவு பெரிய இடி விழுந் தாலும் மின்னல் தாக்கினாலும் அதனால் எந்தவித பாதிப்பும் ஏற்படாதவாறு



தடுக்கும் சக்தி வாய்ந்த ''லைட்னிங் அரஸ்டர்' உள்ள திருவனந்தபுரம் வானொலி நிலைய கட்டடத்தில் எப்படி இடி விழுந்தது என்கிற மர்மம்தான்!

இடி விழுந்த ஒரு மாதத்திற்குள் இவற்றுடன் எலக்ட்ரானிக் டைப் ரைட்டர், இன்வெர்ட்டர், பேன்கள், பழைய டி.வி, ஆடியோ சி.டி உட்பட 49 பொருட்களை வெறும் 5000 ரூபாய்க்கு விற்பனை செய்துவிட்டதாக ரிப்போர்ட் டில் உள்ளது.

இந்த இடி பற்றி விசாரிக்க புதுடெல்லி பிரசார் பாரதியிலிருந்து ஒரு குழு திருவனந்தபுரம் வந்துள்ளது.

- திருவனந்தபுரம் எஸ். எஸ். மணி

மனசு...

அலாரம் வைக்காமல்
அஞ்சு மணிக்கெல்லாம்
எழுந்து விடுவாள் அம்மா.
பசுஞ்சாணி கரைத்து
முற்றம் தெளித்து
கம்பிகோலத்தில் பெரியகோவில்
தேர் வரைவாள்.
அம்மாவைப் போலவே
அவள் கோலங்களும்
அழகாகத் தானிருக்கும்.
அம்மாவைப் பற்றிய
ஒரு விஷயம் மட்டும்
புரிந்ததில்லை எனக்கு.
விடியலில் வரைந்த
பெரிய கோவில் தேரை
அந்தியில் துடைப்பத்தால்
பெருக்கி விடுகிற
விட்டேத்தியான மனசு
எங்கிருந்து வருகிறது?


வே.முத்துக்குமார்



என் நண்பன் ஒருவன் இப்போது நியூயார்க்கில் இருக்கிறான். இந்தியாவில் இருந்தவரை அவனைப் புத்தகமும் கையு மாகத்தான் பார்க்கலாம். சாப்பிடும் போது கூட இடது கையில் புத்தகம் இருக்கும். மானேஜ்மெண்ட் சம்பந்தமான அத்தனை லேட்டஸ்ட் புத்தகங்களையும் படித்து விடுவான். நெவில் ஷூட்டிலிருந்து ஜெஃப்ரி ஆர்ச்சர் வரை ஒன்றையும் விட மாட்டான். அதே மாதிரிதான் தமிழ்ப் புத்தகங்களும். "எதற்கு இப்படி விழுந்து விழுந்து படிக் கணும்? ஏதானும் எக்ஸாம் வைக்கப் போகி றார்களா என்ன?" என்று கேட்டால், அவ னிடம் பதில் தயாராக இருக்கும். 'தேர்வு எழுத மட்டும்தான் படிக்க வேணுமா என்ன? எக்ஸ்பிரஷனுக்கு, வார்த்தைகள் புதிது புதிதாக உபயோகிக்க, மனித சுபாவத் தைப் புரிந்து கொள்ள, சமயத்தில் கொட்டே ஷன் மாதிரி சொல்ல - எத்தனை உதவியாக இருக்கிறது புத்தகப் படிப்பு!"

புத்தகம் படிப்பது என்றாலே பரீட்சைக் கும், உத்தியோகத் தேர்வுகளுக்கும் என்று பொதுவாக எல்லோரும் நினைக்கிறார்கள். புத்தகங்கள் நிறையத் தகவல்கள் தருகின் றன. மனசை உற்சாகப்படுத்தி ஊக்கு விக்கின்றன. பரந்த அறிவு பெற உதவுகின்றன.

புத்தகம் படிப்



பதைப் பழக்கப்படுத்திக் கொள்வது எளிது. அடிக்கடி புத்தகம் எடுத்துப் படித்தால், பிறகு அனிச்சையாக எந்தப் புத்தகத்தையும் படித்துப் பார்க்க வேண்டும் என்ற பழக்கம் வந்து விடும்.

இப்போதைய ஹைடெக் சமுதாயத்தில், புத்தகப் படிப்பு ஒரு முக்கிய இடத்தைப் பிடித்திருக்கிறது. அறிவு என்பதும் அனுபவம் என்பதும் புத்தகங்கள் எளிதாகத் தரும் பரிசுகள். எதையும் சுருக்கெனப் புரிந்து கொள்ளல் சாத்தியமாகும். ஒருவிதத் தன்னம்பிக்கை பெற உதவும். புதிய புதிய வார்த்தைகள் அறிய, புதிய சொற்றொடர்கள் உபயோகிக்க, புத்தக அறிவுதான் உதவும்.

படிப்பது முக்கியம் என்றால், என்ன படிக்கிறோம் என்பது அதை விட முக்கியம்.

• தினசரி அரை மணி நேரமாவது படியுங்கள். சராசரியாக அரைமணி நேரம் ஒருவர் படித்தாலே, வருடத்தில் நாற்பது புத்தகங்கள் படித்து விடுவார். நாற்பது நல்ல



படிக்கும் பழக்கம்: சுமையல்ல, சுகம்!

புத்தகங்கள் படித்தால், நல்ல கல்வி பெற்றதற்குச் சமம்!

• புத்தகங்கள் படிக்கையில் சிந்தியுங்கள். கேள்விகளை எழுப்புங்கள். ஆசிரியர் என்ன சொல்ல விரும்புகிறார்? அவர் நியாயப்படுத்தும் விஷயங்கள் சரிதானா? கண்கள் புத்தகத்தைப் படித்தாலும், மனசை ஆசிரியரிடம் விட்டுக் கொடுத்து விடாதீர்கள்.

• நீங்கள் படிப்பதைப் பிறரிடம் சொல்

ஆர்.கண்ணன்

லுங்கள். நீங்கள் படித்துப் புரிந்து கொள்ளு வதை உங்கள் நண்பர்கள் அறிவதோடு, அவர்கள் சொல்லும் மாற்றுக் கருத்துக்கள் உங்கள் சிந்தனையைத் தூண்டும்.

படிப்பது என்பதன் ரகசியம் ஒரு S, ஒரு Q , மூன்று Rகளில் அடங்கியிருக்கிறது என்பார்கள். S என்றால் சர்வே. Q என்பது கேள்வி - க்வஸ்டின்; முதல் R படி - ரீட்; இரண்டாவது R திரும்பச் சொல் - ரீ ஸ்டேட்; மூன்றாவது R - ரிவ்யூ - நினைத்துப் பார்.


சர்வே என்றால் புத்தகம் எதைப் பற்றியது; என்ன தகவல்கள் தருகிறது என்று அறியத்தான். சர்வே செய்யாமல் படிப்பது என்பது வரைபடம் இல்லாமல் காட்டுக்குள் பிரவேசிப்பது போலத்தான்!

ஒரு புத்தகத்தை எடுத்துக் கொண்டால், முகவுரை படியுங்கள். பொருளடக்கம் படியுங்கள். ஒவ்வோர் அத்தியாயத்தின் முடிவிலும் என்ன எழுதப்பட்டிருக்கிறது என்று படியுங்கள். ஆசிரியரின் நோக்கம் என்ன என்று கிரகித்து கொள்ளுங்கள். மேலோட்டமாகப் புத்தகத்தைப் புரட்டுங்கள்.

ஒரு கட்டுரையோ, அத்தியாயமோ என்றால் முதல் - கடைசி வாக்கியங்களையும், முதல் - கடைசி பாராக்களையும், இடையே உள்ள பாராக்களின் முதல் வாக்கியத்தையும் மட்டும் படியுங்கள். பாராக்களின் அளவுகளைக் கவனியுங்கள். சிறிய பாராக்களை எளிதில் படித்து விடலாம். பெரிய பாராக்களில் சிறிய ஐடியாவை விரிவுபடுத்தியிருப்பார்கள். சரிந்த அல்லது தடித்த எழுத்துக்களில் ஆசிரியர் வலுவாகச் சொல்ல விரும்புவது என்ன என்பதைக் குறிப்பிட்டிருப்பார்.

ஜப்பான் நாட்டில் அதிசயமான கடிகார மெழுகுவர்த்தி உள்ளது. ஒரு மணி நேரம் வரையில் எரியும் பகுதியில் மல்லிகை, ரோஜா, தாழம்பூ உட்பட ஆறு விதமான நறுமண வாசனைகளைக் கலந்துள்ளனர். வாசனைகளை வைத்து இத்தனை நிமிஷங்கள் ஆயிற்று என்றும் அறிந்து கொள்கிறார்கள்.

– குருவை சோலோ செல்வா



இவற்றை விட்டு விடக் கூடாது. கட்டம் கட்டி சில பாயின்ட்டுகளை ஆசிரியர் எளிதாகச் சொல்ல விரும்பியிருப்பார். ஒவ்வொரு பாராவிலும் முக்கியமான சில வார்த்தைப் பிரயோகங்கள் இருக்கும். நூலின் நோக்கமும், அர்த்தமும் இவற்றில் தெரிந்து விடும்.

படிப்பது என்பது சிந்திப்பது ப்ளஸ் கேள்விகள் எழுப்புவது. கேட்கும் போது தான் நாம் தெரிந்து கொள்கிறோம். அது தான் நூலைப் படிப்பதில் சுவாரசியத்தை உண்டாக்குகிறது. படிக்கப் படிக்க, உங்களையே என்ன படித்தோம் என்று கேட்டுக் கொள்ளுங்கள். ஆசிரியருடன் இணைந்து போகிறீர்களா? வருகிற பக்கங்களில் ஆசிரியர் என்ன சொல்ல விரும்புகிறார்? கேள்விகள் உங்கள் தலைக்குள் எழுந்து கொண்டே இருக்க வேண்டும். இல்லையென்றால் ஒரு புத்தகத்தை வெறுமனே பார்ப்பதற்குச் சமம் ஆகிவிடும்!

மூன்றாவது படி : படியுங்கள். ஒரு சைக்கிள் ஓட்டுவது போலப் படியுங்கள். மேலே பிறகு கீழே. புரியாத பகுதிகளை மெதுவாகவும், எளிதான பகுதிகளை மளமளவென்றும் படியுங்கள். ஒரே லயத்தில்தான் படிக்க வேண்டும் என்பதில்லை.

வார்த்தைகளில் மூழ்கிப் போய் விடாமல், விஷயத்தைப் புரிந்து கொள்ளப் படியுங்கள். சில வேளைகளில் வார்த்தைக் குவியலாக இருக்கும். ரொம்ப சாதாரண ஐடியா அதற்குள் பொதிந்திருக்கும்!

அடுத்ததாக ரீ ஸ்டேட் : இடையிடையே நூலைக் கீழே வைத்து விட்டு, நீங்கள் இதுவரை என்ன படித்தீர்கள் என்று அசை போடுங்கள். முக்கியமான பாயின்ட்டுகள் உங்கள் மனத்தில் தங்கியிருக்கிறதா என்று நினைத்துப் பாருங்கள். 'ஒரு தடவை சொன்னால் நூறு தடவை சொன்னது மாதிரி' என்ற பிரபலமான வசனம் போல, ஒரு தடவை நீங்கள் படித்ததை நினைவு கூர்வது என்பது, மூன்று தடவை படிப்பதற்குச் சமம்.

கடைசியாக : ரிவ்யூ. முதல் நான்கு படிகளை மறுபடி நினைத்துப் பாருங்கள். புத்தகத்தைப் படித்து முடித்தவுடன் செய்ய வேண்டிய வேலை இது. அப்போதுதான், 'படித்தது புரிந்து விட்டது; எனக்கு வேண்டியது கிடைத்து விட்டது!' என்ற நிலை ஏற்படும். திருப்தியாக இருக்கும்.

'யார் படிக்கிறார்களோ, அவர்கள்தாம் மற்றவர்களை வழிநடத்திச் செல்லுகிறார்கள்' என்பார்கள்.

(தொடரும்)



பூங்கொத்து

சிரித்துக் கொண்டே
பூங்கொத்து வழங்கினார்
விழா அமைப்பாளர்

புன்னகைத்தவாறே
அதைப் பெற்றுக் கொண்டார்
தலைமை விருந்தினர்

சிரிக்கச் சொல்லி
புகைப்படமெடுத்தார்
புகைப்படக்காரர்

சிரித்துக் கொண்டே
கை தட்டினார்கள்
பார்வையாளர்கள்

கண் செருகி
தலை துவண்டு கொண்டிருந்தது,
கழுத்தறுத்து கட்டப்பட்டிருந்த
பூக்களுக்கு.

ஜெயபாஸ்கரன்

காத்திருக்காதே, கண்ணா!

'இவ்ளோ வெவரமா எம் மவ செம்பவம் பேசுதாளே, என் வயித்தில பொறந்தவளுக்கு இம்புட்டுக்கு கூறுபாடு எப்பிடி வந்துச்சு. எல்லாம் அவ அப்பா குடுத்த அறிவு!' என்று தன் மகள் பேசுவதைக் கேட்டு மனசுக்குள் பெருமிதம்தான் என்றாலும் தாய் ராமக்கனிக்குக் கூடவே ஒரு மிரட்சி. 'சொந்த அத்தை கிட்டேயே மொகத்தில அடிக்கிற மாதிரி பேசுதாளே!'

செண்பகம் பிசிர் இல்லாமல் தீர்க்கமாகப் பேசினாள்.

"அத்தே, உங்களுக்கு நல்ல மனசு. அப்பா



செஞ்ச நன்மைக்கெல்லாம் நன்றியா, என்னைச் செலவில்லாம உங்க மருமகளா ஆக்கணும்னு ஆசைப்படறீங்க. 'நல்ல நெலமைக்கார மாப்பிள்ளை வேணும்னா, 'கிலோ தங்கம். லட்சம் ரொக்கம்'னு கேட்கிற நம்ம சாதிசனத்துல, காக செலவில்லாம என் கழுத்தில தாலி ஏறுனா அது பெரிய விஷயம்தான்! ஆனா எங்கப்பா குணத்தை கூடப் பிறந்த உங்களாலேயே புரிஞ்சுக்க முடியலையே, அத்தே!

"அத்தே. புறாக்களுக்குத் தானியம் போட்ற வுங்க, மீன்களுக்கு பொரி போட்றவங்க எல்லாம், அன்பினால போட்றாங்களே தவிர, புறாக்கள் கிட்டேயும் மீன்கள் கிட்டேயும் எதையும் எதிர்பார்த்து போட்றதில்லை. அப்பாவும் அப்படித்தான். 'ஒருத்தருக்கு வேணும்னா, ஒங்கப்பா உடுத்திருக்கிற வேட்டியைக் கூட அவுத்துக் குடுத்துட்டு வந்துடுவாவ'ன்னு அம்மா சொல்வா. அதுதான் அப்பா குணம். இப்ப, தன் தங்கச்சி வீட்டுக்கு, தான் செய்த நல்லதுகளுக்கு நன்றியாத்தான் என் கல்யாணம் நடக்குதுன்னா எங்கப்பாவோட ஆத்மா, சாமி உலகத்தில இருந்தாலும் சாந்தி அடையாது. 'கல்யாணம்' என்கிற பந்தத்தைப் பற்றி அப்பா எவ்வளவோ உயர்வான விஷயங்களைச் சொல்வாங்க. அந்தக் கல்யாணம் இப்படி,



நன்றிக் கடன்ங்கிற மலிவான பேரமா நடக்கும்னா, அது சகிக்க முடியாத கேவலம்..." என்ற செண்பகம் ஒரு கணம் தன் உணர்வுகளைச் சமனப்படுத்திக் கொண்டு, "அத்தே, அப்படியே அப்பாவுக்கு நன்றிக் கடன் செய்யணும்னா, அதுக்கு வேற வழி இருக்கு!" என்றாள்.

"என்னம்மா சொல்றே?"

"தன் தங்கச்சியோட குடும்பம், கஷ்டப்படாம இருக்கணும்ங்கிறதுக்காகத் தான், அப்பா தன்னால முடிஞ்ச உதவிகளைச் செஞ்சாங்க. இப்ப அவங்க இல்லை. இந்த நிலையில தன் குடும்பத்தைக் கஷ்டப்பட விடாம பாத்துக்கிறதுதான் செய்ய வேண்டிய நன்றிக் கடன். உங்க கஷ்ட நஷ்டங்களைச் சொல்லிச் சொல்லி அப்பா வருத்தப்பட்டுக்கிட்டு இருப்பாங்க. நான் குத்திக் காட்டுறதா நினைக்காதீங்க. நீங்க குடியிருக்கிற வீடு ரெண்டு வருஷமா இடிஞ்சு கிடக்குது. அதைக் கட்டிக்குடுக்கணும்னு அப்பா ஆசைப்பட்டாங்க. வசதி வரலை. அதை, அத்தான் உடனடியாச் செய்யணும். தங்கச்சி செல்வி ஆளாகி வீட்டில இருக்கா. அவளுக்குச் சீக்கிரமாக் கல்யாணம் பண்ணணும். அத்தானே முதல்ல தன்னோட தொழிலை உறுதியாக்கிக்கணும். ஒரு கடையில வேலைக்கு இருக்காங்க, இப்போ. அந்த வருமானம் போதுமா? எங்க குடும்பத்தைப் பத்தி நீங்க அக்கறைப் பட்றது சரி. ஆனா அதுக்காக கவலைப்பட வேண்டாம். ஏன்னா, இதுவரை வீட்டை விட்டு வெளியே போகாம இருந்த அம்மாவும் நானும், குடும்ப நிலைமையை உத்தேசிச்சு, வெளி உலகத்துக்கு வந்து வேலை வெட்டி செய்ய ஆரம்பிச்சாச்சு. அதைப் போல, உங்க பொழப்பை ஒசத்திக்கிறதுதான் அத்தான் முதல்லே செய்ய வேண்டிய 'பெரிய விஷயம்'!" என்றாள் செண்பகம் உணர்ச்சி பொங்க.

"செண்பகம், அப்பஃன்னா, என்னைக் கல்யாணம் செய்துக்க உனக்கு இஷ்டம் இல்லையா?" கண்ணன் ஆற்றாமையோடு கேட்டான்.

"அத்தான், உங்க பேர்ல வெறுப்போ, விரோதமோ எனக்கு இல்லை. 'அத்தை மகன்'ங்கிற பாசம் இருக்கு. நீங்க நல்லா இருக்கணும்னு எங்கப்பா ஆசைப்பட்டதைப் போல, நானும் நினைக்கிறேன். ஆனா, கல்யாணத்தைப் பத்தியெல்லாம் யோசிக்க இப்ப சரியான வேளை இல்லை."

"நான் என் கடமைகளையெல்லாம் கஷ்டப்பட்டு நிறைவேற்றி முடிக்கிறேன். அதுவரை நீ காத்திருப்பியா?"

கண்ணனின் இந்தக் கேள்விக்கு, செண்பகம் என்ன சொல்லப் போகிறாள் என்று தெரிந்து கொள்ளும் ஆர்வத்தோடு பூமணி அம்மாளும், ராமக்கனியும்கூட அவள் முகத்தை நோக்கினார்.

"அத்தான், இந்தக் கேள்வியை நீங்க எங்கிட்டே கேட்கிறதுக்கு முன்னால, இதைப் பற்றி உங்கம்மா கிட்டேயோ, எங்கம்மா கிட்டேயோ கேட்டிருக்கணும். அவங்க, ஒரு காலத்தில என்னை மாதிரி 'பொண்ணா' இருந்தவங்க. ஒரு குடும்பத்துப் பொண்ணு இப்படியெல்லாம் ஒருத்தருக்காக காத்திருக்கிறது நடைமுறையில சரியா இருக்குமான்னு அவங்களுக்கு நல்லாத் தெரியும். எந்தவொரு பொண்ணுக்கும் கல்யாணம்னா, அதுக்குரிய பல சூழ்நிலைகள் பொருந்தி, அதற்கான வேளை வந்துட்டா, அது தானே நடந்துடும். கதிர் விளைஞ்சாச்சுன்னா, யாருக்காகவும் காத்திருக்காம அறுவடையாயிடும். பனையில பாளை வந்துட்டுதுன்னா, உடனே அதை இடுக்கி, பயினி எறக்கிடுவாங்க. காத்திருந்தா, முக்கி வீணாப் போவும். பொண்ணும் அப்படித்தான். வேளை வரும் போது, சட்டுபுட்டுன்னு முடிஞ்சுடும். அந்த விஷயத்தில 'உங்களுக்காகக் காத்திருப்பேன்'னு என்னால வாக்குத் தரமுடியாது. நடக்கிறபடி நடக்கும்" என்றாள் செண்பகம் உறுதியாக.


தன் ஏமாற்றத்தை விழுங்க, கண்ணன் சிரமப்பட்டான்.

ஆனால் அவனுடைய தாய் பூமணி, நெகிழ்ச்சியோடு செண்பகத்தை அரவணைத்துக் கொண்டு, "என் ராசாத்தி! நீ பேச ஆரம்பிச்ச போது, ஆசைப்பட்ட மனசுக்குக் கொஞ்சம் ஏமாற்றமாத்தான் தெரிஞ்சுது.

"முதுகு வலிக்குதுனு சொன்னா உடனே டயாலிஸிஸ் செஞ்சே ஆகணும்ங்கறீங்களே! ஏன்?"

"காலையிலே புதுசா வந்து இறங்கிய டயாலிஸிஸ் மிஷின் எப்படி வேலை செய்யுதுன்னு தெரிய வேணாமா?"

- உ. ராஜாஜி



ஆனா, நீ ஒவ்வொரு விஷயத்தையும் சொல்றபோது, எங்கண்ணனே இங்கே இருந்து புத்தி சொல்ற மாதிரி இருந்துச்சு. நீ எந்த வீட்டுக்குப் போய் வாழ்ந்தாலும், என்னிக்குமே எனக்கு மருமகள் தான். அண்ணன் வீட்டுச் சொந்தம் அழியாது'' என்று உச்சி முகர்ந்தாள்.

ராமக்கனி அம்மாள் முன்றானையால் தன் கண்ணைத் துடைத்துக் கொண்டாள். அவர்கள் நால்வரும் கோயிலை விட்டுப் புறப்படத் தயாரானபோது, பூசாரி தென்பட்டார். அவர் பூமணி அம்மாளைப் பார்த்து, "அம்மா, சாமிக்குப் பொங்கல் எப்போ?" என்று கேட்டார்.

பூமணி புன்னகையோடு, "வேளை வரட்டும். ஒண்ணு நான் வைப்பேன். இல்லாட்டி என் மயினி வைப்பாவ. என்னைக்காவது சாமிக்குப் பொங்கல் உண்டு." என்று கூறி நகர்ந்தாள்.

அவர்கள் கோயிலின் வெளிவாசலருகே வரும்போது, திடீரென்று அங்கு ஒரு பரபரப்பு.

சர்சர்ரென்று மூன்று கார்கள் கோயில் வாசற்புறத்தில் வந்து நின்றன. முதலாவதாக ஒரு வெளிநாட்டு மாடல் கார், அடுத்து ஒரு 'அம்பாசிடர்' கார், கடைசியாக ஒரு ஜீப்.

அம்பாசிடர் கார் முதலில் திறந்தது. அதனுள்ளிருந்து துண்டும் தோளுமாக ஒரு வெள்ளை வேட்டிக் கும்பல் வெளி வந்தது. பார்த்ததுமே தெரிந்தது, 'அரசியல் புள்ளிகள்' என்று. அவர்கள் இறங்கி வந்து சூழ்ந்து கொண்டபின்தான் வெளிநாட்டுக் கார் அந்தஸ்தாகத் திறந்து கொள்ள, ஒரு பெரும் புள்ளியும், பெரும்புள்ளியின் 'குளோனிங்' சாயலில், ஆனால் இளம் வயதாக ஒருவனும் இறங்கினார்கள்.

'பெரிசு'க்கு ஐம்பது வயதிருக்கும். பட்டு வேட்டி, முழுக்கை சட்டை. முரட்டு உடம்பு. கழுத்தில் தாம்புக் கயிறு போல் ஒரு முறுக்குச் செயின். கையில் கனத்துத் தொங்கிய பிரஸ்லட். விரல்களுக்குச் சரியான நீள அளவுள்ள பட்டை மோதிரங்கள். கொழுத்த புதுப் பணக்காரர் என்று விளம்பரம் படுத்துவதுபோல். 'இளசி'ன் அலங்காரங்களும் அதே.

அப்பா - மகன் என்றால் வேறு எப்படி இருக்கும்?

அந்தக் கிராமத்தில், ஒரு கார் வந்தாலே, தெரு திரண்டுவிடும். மூன்று கார்கள்



''ஸார்! ராமு ரொம்ப பேராசைப்படறான்!''

''அப்படி என்னடா கேட்குறான்...?''

'' 'நம்ம ஸ்கூலையும் இடிப்பாங்களாடா'ன்னு கேட்குறான், ஸார்!''

- சீர்காழி வி.ரேவதி

என்றதும், வாக்காளர் பட்டியலே, ஆஜர்!

"தலைவரே, இதான் அந்தக் கோயில்!" என்றார் ஒரு கட்சிக் கரைவேட்டி.

அதற்குள் சிக்னல் கிடைத்துபோல் ஜீப்பிலிருந்தவர்களும் தபதபவென்று இறங்கி, சூழ்ந்தனர். அதிகாரிகள் பேண்ட் சர்ட், சஃபாரிகள். சிலரிடம் லஞ்சப் பார்வை.

தலைவர் என்று அழைக்கப்பட்டவரைத் தொடர்ந்து அந்தக் கூட்டம் கோயிலை நோக்கி முன்னேறியது. எதிர்ப் பட்டவர்களைப் பார்த்துப் பந்தாவாகத் தலையாட்டிக் கொண்டு வந்த 'தலைவரின் கண்கள் பெண்கள் இருக்கும் பகுதிகளைத் தேடித் துழாவின. பழக்க தோஷம்?

சட்டென்று அவருடைய பார்வை, ஒதுங்கி நின்ற ராமக்கனி அம்மாள், செண்பகம் இருவரின் மேலும் பதிந்தது. ஒரு நிமிட அவகாசம் எடுத்துக் கொண்டு நன்றாகவே உறுத்துப் பார்த்தார். கண்களில் அறிமுகப் பிரகாசம்.

இந்தப் பிரகாசம் அவருடன் வந்த மகனுக்கு, முதல் பார்வையிலேயே வந்துவிட்டது. அவன் பார்த்தது, செண்பகம் ஒருத்தியைத்தான்.

தலைவர், ராமக்கனி அம்மாளைப் பார்த்து, ''அக்கா, என்னைத் தெரியலையா? நான் தான் பலவேசமுத்து'' என்றவர் தன் மகனைக் காட்டி, ''அக்கா, இவன்தான் என் மகன் தண்டபாணி. நீங்க கூடக் கிண்டலா, 'தண்டம், தண்டம்' பீங்களே...'' எனறு சிரித்தார். பின் மகனிடம், "என்னலே, அப்படி முழிக்கே, அடையாளம் தெரியலையா?'' என்று கேட்டார்.

"தெரியாம என்னப்பா? மறக்க முடியுமோ? சின்னப் பொண்ணா இருந்த செண்பகம் எப்படி மாறியிருக்கா! விளையாட்டு

விளையாட்டுன்னு என் தலையில என்னமா குட்டுவா. இப்பக் கூட அவ கையால குட்டுப் படாம என் தலை 'குறு குறு'ன்னு இருக்கு..." என்று, கூச்ச நாச்சமின்றி, சுற்றியிருக்கும் கூட்டத்தைப் பற்றிக் கவலைப்படாமல் ஜொள்ளினான்.

செண்பகம் கூசிக் குனிந்தாள். அருகில் நின்ற கண்ணன் அவனை அருவருப்புடன் நோக்கினான். பொறாமையும்கூட.

'தலைவா' என்று கரைவேட்டி, ஏதோ காதில் சொல்ல, ராமக்கனி அம்மாளை நோக்கி, "அக்கா, கோயிலுக்குள் போயிட்டு வந்துர்றோம். இங்கேதானே இருப்பீங்க..." என்றவாறு, தன் பட்டாளத்துடன், சுவாமி யையே பயமுறுத்துவதுபோல், பாய்ந்து சென்றார், பலவேச முத்து.

அந்த ஆசாமியைப் பார்த்ததிலேயிருந்து, வியர்த்துக் கொட்டியது ராமக்கனிக்கு. அந்தக் கூட்டம் உள்ளே சென்றதும், பதட்டத்துடன் தன்னவர்களை அழைத்துக் கொண்டு வேகமாக கோயிலைவிட்டு வெளியேறினாள்.

வீட்டுக்கு வந்து சேர்ந்து, ஒரு சொம்பு பச்சைத் தண்ணீரைக் குடித்த பின்தான் ராமக்கனிக்கு படபடப்பு அடங்கியது.

அவள் அருகில் உட்கார்ந்து ஆசுவாசப் படுத்திய பூமணி, "மயினி, அந்த ஆள் யார்? 'அக்கா'ன்னு உங்ககிட்டே உறவு கொண் டாடினானே. ஆனா, எனக்குத் தெரிஞ்ச சொந்த பந்தங்களிலே உங்களுக்கு இப்படி யொரு 'தம்பி' இருக்கிறதா தெரியலையே!" என்று விசாரித்தாள்.

"மயினி, இவன் சொந்த பந்தங்களிலே வந்தவனில்லை. எங்க சொத்துபத்துக்கு வினையா மெட்ராசில வச்சு ஒட்டினவன்!"

"மெட்ராசிலயா? ஏ, அம்மா எவ்ளோ காலம் இருக்கும்!" பூமணி தன் ஞாபகத்தைப் புரட்ட முயன்றாள்.

"ஆமா மயினி! உங்களுக்கு ஞாபகம் இல்லியா? எனக்கும் உங்க அண்ணனுக்கும் கல்யாணமானபோது, அவிய மெட்ராசில தான் கடைவச்சிருந்தாவ. என்னையும், அங்கே கூட்டிட்டுப் போய் குடித்தனம் வச்சாவளே! கொஞ்ச காலம் அங்ஙனதானே இருந்தோம்!"

"ஆமாமா, எனக்கும் அப்போ கல்யாண மாகி படுக்கப் பத்துக்கு புருஷன் வீட்டுக்குப் போயிட்டேன். துணைக்கு யாருமில்லாம நீங்க ஒத்தையிலே இருக்கணுமேன்னு தானே எங்கண்ணன் உங்களைக் கூட்டிட்டு மெட் ராசுக்குப் போனாவ. நம்ம செண்பகம் பொறந்து மூணு நாலு வருஷம் ஆனப்புறம் தானே இங்கே ஊரோட வந்தீய. 'யாவாரம் சரியில்லைன்னு வந்துட்டோம்'னு, அண் ணன் எங்கிட்டே சொன்னாவ." பூமணி நினைவு கூர்ந்தாள்.

"யாவாரத்துக்கென்ன ராஜாங்கமா நடந்துது. கடையிலயும் ஊட்லயும் காசு பணம் 'திரைஞ்சு'கிட்டு கெடந்துச்சு. 'வேண்டாம் வேண்டாம்'னு நான் சொல்லச் சொல்ல ஒங்கண்ணன் தங்கமும் வைரமுமா என் கழுத்திலயும் காதிலயும் பூட்டி அதை பாத்தாவ. பொட்டைப் பொண்ணு மகாலட் சுமியா பொறந்திருக்குன்னு செம்பவத்துக்கு அவிய சிங்காரிச்சுப் பாத்த பூத்தானம் என்ன? எல்லா சீரும் செறப்பும், இந்தப் பாவியால சீரழிஞ்சு போச்சு.

"மெட்ராஸை விட்டு ரயிலேறும்போது, 'எவன் கண்ணில இனி முளிக்கப்படாதுன்னு நெனைச்சோமோ, அவனே இங்கே வந்து நிக்கான். விதியே!" என்று பெருமூச்சுவிட் டாள் ராமக்கனி. அவள் நினைவில் பழைய நிகழ்ச்சிகள் தோய்ந்து வெளிப்பட்டன.

(தொடரும்)

போலீஸ் ஜுரம்!

ரவுடி, தாதா கதைகளில் மூன்பு கட்டுண்டு கிடந்த கோடம்பாக்கத்துக்கு இப்போது போலீஸ் ஜுரம்! அஜித் 'ஜனா'வில் இன்ஸ்பெக்டர், 'பரசுராம்'ல் அர்ஜுன் கமிஷனர், 'சாமி'யில் விக்ரம் உதவி கமிஷனர் என்று தொடரும் பட்டியலில் இப்போது முரளியும். 'வணங்கா முடி' படத்தில் முதல் முறையாக எஸ்.பி.யாக நடிக்கிறார். " 'தூசி' என்ற ஊரில் நேர்மையாகப் பணியாற்றிய இளம் போலீஸ் அதிகாரியை 'மனநலம் சரியில்லாதவர்' என்று குற்றம் சாட்டி பணி நீக்கம் செய்த உண்மைச் சம்பவம் தான் 'வணங்காமுடி' என்கிறார் படத்தின் இயக்குனர் ஜெய்ராம்ஜி.

- ஜெய்



● வணங்காமுடியில்...





• ஸ்ரீராம்

50 வயதில் அல்லயன்ஸ் பிரான்சைஸ்!

கூத்துப் பட்டறையின் நவீன நாடகங்களாகட்டும், பிரெஞ்சு நாடகங்களின் மொழி பெயர்ப்புகளாகட்டும், பிரசன்னா ராமசாமியின் கவிதை – நாடக வாசிப்புகளாகட்டும், மங்கையின் கிராமப்புறக் கலை நிகழ்ச்சிகளாகட்டும் – அல்லயன்ஸ் பிரான்சைஸ் ஆடிட்டோரியத்தை விடப் பொருத்தமான இடம் வேறு ஏதும் சென்னையில் இருக்க முடியாது.


'அல்லயன்ஸ் பிரான்சைஸா - அப்படின்னா என்ன?' என்று கேட்கிறவர்களுக்கு, ஒரு சின்ன விளக்கம்:

பிரான்ஸ் நாட்டின் மொழி, கலை, கலாசார வெளிப்பாட்டுக்குச் சென்னையில் இதுதான் தலைமைச் செயலகம். முகவரி: 24, கல்லூரிச் சாலை, நுங்கம்பாக்கம், சென்னை - 6. இங்கே பிரெஞ்சு மொழி கற்க வரும் இளைஞர் – இளைஞிகளுக்கு இது பழக்கமான இடம்.

1948ல் சில இந்திய – பிரெஞ்சு நண்பர்கள் ஒன்றுகூடி இதை ஒரு சங்கமாக ஆரம்பித்தபோது, இரு நாட்டுக் கலாசாரப் பரிமாற்றத்துக்கு உதவ வேண்டும் என்பதே நோக்கமாக இருந்தது. சுமார் ஐந்து வருடங்களுக்குப் பிறகுதான் முறையாக, ஆகஸ்ட் 19, 1953 அன்று அல்லயன்ஸ் பிரான்சைஸ் என்று பெயர் சூட்டினார்கள்.

ஆரம்பித்த புதிதில் ஏழு பேர் பிரெஞ்சு மொழி சொல்லிக் கொடுத்தார்கள். அதில் மூன்று பேரே இந்தியர். இன்றைக்கு முப்பது பேர் சொல்லிக் கொடுக்கிறார்கள். அத்தனை பேரும் இந்தியர்களே!

அல்லயன்ஸ் பிரான்சைஸ் என்றாலே உடனே நினைவுக்கு வரும் நபர்கள் இரண்டு பேர். ஒருவர் ஹேமா. இன்னொருவர்



''விட்டதை எப்படியும் பிடித்து விடுவேன்'னு உங்க அப்பா சொல்றாரே? அவர் என்ன 'ரேஸ்' பிரியரா?''

''சேச்சே! மூத்த பையனுக்கு வரதட்சணை விஷயத்தில் ஏமாந்து விட்டார். அதை என் மூலம் சரிக்கட்டி விடுவேன்'னு சொல்றார்!

— தென்காசி தாஹிர்



''உங்க கட்சி வேட்பாளர்தான் தோற்றுப் போயிட்டாரே, அப்படியும் ஏன் பட்டா செல்வாம் கொளுத்தி அமர்க்களம் பண்றீங்க?''

''டிபாசிட் கிடைச்சிருக்கே, அது தெரியாதா உங்களுக்கு?''

— சீர்காழி வி. ரேவதி

''கைதிகளிடம் அன்பாகப் பழகும்படி ஜெயிலரிடம் சொன்னது தப்பாப் போச்சு...''

''ஏன்...?''

''துப்பாக்கி முனையால், கைதியின் முதுகைச் சொறிந்து விடுகிறார்...''

— நாமக்கல் பாலு



ஸ்ரீராம். நூற்றுக் கணக்கான இளைய தலைமுறையினருக்கு பிரெஞ்சு மொழி கற்றுக் கொடுத்தவர் ஹேமா என்றால், பிரெஞ்சு நூல்களை மொழி பெயர்த்து உதவிய ஸ்ரீராம் இன்னொருவர். பிரெஞ்சு திரைப்படங்களைத் திரையிடும்போது ஸ்ரீராமின் முன்னுரை இரத்தினச் சுருக்கமாக ரசிகர்களுக்குக் கிடைத்துவிடும். (செவாலியே விருது இந்த ஆண்டு ஸ்ரீராமுக்கு வழங்கப் பட்டிருக்கிறது.)

1953ல் தொடங்கப்பட்ட அல்லயன்ஸ் பிரான்சைஸ் கூட்டங்களின் 'மினிட்ஸ்' எனப்படும் குறிப்புக்களில் சில வேடிக்கையாக இருக்கின்றன: 1. ஊழியர் ஸூர்து நாதனுக்கு திருமணம் நடந்தபோது, அவருக்குத் திருமணப் பரிசாக, ஒரு மாத ஊதியம் சாங்ஷன் செய்யச் சொல்லுகிறது ஒரு குறிப்பு. 2. ரூபாய் ஐம்பது கையாடிய ஊழியர் ஒருவருக்குத் தகுந்த தண்டனை வழங்கச் சிபாரிசு செய்கிறது ஒரு குறிப்பு! 3. கூட்டத்தின்போது உறுப்பினர்களுக்கு டீ வழங்க ஐம்பது ரூபாய் அனுமதிக்கும்படி கோருகிறது மற்றொரு குறிப்பு. 4. வளாகத்தில் பாம்புகள் நடமாட்டத்தை ஒழிக்க, ஒரு ஸ்பெஷல் பூஜை நடத்தத் தீர்மானிக்கிறது இன்னொரு குறிப்பு!

இந்த வருடம் முழுவதும் மாதாந்தர நிகழ்ச்சிகள் சிலவற்றுக்கு ஏற்பாடு செய்திருக்கிறார்கள். பன்னிரண்டு சொற்பொழிவுகளில், முதல் சொற்பொழிவை நிகழ்த்தியவர் திரைப்படத்துறை ஓவியர் தோட்டா தரணி. இந்த மாதம் நகரச் சரித்திரங்களைப் பதிவு செய்யும் எஸ். முத்தையா பேசுகிறார். இசை நிகழ்ச்சிகளும் உண்டு. லலிதா - நந்தினி வயலின், காரைக்குடி சுப்பிரமணியத்தின் 'பிருஹத்வனி' குழுவின் நிகழ்ச்சி, என்று வரிசையாக ஏற்பாடு செய்திருக்கிறது அல்லயன்ஸ் பிரான்சைஸ்.

''முப்பது வருடங்களுக்கு முன் பிரெஞ்சு மொழி கற்க இந்தக் கட்டடத்தில் நுழைந்தவன் நான். மொழி மட்டுமல்ல, மெல்ல மெல்ல பிரெஞ்சு பாரம்பரியம், இலக்கியம், தியேட்டர், சினிமா, இசை என்று அந்தத் தனி உலகில் அப்படியே கலந்து போய்விட்டேன்'' என்கிறார் ஸ்ரீராம். இவர்தான் இப்போதைய கௌரவத் தலைவர்.

— எஸ்.வி.என்.

பேரின்பமும், பெருவாழ்வும் தரும் புண்ய க்ஷேத்ரமான இராமேஸ்வரத்தில் அன்னதானம் செய்து பித்ருக்களின் ஆசிகளைப் பெறலாம் !

முன்னோர்களின் ஆசிகளைப் பெற இராமேஸ்வரத்தில்

மாதாமாதம் அமாவாசைநாளில்

அக்னி தீர்த்தத்திற்கு தீபமேற்றி அன்னதானம் செய்வோம் வாருங்கள் !

ஜெகத்குரு காஞ்சி ஸ்ரீ பரமாச்சார்யார் அனுக்கிரகத்துடன் பேரின்பமும், பெருவாழ்வும் தரும் புண்ய க்ஷேத்ரமான இராமேஸ்வரத்தில் அக்னி தீர்த்தத்திற்கு தீபமேற்றி அன்னதானம் செய்வதில் நீங்களும் பங்குகொள்ள அன்புடன் அழைக்கிறோம் !

பேரன்புடையீர் ! வணக்கம். அருள்மிகு ஸ்ரீ இராமநாத சுவாமி தங்களுக்கு அனைத்து நலன்களையும் தந்தருளப் பிரார்த்திக்கிறோம்.

பன்னிரெண்டு ஜோதிர்லிங்க ஸ்தலங்களுள் ஒன்றான இராமேஸ்வரத்தில் ஸ்ரீ பர்வதவர்த்தினி சமேத ஸ்ரீ ராமநாத சுவாமி உடனிருந்து அருள் பாலிக்கிறார். மூர்த்தி, தீர்த்தம், தலம் மூவகையாலும் இராமேஸ்வரம் சிறப்புற்று சிவ விஷ்ணு ஸ்தலமாக பிரகாசிக்கிறது. மாங்கல்ய தோஷம், புத்திர தோஷம், செவ்வாய் தோஷம், நாக தோஷம் போன்ற எல்லாவிதமான தோஷங்களுக்கும் பரிகாரத்தலமாக இராமேஸ்வரம் விளங்குகிறது. இத்தகைய சிறப்பு மிக்க புண்ணிய க்ஷேத்ரமான இராமேஸ்வரத்தில் நேரில் சென்று அக்னி தீர்த்தத்திற்கு தீபமேற்றி அன்னதானம் செய்ய இயலாத அன்பர்களுக்காக, "ஸ்ரீ அன்னபூரணி அன்னதான சேவா டிரஸ்ட்" மூலம் அன்னதானத் திருப்பணி நடைபெறுகிறது. புண்ணிய பூமி இராமேஸ்வரத்தில் ஏழைகளுக்கும், அடியார்களுக்கும் அன்னதானம் அளிக்கும் பணியிலும், குடும்பம் நலம் பெற அக்னி தீர்த்தத்திற்கு தீபமேற்றும் பணியிலும் , நாமும் பங்கு கொண்டோம் என்ற ஆத்ம திருப்தியை அடைய இது ஒரு சிறந்த வாய்ப்பாகும்.

தங்கள் சார்பாக அக்னி தீர்த்தத்திற்கு தீபமேற்றி அன்னதானம் செய்ய தங்களால் இயன்ற நன்கொடையை அனுப்பலாம்.


- ரூ.500- அனுப்பும் அன்பர்களுக்கு, ஆன்மீகம் மாத இதழ் ஒரு ஆண்டிற்கு அனுப்பி வைக்கப்படும்.
- ரூ.1000- அனுப்பும் அன்பர்களுக்கு, ஆன்மீகம் மாத இதழ் இரண்டு ஆண்டுகளுக்கு அனுப்பி வைக்கப்படும்.
- ரூ.5000- அனுப்பும் அன்பர்களுக்கு, ஆன்மீகம் மாத இதழ் பத்து ஆண்டுகளுக்கு அனுப்பி வைக்கப்படும்.

அன்னதானத்திற்கும் அக்னி தீர்த்தத்திற்கு தீபம் ஏற்றுவதற்கும் நன்கொடையை அனுப்புவோர், விரும்பும் மாதத்தில் அமாவாசை தினத்தில் இராமேஸ்வரத்தில் அக்னி தீர்த்தத்திற்கு தீபமேற்றி அன்னதானம் செய்கிறோம். அன்னதானத்திற்கு நன்கொடையாக ரூ. 1000, ரூ. 5000 அனுப்பும் ஆன்மீக அன்பர்களுக்கு இராமேஸ்வரத்தில் பூஜிக்கப்பட்ட "சேது தீர்த்த செம்பும்" வைப்பதற்கு ஸ்ரீ பர்வத வர்த்தினி சமேத ஸ்ரீ இராமநாத சுவாமி வண்ணப்படமும், சிறிய அளவில் சிவபுராண புத்தகமும் அனுப்பி வைக்கப்படும்.

. ரூ.5000 - அனுப்பும் அன்பர்களுக்கு, இராமலிங்க தீபம் அனுப்பி வைக்கப்படும். மேலும் ஒவ்வொரு மாதமும் அமாவாசை தினத்தில் இராமேஸ்வரத்தில் அக்னி தீர்த்தத்திற்கு தீபம் ஏற்றி அன்னதானம் செய்து பத்து வருடங்கள் "ஆன்மீகம் மாத இதழ்" தங்களுக்கு அனுப்பி வைக்கப்படும். அன்பர்கள் ஒவ்வொருவரின் பூஜை அறையும் மங்கலம் பெற வேண்டும் என்ற எண்ணத்துடன் ரூ. 5000 செலுத்துபவர்களுக்கு 336 பக்கங்களுடன் கூடிய பெரிய அளவில் உள்ள ஸ்ரீ மத் இராமாயணம்" புத்தகத்தை (தமிழில்) அனுப்பி வைக்கிறோம்.

குடும்பத்தில் தாய் தந்தையர்கள், மூதாதையர்களுக்கு இராமேஸ்வரத்தில் நேரில் சென்று 'தர்ப்பணம்' செய்ய முடியாதவர்களுக்காக, சாஸ்திரிகளைக் கொண்டு "ஸ்ரீ அன்னபூரணி அன்னதான சேவா டிரஸ்ட்" மூலம் தர்ப்பணம் செய்யப்படுகிறது. பித்ருக்களை குறித்து இராமேஸ்வரத்தில் செய்யப்படும் தர்ப்பணம் செல்வம், கீர்த்தி, ஆயுள் , ஸ்வர்க்கம் முதலிய நன்மைகளை அளிக்கும். எதிரிகளை விலக்கும். தன் வம்சம் தழைத்தோங்கச் செய்யும். மறைந்த முன்னோர்களுக்கு தர்ப்பணம் செய்ய ரூ. 750- அனுப்பும் போது யாருக்கு தர்ப்பணம் செய்ய விரும்புகிறீர்களோ அவரின் பெயர், திதி மற்றும் கோத்ரம் போன்ற விபரங்களையும் அவசியம் தெரிவிக்குமாறு கேட்டுக்கொள்கிறோம். மூர்த்தி, ஸ்தலம், தீர்த்தம் ஆகிய மூவகையாலும் சிறப்பு வாய்ந்த இராமேஸ்வரத்தில் தர்ப்பணம் செய்து கிடைத்தற்கரிய பேற்றினைப் பெற்று க்ஷேமமாக வாழுங்கள்.

இராமேஸ்வரத்தில் அமாவாசை நாளில் அன்னதானம் செய்ய விரும்பும் அன்பர்கள் எப்படி தாங்கள் என்ன வேண்டுதலுக்காக அக்னி தீர்த்தத்திற்கு தீபம் ஏற்ற வேண்டும் என்பதையும், உங்கள் பெயர், நட்சத்திரத்தையும் குறிப்பிட்டு எங்களுக்கு எழுதி அனுப்பினால் அதன்படி அமாவாசை நாளில் அக்னி தீர்த்தத்திற்கு தீபம் ஏற்றி தங்களுக்கு பிரசாதம் அனுப்பிவைக்கப்படும். தீபமேற்றும் பணியிலும், அன்னதானப் பணியிலும் ஈடுபட விரும்பும் அன்பர்கள் தங்கள் நன்கொடையை Cheque / D. D/ M. O. மூலம் Sri Annapoorani Annadhana Seva Trust, Chennai-4 என்ற பெயருக்கு எடுத்து கீழ்கண்ட முகவரிக்கு அனுப்பி வைக்கவும். பெருவாழ்வும், பேரின்பமும் அளிக்கும் புண்ணிய க்ஷேத்ரமான இராமேஸ்வரத்தில் நடைபெறும் இச் சிறந்த அன்னதானப் பணியிலும், அக்னி தீர்த்தத்திற்கு தீபவழிபாட்டு பணியிலும் பங்கு கொண்டு முன்னோர்களின் நல்லாசிகளைப்பெற உங்களை அழைக்கிறோம்.



ஸ்ரீ இராமநாத சுவாமி

நன்கொடைகளுக்கு 80G பிரிவின் படி வரி விலக்கு உண்டு.


Cheque / D. D/ M. O. அனுப்ப வேண்டிய முகவரி

ஸ்ரீ அன்னபூரணி அன்னதான சேவா டிரஸ்ட்

SRI ANNAPOORANI ANNADHANA SEVA TRUST (Regd.)

68, Nadu Street,(Opp. Sri Kapaleeswarar Temple) Mylapore, Chennai - 600 004.

TEL : 2495 9302, E-mail:siva siva @ vsnl.net



ஸ்ரீ பர்வதவர்த்தினி தாயார்

குழந்தையில்லாத குறையை நீக்கி நல்ல பிள்ளைகளைப் பெற்றெடுத்து மகிழ அக்னி தீர்த்தத்திற்கு தீப வழிபாடு செய்வது சிறந்தது !

கூப்பிடு தூரம்தான் வைகுந்தம்!

டாக்டர் சுதா சேஷய்யன்



இமைப் பொழுதும் நீங்காதான்...

ஆற்றல் மிகக் கொண்ட யோகி ஒருவர். அவர் நினைத்தால் என்ன வேண்டுமானாலும் செய்ய முடியும் என்னும் நிலையில் இருக்கக் கூடியவர். யோக பலத்தால் உயிர் கொடுப்பார்; உயிர் எடுப்பார்; எதுவும் செய்வார். அவரின் யோக சித்துக்களைக் காண எப்போதும் ஒரு பெருங்கூட்டம் காத்திருக்கும்.

அன்றும் அப்படித்தான். ஆடுமாடுகள் அதிரடியாய்த் தோன்றுவதையும் அடுத்த கணமே மறைவதையும் கண்டு வாய் பிளந்திருந்தது கூட்டம். ஊருக்குப் புதியவன் ஒருவன் _ யானை ஒன்றுடன் வந்தான். "ஆடுமாடுகள் சிறிய விலங்குகள், என் யானை பெரியது கேட்கப் பெரிதினும் பெரிது; என்ன செய்துவிட முடியும்?" என்று அதிகமாகவே அங்கலாய்த்தான். "அப்படியா சொல்கிறாய்! ஆடுமாடுகள் சிறியவையாய் இருக்கலாம்; ஆனால் என் ஆற்றல் பெரியது" என்று ஆத்திரம் கொண்டார் யோகியார். மந்திரக் கனலெடுத்துப் பார்வையில் தேக்கி யானை மீது செலுத்தினார் ஒரு கணம். மாபெரும் யானை மடேரெனச் சாய்ந்தது.

"ஐயோ என் யானை" என்று அழுது கதறிய இளைஞனைப் புன்னகையுடன் நோக்கினார். 'போனால் போகிறது பிழைத்துப் போ' என்கிற ஏளனச் சிரிப்புடன் இன்னுமொரு கண்வீச்சு _ அந்த மாமிருகம் அலட்டாமல் எழுந்தது.

தன் யானையை ஓடிச் சென்று பற்றிக் கொண்ட இளைஞன் மெல்ல நழுவினான். "யானையை விழவும் எழவும் வைத்த வித்தகனே! உமக்கு பக்கத்தில் நின்ற பகவானைக் கூடவா அடையாளம் புரியவில்லை" என்று பரிதவித்துக் கொண்டே போனான் புதியவனாய் வந்தவன்.

'கடவுளைத் தேடல்' என்று ஆன்மீகத்திற்கு விளக்கம் கொடுத்தால், அடுத்த கேள்வி அங்கேயே ஆரம்பமாகும். கடவுள் எங்கே இருக்கிறார்? 'எங்கேதான் இல்லை' என்றும் எதிர்க்கேள்வியை எழுப்பிய சனாதன தர்மம், ஆன்மிகம் என்பதற்கே ஒரு வேறுபட்ட விளக்கத்தைக் கொடுத்தது. ஆன்ம விசாரம் – சுய விசாரணை – தத்துவார்த்த கேள்வி.

ஆன்மிகச் சிறகுகளைச் சற்றே அடக்கிக் கொண்டு நடைமுறை மண்ணில் கால் பதிப்போம். ஒவ்வொரு மனிதனும் தன்னைத்தானே சில கேள்விகளைக் கேட்டுக் கொள்ள வேண்டியது ஒரு அன்றாட அவசியம். இன்று பேசிய சொற்கள் சரியானவையா? அடுத்தவரிடம் பழகிய முறை பாங்குடையதா? இன்னும் சற்றே மென்மையாய் நடத்திருக்கலாமோ? முடிவுகள் சரியா? முறைகள் சரியா? வழக்கமும் பழக்கமும் வாகானவையா? – இப்படி பற்பல வினாக்களை ஆசிரியர், மருத்துவர், வழக்கறிஞர், வங்கிப் பணியாளர், வணிகர், மேலாளர், அலுவலக ஊழியர், நிர்வாக இயக்குனர், ஓட்டுனர், நடத்துனர், மாணவர், கணவன், மனைவி, ஆண், பெண் என்று எல்லோரும் கேட்டுக் கொள்ள வேண்டியதாகிறது.

தன்னையே நோக்கி எழுப்பிக் கொள்ளும் இத்தகைய கேள்விகளுக்கு, மனோதத்துவம் உள் விசாரணை என்று பெயர் கொடுக்கிறது. நிர்வாகவியல் முதல் ஆளுமை மேம்பாடு வரை, இன்றைய பல புதிய துறைகளில், 'உள் விசாரணை' ஒரு முக்கிய அங்கம். ஆளுமை முன்னேற்றக் குறிப்புகள் இப்படிச் சொல்லும்: கேள்விகளைப் பட்டியலிடவும். விடைகளை

எழுதவும். சரியான பதில்களென்றால் விட்டு விடவும். தவறான பதில்கள் என்றால் சுற்றி வட்டமிடவும். பின்னர்... எங்கெல்லாம் விடைகள் நெருடுகின்றனவோ, அங்கெல்லாம் தன்னை, தன் பழக்க வழக்கங்களை, தன் அணுகுமுறைகளை மாற்றிக் கொண்டால் ஆளுமை மேம்படும்; அகிலம் வசப்படும்.

ஆளுமை மேம்பாட்டின் வினா வட்டம் விரிய விரிய... ஆன்மிக மேம்பாடாகும். உள்முக விசாரணை என்பது ஆளுமைப் பொலிவும், ஆன்மிகக் கனிவும் மட்டுமல்ல; அதுவே சமுதாயச் செறிவு. தன்னையே கேள்வி கேட்டு, நிறைகுறைகளை நிர்ணயித்துக் கொள்பவர்கள், பிரபஞ்சத்தில், அண்டத்தில், அகிலத்தில், சமூகத்தில் தாங்கள் ஒரு அங்கம்தான் என்பதை எளிமையாக உணர்வார்கள். ஆணவமும் அகங்காரமும் குறைகிற அதே நேரத்தில் அன்பும் அரவணைப்பும் பரவும். சுய முக்கியத்துவம் சமன்படும் நேரம், சமூக பிரக்ஞை நெறிப்படும்.



சமயக் கொள்கைகளையெல்லாம், சமூகக் கோட்பாடுகளோடு காண்பதே இந்து தர்மம்.

பள்ளிக் கூட நாட்களில் கணக்குப்பாடத் தேர்வுக்குப் புறப்படும்போது அந்தக் காலத்துப் பெரியவர்கள் அறிவுரை சொல்வார்கள்: 'கணக்கைப் பார்த்துப் போடு. விடை சரியா வரலேன்னாலும் பரவாயில்லை. வழிமுறைகள் தெளிவா இருந்தாலே மதிப்பெண் கிடைக்கும்!' நெஞ்சில் நிரப்பிக் கொள்ள வேண்டிய ஆலோசனை. தேர்வுக் கணக்குக்கு மட்டுமல்ல; வாழ்க்கைக் கணக்குக்கும் கூட!

இராமாவதாரம் எதற்காக ஏற்பட்டது? இது கூடத் தெரியாதா? – இராவண வதத்திற்காக! அப்படியானால், அதை சீக்கிரம் செய்ய

பட்டினி கிடந்தால்தான் பகவானைப் பார்க்க முடியுமா?

ஏகாதசி, கிருத்திகை போன்று குறிப்பிட்ட தினங்களைச் சொல்லி இத்தகு நாட்களில் விரதமிருப்பது, ஒருவேளை உண்பது என்றெல்லாம் சில வரை முறைகளை வைத்திருக்கிறார்கள்.



இவை ஏன்?

1. கட்டுப்பாட்டை வளர்க்கின்றன. மனக் கட்டுப்பாட்டைக் கொண்டுவர, முதலில் உடல் ரீதியாக, புலன்கள் ரீதியான பசி, தூக்கம் போன்ற அடிப்படை ஆசைகளைக் கட்டுப் படுத்த வேண்டும். டிசிப்ளின் என்று சிலாகிப்பதை, அன்றாட வாழ்வில் கொண்டு வரும் முறை இது!

2. கடவுள் பெயரால் கட்டுப்பாட்டைச் சொன்னால், அதைச் செய்வது முழுமையாக அமையும்.

3. விரதம் என்றால் பட்டினி கிடப்பது என்பதல்ல. உணவும் உடையும் வசதிகளும் இருந்தாலும் அவற்றுக்கு அடிமையாகி விடாமல், அவற்றை ஒதுக்கும் மனப்பக்குவத்தைப் பெறுதல். ஆண்டாள் கூட, ஆயர்பாடியில்தான் 'நெய்யுண்ணோம் பாலுண்ணோம்' (எங்கு பாலும் தயிரும் நெய்யும் அதிகம் உண்டோ) என்கிறாள். கண் முன்னால் எது உள்ளதோ, அதை வேண்டாமென்று சொல்ல, அதிகப் பக்குவம் வேண்டும்.

இன்றைய சூழலையும் வைத்துப் பார்த்தால்

அ) விரதம் ஒருவகையான உணவுச் சமன்பாடு. மாதத்தில் இரண்டு ஏகாதசிகள், ஒரு கிருத்திகை, (அமாவாசை மதியம் நன்கு சாப்பிட்டால் இரவு பலகாரம்)... இன்னும் இப்படியாக கலோரி பேலன்ஸ் என்று வைத்துக் கொள்ளலாம்.

ஆ) உணவு, உடை, வசதிகள் போன்றவற்றின் மீதான ஆசைகளும், அவற்றைக் கட்டுப்படுத்த முடியாத சலனங்களும், அவற்றைக் கண்டால் சுயமிழந்து வசப்படுதலும்தான் லஞ்சம் தொடங்கி பலவித ஊழல்களுக்கும் காரணம் என்பதை நாமறிவோம்.

இ) கிறிஸ்துவர்களிலும் (தூயவெள்ளியை ஒட்டிய நாட்களில்) இஸ்லாமியர்களிலும் (ரமலான் மாதத்தில்) விரதம் உண்டு.

வேண்டியதுதானே? பதினான்கு ஆண்டுகள் கல்லிலும் முள்ளிலும் காட்டிலும் மேட்டிலும் சுற்றித் திரிந்து... சீதையைத் தொலைத்து... அதன் பின்னரும் வழிதேடி... போர் என்று புறப்பட்ட பின்னாலும் சேது பந்தனம் செய்து சைன்யம் நடத்தி... அதன் பிறகும் அடி அடியாய் முன்னேறி... தெய்வம் என்றால் ஒரு அம்பு போதாதா? அல்லது தெய்வத்துக்கும் முழுமையான ஆற்றல் இல்லையா?

கிருஷ்ணனை தெய்வக் குழந்தையென்று அறிவர். பூதனை வீழ்ந்தது முதல் வண்டியாய், மரங்களாய், கன்றுக் குட்டியாய் வந்த அசுர அழிவுகள் தொடர்ச்சியாய் கம்ச சாணூர மர்த்தனம் வரை அந்த நந்தன் நம்பியின் ஆற்றல் அளப்பரியது. பதினொரு வயதில் வடமதுரா நகருக்கு வந்தான் கிருஷ்ணன். கம்ஸன் இறப்பிற்குப் பின், கண்ணனையும் பலராமனையும் மதுரையிலேயே இருந்துவிடும்படி வசுதேவர் வேண்ட, அதன்படி தங்குகின்றனர் இருவரும். அற்புதங்கள் நிகழ்த்தி அனைவரையும் மகிழ்ச்சிக் கடலில் மூழ்கடித்துக் கொண்டிருக்கும் கிருஷ்ணனுக்கும் ஒரு வேண்டுகோள் உண்டு. என்ன அது? இது நாள் வரை பெறாத கல்வியை, முறைப்படி ஒரு ஆசிரியரிடம் பெறவேண்டும். வசுதேவரிடம் கிருஷ்ணன் வைத்த விண்ணப்பம் இது. குருக்ஷேத்திரப் போர்க் களத்தில் கீதை மொழிந்து ஜகத்குருவாக விளங்கவிருக்கும் நாயகனும், சாந்திபனி முனிவரிடம் பாடம் பயிலப் போனான். ஏற்கெனவே தன் தெய்வீகத் திறமைகளை வெளிக்காட்டியவனுக்கு மேலும் ஆசிரியர் போதனை தேவையா?

இந்த நிகழ்வுகளைப் புராணங்களும் காப்பியங்களும் காட்டுகின்றன. ஏன்? காரணம் எளிமையானது.

எதைச் செய்தாலும் முறைப்படிச் செய்யவேண்டும் என்னும் கொள்கையுடையது சனாதன தர்மம். எப்படியும் செய்யலாமென்பதை விட இப்படித்தான் செய்ய வேண்டும் என்ற நிர்ணயம் நிறைந்தது. நியமம் - முறை என்றெல்லாம் வழங்கப்பெறுகிற வழிநெறி, இந்து தர்மத்தின் அர்த்தமுள்ள ஆணிவேர்.

முறையான வழி, முறையான விளைவைத் தரும். விளைவை மட்டுமே பார்த்துக் கொண்டு, வழியில் வண்டியைத் தடம் புரட்டி விட்டால், ஊர் போய்ச் சேரவே முடியாது. விளைவு, வழியை நியாயப் படுத்தும் என்னும் தடாலடிச் சிந்தனைக்கு

அருள்வாக்கு

மனிதர்களாகப் பிறந்தவர்கள் தர்மப்படி வாழ்வு நடத்த வேண்டுமானால் சகல காரியங்களிலும் விதிப்படி நடக்க வேண்டியிருக்கிறது. இந்த விதிமுறைகளை அவர்களுக்கு எடுத்துச் சொல்ல வேண்டியது ரொம்பவும் அவசியம். ஆனால், அவற்றை அவர்களாக ஏற்று, சுயேச்சையாகப் பின்பற்றுவதே அழகு. ஒருவரை நிர்ப்பந்தப்படுத்தி விதிகளை அநுசரிக்கச் செய்வதில் பெருமை இல்லை. சம்பிரதாயம் என்பது தானாக வழிவழியாக வந்திருக்கிறது. மக்கள் அதைத் தாமாக ஏற்றுப் பின்பற்றி வந்திருக்கிறார்கள். சம்பிரதாயத்தில் வந்துள்ள அத்தனை விதிமுறைகளையும் சாஸ்திரத்தில் சட்டம் போல் எழுதி வைக்கவில்லை. சட்டம் என்று எழுதி விட்டால் அது நிர்ப்பந்தமாகி விடுகிறது என்பதே காரணம். 'ஸஹஸ்ரம் வத; ஏகம் மாலிக' (ஆயிரம் விஷயங்களை வாயால் எடுத்துச் சொல்லு; ஆனால் ஒன்றைக் கூட எழுத்திலே எழுதி வைத்துக் கட்டாயப்படுத்தாதே) என்பது ஆன்றோர் வாக்கு.



– ஜகத்குரு காஞ்சி காமகோடி ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சார்ய ஸ்வாமிகள்.

முற்றிலும் மாறுபட்டது இந்தக் கருத்து. இன்னும் சொன்னால், விளைவைப் பற்றியே கவலைப்படாமல், முறையை முறைப்படி பின்பற்றுவதே பகவத் கீதையின் அறிவுரை. அன்றைய பாரதப் போரில் பரந்தாமன் புகன்றதையே, பிற்கால பாரதப் போராட்டங்களில், விளைவு, வழியை நியாயப்படுத்தாது என்று குரல் கொடுத்தார் காந்தியடிகள்.

நியமத்திற்கும் நெறிமுறைக்கும் முக்கியத்துவம் கொடுக்க வேண்டும் என்பதாலேயே அளப்பரிய ஆற்றல் இருந்தும், அதிரடி அற்புத ஆசாமிகளாக இந்து சமயக் கடவுளர்கள் காட்டப்படவில்லை.

கல்வெளியில் கண்ணுறங்கிய இராமலக்குவர்களை வைகறையில் துயில் எழுப்பினாராம் விசுவாமித்திரர். முதன் முதல் சுப்ரபாதம் பாடிய அவர், என்ன பாடுகிறார்? 'கடமையைச் செய்ய எழுந்திரு ராமா – நரசார்தூல கர்த்தவ்யம் தைவ மாஹ்னிகம் - உத்திஷ்ட' கடவுள் அவதாரத்துக்கே கடமை அழைப்பா? ஆம். கடமை வழி காட்ட, கடவுளே முன் மாதிரி, முதல் மாதிரி. விசுவாமித்திரரின் உத்திஷ்ட பாடலையே சமுதாய இளைஞர்களுக்கு உத்திஷ்ட - ஜாக்ரத (எழுந்திரு – விழித்திரு) என்னும் நவீன மந்திரமாக்கினார் விவேகானந்தர்.

வழிபாடு, வாழ்க்கை வழிகாட்டுதலாகவும் ஆக வேண்டும் என்பதால்தான் கடவுளர்களே கர்ம வீரர்களாகவும் திகழ்கிறார்கள். எந்த நேரமும் கோலெடுத்துத் தேரோட்டத் தயாராகவிருக்கும் கண்ணனும், மயிலேறி பறக்கக் காத்திருக்கும் முருகனும், கருடனின் கழுத்தேறிக் காற்றினும் கடிது வரும் மாயோனும் பக்தர்களின் அழைப்பை எதிர்நோக்கி இருப்பவர்கள்; கூப்பிட்ட குரலுக்கு ஓடோடியும் வருபவர்கள்; தொண்டர் பணி செய்வதே தத்தம் கடமையென, விரைந்து வர, வழிகண்டு நிற்பவர்கள்.

அது சரி, எங்கே இருக்கிறார்கள் இவர்கள்? ஒரு உபன்யாசகர் திட்டவட்டமாக அறிவித்தார்: 'வைகுண்டம் கூப்பிடு தூரம்தான்' எப்படி உங்களுக்குத் தெரியும் என்று விசாரித்தபோது அவர் தெளிவுபடுத்தினார் – ஆதிமூலமே என்று யானை அழைத்தது பகவான் காதில் கேட்டதென்றால், கூப்பிடு தூரமாகத்தானே யிருக்கவேண்டும்!

கடமையாற்றுபவர்களுக்கு அருகாமையில் ஆண்டவனின் குடியிருப்பு. அதனால்தான் தேரோட்டியாக வந்து தொண்டு புரியவும் தயாராகிச் சேவகனாகச் சிரிக்கிறான் பரந்தாமன். உயிர்களை உய்விக்கும் கடமையிலிருந்து விலகவும் ஆண்டவனுக்கு அவகாசமில்லை.

தன் மனத்துட் புகுந்த மறைநாயகனை வழுத்தும்போது "இமைப் பொழுதும் என்நெஞ்சில் நீங்காதான் தாள் வாழ்க!" என்று வணங்கினார் மாணிக்கவாசகர். கண் சிமிட்டும் நேரம் கூட அவன் பிரியாதவன் – தன் பக்தர்களை. 'இமைப் பொழுதும் என்நெஞ்சைவிட்டு இறைவனை நீக்க மாட்டேன்' என்பது பக்தனின் பாங்கு. ஆயின், பக்தர்களே பாராமுகம் காட்டினாலும், கணப்பொழுதும் அவர்களின் நெஞ்சம் விட்டு அவன் நீங்காதான் – இது கடவுளின் பண்பு – இதுவே கடமையின் பண்பு.

(தொடரும்)



• அந்த வீடு

'எம்பித்ரி'(MP3)என்ற வார்த்தை இசை ரசிகர்களுக்கு மோகனம் என்றால் திரையுலகின ருக்கு முகாரி. ஒரே சி.டி.க்குள் நூற்று இருபது பாடல்களை அநாயாசமாக பதிவு செய்து கொள்ளும் இந்த எம்பித்ரி வசதியால், திரைப்பட பாடல்களின் ஆடியோ சந்தை அடியோடு படுத்துவிட்டது.

ஏ.ஆர். ரஹ்மான் இசை அமைத் தால் கூட, ஒலி நாடா உரிமையை சீண்டுவாரில்லாமல் போய் விட்ட தற்கு இன்னொரு முக்கியக் காரணம் போலி ஒலிநாடாக்கள். படநிறு வனங்களே வெளியிடும் 'கம்பெனி கேசட்'டின் சந்தை விலையை விட, பாதி விலைக்கு விற்கப்படும் இந்தப் போலி ஒலி நாடாக்களை, ஒழிக்கவே முடியவில்லை. பிறகு எப்படித் தான் ஆடியோ சந்தையைக் காப் பாற்றுவது?

ஏவி.எம். பட நிறுவனம் இதற் கொரு தீர்வைக் கண்டுபிடித்து எல்லோருக்கும் வழிகாட்டுகிறேன் பேர்வழி என்று அசத்தியிருக் கிறது!


அப்படி என்ன தீர்வு?



• படத்தில் - ஷர்மிளி, ஷாம், மனோரமா

'மின்சாரக் கனவு' படத்திற்குப் பிறகு திரைப்படமே தயாரிக்காமல் இருந்த ஏவி.எம்., ஆறு ஆண்டுகள் இடைவெளிக்குப் பிறகு ஜெமினியைத் தயாரித்தது. இந்தப் படத்தின் மெகா வெற்றி கொடுத்த உற்சாகத்தில், தமது நூற்று அறுபத்து நான்காவது படமான 'அன்பே அன்பே' படத்தை எழுபத்திரண்டு நாட்களுக்குள் எடுத்து முடித்திருக்கிறார்கள். மே முதல் தேதியன்று உலகம் முழுக்க ரிலீஸ். பட பூஜையன்றே வெளியீட்டுத் தேதியையும் அறிவித்துவிடுவதுதான் ஏவி.எம். ஸ்டைல். இந்த முறை இவர்களின் அசுர வேகத்திற்கு ஈடு கொடுத்திருக்கிறார் அறிமுக இயக்குனர் மணிபாரதி. சரணிடம் இணை இயக்கு னராகப் பணியாற்றியவர்.

"வனவாசம் போல சினிமாவுக்கு வந்து பதினான்கு வருடங்கள் ஆகிவிட்டது. சுமார் வருடத்திற்கு ஒரு படம் வீதம், பதினான்கு படங்களில் பணியாற்றிய அனுபவம் காரணமாக, முதல் நாள் படப்பிடிப்பிலேயே ஆறு காட்சிகளை எடுக்க முடிந்தது. 'ஒரு புது இயக்குனர்கிட்டே நடிக்கிற மாதிரியே இல்லப்பா' என்று ஆச்சி மனோரமா பாராட்டினார்" என நெகிழ்ந்து போகிறார் மணிபாரதி.



தோஸ்து சாஸ்திரம்!

ஷாம், ஷர்மிளி தவிர, நம்பியார், மணிவண்ணன், விவேக், செந்தில், யுகேந்திரன், சிந்து, தலைவாசல் விஜய் என்று நீண்ட நட்சத்திர அணிவகுப்பு. "இது ஒரு கூட்டுக் குடும்பப்படம். கூட்டுக் குடும்பத்தில் நடக்கும் காதல் கதை. திரைக்கதையின் களம் கன்னியாகுமாரி. இந்தக் கதைக்கு வீடு மிக மிக முக்கியம். படத்தில் அதுவும் பாத்திரம் என்று கூட சொல்லி விடலாம். கிட்டத்தட்ட ஆறாயிரம் கிலோ மீட்டர் தமிழ்நாடு முழுக்க சுற்றித் திரிந்து, காங்கேயம் அருகில் பழையக் கோட்டை என்ற ஊரில் ஒரு வீட்டைப் பிடித்தோம். சிவகுமார் மன்றாடியார் என்ற ஜமீன் ராஜாவுக்குச் சொந்தமான வீடு. முதல் பார்வையிலேயே பிடித்துப் போய்விட்டது. ஆனால் அந்த அரண்மனையின் உரிமையாளர் அனுமதிக்க வேண்டுமே! ஏற்கெனவே ரஜினிகாந்த் கேட்டு இல்லை என்று மறுத்த உரிமையாளர், ஏவி.எம். என்றதும் அனுமதி கொடுத்தார்" என்கிறார் இயக்குனர்.

ஜெமினியில் 'ஓ' போடு மாதிரி 'அன்பே அன்பே'வில் ஏதேனும் பாடல் உண்டா? என்றால் "அது இல்லாமலா!... இந்த முறை வாலி எழுதியிருக்கிறார். "நான் வாஸ்து சாஸ்திரம் பார்த்து கட்டின வீடு. தோஸ்து சாஸ்திரம் பார்த்து கட்டுற ஆளு" என்று தொடங்கும் பாட்டு, இனி பட்டிதொட்டியெங்கும் ஒலிக்கும்" என்று நம்புகிறார்.

எல்லாம் சரி! போலி ஆடியோ கேசட்டுகளை ஒழிக்க ஏவி.எம். கண்டுபிடித்த தீர்வு?

பைரசி கேசட்டுகளின் விலையான ரூபாய் இருபதுக்கே ஒரிஜினல் கேசட்டுக்களையும் விற்பனை செய்கிறார்கள். ஆடியோ சி.டி.யின் விலையோ ரூபாய் அறுபது. இதில் 'அன்பே அன்பே' பாடல்களோடு போனஸாக, ஜெமினி படப் பாடல்கள் இலவசம். இத்தனை விலை குறைவாக எப்படிக் கொடுக்க முடிகிறது இவர்களால்?

"ஒரே நோக்கம். பைரசி கேசட்டுகளை ரசிகர்கள் புறக்கணிக்க வேண்டும். இதற்கென்றே லாப விகிதத்தைப் பொருட்படுத்தாமல் அதிரடியாக விலையைக் குறைத்திருக்கிறோம்" என்கிறார்கள்.

ஏவி.எம்மா கொக்கா?

— ஜெய்



• மணி பாரதி

நடக்கும் என்பார்; நடக்கும்!



மேஷம் : கிரகங்களெல்லாம் கூடிப் பேசி முடிவெடுத்து, நல்ல நல்ல கட்டங்களில் அமர்ந்து அனுக்கிரகம் செய்வதால், மேஷ ராசிக்காரர்கள், பெட்ரோல் கிடைத்த டூவீலர்காரர் போல மிகவும் சந்தோஷமடைவார்கள். எடுத்த காரியத்தில் வெற்றி, நிறைந்த கஜானா என குதூகலம் உண்டாகும். வெளிநாட்டுத் தொடர்பு அனுகூலம் தரும். மாணவர்கள் புதிய முயற்சிகளில் ஈடுபடலாம். குல தெய்வப் பிரார்த்தனை பலன் தரும்.



ரிஷபம் : உத்தியோக விஷயத்தில் கொஞ்சம் உட்டாலக்கடி வேலையெல்லாம் செய்ய வேண்டியிருக்கும். குறிப்பா, மேலதிகாரிகள் கிட்டே பணிவா நடந்துக்குங்க. ராணி மேரி கல்லூரி விஷயத்தில் முதல்வர் ஜெயலலிதா காட்டும் பிடிவாதம் போல, சண்டித் தனம் செய்தீர்களோ, ரொம்ப சிரமப்பட வேண்டியிருக்கும். சுய தொழில் கலபமாக லாபம் ஈட்டித் தரும். பொருளாதார நிலையில் அபிவிருத்தி உண்டு. இயந்திரம், உலோகம், ரசாயனம், மருத்துவம், ஆயத்த ஆடை, உணவு ஆகிய இனங்களில் எதிர்பார்த்த ஆதாயம் கிட்டும்.



மிதுனம் : குடும்பத்தில் அமைதி, சரளமான பணவசதி, உற்சாகமான மனநிலை இம்மூன்றும் 'த்ரீ ரோஸஸ்' கதாநாயகிகள் போல புதுப் பொலிவு தரும். பழைய கடன் தொல்லைகள் நீங்கும். கலைத் துறை சம்பந்தப்பட்டவர்கள் முன்னேற்றம் அடைவார்கள். பொன், வெள்ளி ஆபரணம், புத்தகம், அழகு சாதனப் பொருட்கள் ஆதாயம் கொண்டு வரும். குரு பலம் பரிபூரணமாக நிறைந்திருப்பதால் திருமணம், புதுமனை புகு விழா போன்ற சுப காரியங்கள் நடைபெறும்.



கடகம் : அன்னதானம் வழங்கப்படும் கோயில்களின் எண்ணிக்கை அதிகரித்துக் கொண்டேயிருப்பதுபோல, உங்கள் வாழ்விலும் புதிய தொழில் முயற்சிகளை அதிகரித்துக் கொண்டேயிருங்கள். நல்ல திருப்பங்கள் ஏற்பட வாய்ப்பிருக்கிறது. பூர்வீக சொத்து விவகாரம் அனுகூலமாகும். சிலர் வாகன யோகம் அடைவார்கள். பெண்களுக்குத் தெளிவான மனநிலை, தெய்வீக ஈடுபாடு, உற்சாகம் ஏற்படும். நண்பர்கள், உடன் பிறந்தவர்கள் உதவுவார்கள்.




சிம்மம் : ஆச்சு, போச்சு அக்கப் போர் எல்லாம் முடிந்து ஒரு முடிவுக்கு வந்த கேபிள் டீவி. யுத்தம் போல, உங்களை மனக் குழப்பத்தில் ஆழ்த்தியிருந்த பிரச்னைகள் எல்லாம் நல்லதொரு முடிவுக்கு வரும் நேரம் வந்தே விட்டது. துணிவுடன் சில காரியங்களை நிறைவேற்றுவீர்கள். கொடுக்கல் வாங்கல் கை கொடுக்கும். தொழிலில் நல்ல முன்னேற்றம் உண்டாகும். மனை, வீடு, வாகனம், இந்த வகையில் தொட்டதெல்லாம் பொன்னாகும்.



கன்னி : மண் புகழும் மந்திரா பேடியை தமிழ் சினிமாவுக்கு அழைத்து வந்த பார்த்திபனைப் போல, நீங்களும் குடும்பத்துக்குள் குதூகலத்தைக் கொண்டு வருவீர்கள். வெளிநாட்டுத் தொடர்புடைய வியாபாரம், மேன்மை அடையும். உத்தியோகத்தில் எல்லா வகையிலும் சீரான முன்னேற்றம் இருக்கும். பிரபு தனவான்களின் ஆதரவால் மேற்கொள்ளப்படும் பயணங்களில் கவனம் தேவை. கணவன் - மனைவி உற்ற நிலை இனிமையாக இருக்கும். திருமணமானவர்களுக்கு மகப்பேறு பாக்கியம் உண்டாகும்.




துலாம் : கண்டபடி பாயும் பொடா சட்டம் போல, உங்களுடைய கனவுகளும் சரியான இலக்கின்றி அலைந்து கொண்டிருந்ததல்லவா? இனி, கவலையை விடுங்க! உத்தி யோகத்தில் எதிர்பாராத பதவி உயர்வு, விருப்ப இட மாற்றம் போன்றவை கிடைக்கும். புதிய முயற்சிகள் அனுகூலம் தரும். வெளிநாட்டுத் தொடர்பு ஆதாயம் கொண்டு வரும். குடும்பத்தில் கணவன் - மனைவி உறவில் குதூகலம் நிரம்பி வழியும். பெண்களுக்குப் பொன், வெள்ளி, ஆபரணச் சேர்க்கை ஏற்படும்.



துணைப் பிரதமர் அத்வானிக்கு (ரிஷபம்) கொஞ்சம் சிரமமாமே!



விருச்சிகம் : சிங்கப்பூரையே கதிகலக்கிய சார்ஸ் நோய் போல, உங்கள் மன அமைதியை அலைக்கழித்து வந்த பல்வேறு கவலைகள் இந்த வாரத்தோடு 'கப்சிப்' என்று அடங்கிப் போகும். தெய்வ பலம் பரிபூரணமாக அமையும். இதுவரை தாமதமாகி வந்த காரியங்கள் அனுகூலமாகும். மக்கள் நலம் சீராக இருக்கும். சுபமங்கள காரியங்கள் சடுதியில் நிறைவேறும்.




தனுசு : முத்தரப்புக் கிரிக்கெட் தொடரில், மூக்குடையும் என்று தெரிந்தும் விளையாடும் பங்களாதேஷின் துணிச்சலைப் போலத்தான் தனுசுக்காரர்களுடையதும். மோத முடியாது என்று சவால் விடும் எதிரிகள்மீது கூட நீங்கள் மோதத் தயாராவீர்கள். இதனால் உங்கள் கீர்த்தி, ஆற்றல் வெளிப்படும். தனவான்களின் ஆதரவு கிடைக்கும். கொடுக்கல் - வாங்கல் சீராக இருக்கும். தொழில் சம்பந்தமான பயணம் வாய்க்கும். குடும்பத்தில் மகிழ்ச்சி நிலைக்கும்.



மகரம் : சல்மான் கானை ஓவர் டேக் செய்துவிட்ட நடிகர் விவேக் ஓபராய் காலம் வந்தே விட்டது. ராசிநாதன் சனி பகவான், ஆறாம் இடத்தில் பலம் பெற்றிருப்பது என்ன சாமான்ய விஷயமா? ஜாதகத்துக்கே தனிப் பொலிவு அல்லவா கிடைக்கும்? தெளிவான மனநிலை, எடுத்த காரியங்களில் வெற்றி, துணிவு, தன்னம்பிக்கை எல்லாமே ஏற்பட்டு, சிறப்புப் பெறுவீர்கள். அயல்நாடு போகும் நல்ல சந்தர்ப்பம் அமையும். மேலதிகாரிகளின் பாராட்டுக்கு ஆளாவீர்கள். பெண்களுக்கு அதிர்ஷ்டமான வாரம். கிரக வழிபாடு நன்மை தரும்.



கும்பம் : 'சதாம் உசேன் இருக்காரா? தப்பி விட்டாரா?' என்று குழம்பித் தவிக்கும் அமெரிக்க அதிபர் புஷ் போல, உங்களுக்கும் ஏகப்பட்ட சந்தேகங்கள். அதுவும் தொழில் துறையில் இருந்து பாடாய்ப்படுத்திக் கொண்டிருந்ததல்லவா? கவலைப்படேல். சர்வம் சௌக்கிய மயம். இதுவரை தாமதமாகி வந்த காரியங் கள் எல்லாமே 'மளமள' என்று நிறைவேறி, மனசுக்குச் சந்துஷ்டி தரும். பயணத்தால் அனுகூலம் உண்டு. பெண்களின் அபிலாஷைகள் நிறைவேறும். அரசியல்வாதிகள் அந்தஸ்து கூடப் பெறுவார்கள்.



மீனம் : உச்சாணிக்கு ஏறிவிட்ட காய்கறி விலை போல, உங்கள் மதிப்பும் அந்தஸ்தும் திடீரென்று ஏற்றம் பெறும். பூர்வ புண்ணியஸ்தானத்தில் உச்சம் பெற்று சஞ்சாரம் செய்யும் குரு பகவானுக்கும், ராசியில் உச்சம்பெற்ற டாப் ஸ்டார் சுக்ரனுக்கும் ஒரு சல்யூட் அடித்துவிட்டு, தடாலடியாகக் காரியங்களில் இறங்குங்கள். சுய தொழில் பொருளாதார மேன்மை ஏற்படும். சுபச் செலவுகள் ஏற்படும். கஜானாவை நிரப்பி வைக்கவும். புனித ஸ்தல யாத்திரை சந்தர்ப்பம் கனிந்து வரும். ஒரு சிலருக்கு, புதிய வீடு கட்டும் யோகம் வரும்.

அக்னி சர்மா பக்கம்

ஏப்ரல் 23 முதல் 29 வரை

வாகனமற்ற சாலையில்!

மாதம் முதலில்
அல்லது கடைசியில்
லாரிகளின் இடைவிடா ஓட்டம்
காலியாகவோ
தானியச் சுமையுடனோ.
தானியக்கிடங்கு
அருகில் அமைந்த என் வீடு.
ஆள் அரவமற்ற
விடியற்கருக்கலில்
காக்கையும், குருவியும்
பசியாறுகின்றன
விழுந்த தானியம் கொத்தி
வாகனமற்ற சாலையில்.

— 'க்ருஷாங்கினி'



● இரா.சோமசுந்தரம்

"கொழந்தே. யப்பா. உனக்குக் கால் வெளங்காம போச்சேன்னு கவலைப்படாதே. நா சொல்ற கதையெல்லாம் நெனவு வச்சுக்க. நீயும் ஊர் புள்ளைங்களுக்குச் சொல்லு. உனக்குச் சோறு குடுப்பாங்க. சொக்கா குடுப் பாங்க. கால் போனாப் போவுது. வாயால வயிறு வளத்துக்க..."

பேரன் சின்னக்கொழந்தை, கேட்கிறானா இல்லையா என்ற கவலையே இல்லாமல் வெற்றிலைப் பாக்கை உரலில் இடித்துக் கொண்டிருந்தாள்.

வயல்களுக்கு மத்தியில் வீடு இருந்தது. ஒரு கிலோமீட்டர் தூரத்தில் திருமலை சமுத்திரம் ஏரி. மாலை நேரத்து ஏரியின் காற்று குளுமையாக வந்து கொண்டிருந்தது.

"பாட்டி, நீ எனக்குக் கதை சொல்லத் தான் அப்பன் உனக்குச் சோறுபோடுதா?" குழந்தை கேட்டான்.

"நா வளர்த்த புள்ளடா உங்கப்பன். எனக்கு உரிமையிருக்கு. அவனுக்குக் கடமை இருக்கு." இடித்ததை வாயில் போட்டுக் கொண்டாள். "....அப்புறம் நீ சொன்னாப்பல வூட்டையும் உன்னையும் பாத்துக்கத்தான் சோறு போடுறான்" என்றாள். அவளது ஒளியிழந்த கண்கள் வேப்ப மரத்தின் மீது நின்றது. நீண்ட நேரம் அசையக்கூட இல்லா மல் அப்படியே இருந்தாள். பாட்டியின் கண்கள் அசையத் தொடங்கின. உதடுகளில் வழியும் வெற்றிலைச் சாற்றைத் துடைத்தாள்.

"பாட்டி.... அம்மா இன்னும் காண லையே."

"வருவா. கடைசி நடவு ஆச்சே. மொத் தமும் முடிச்சிட்டு வருவா."

"ஏதாவது கதை சொல்லு பாட்டி."

"என்ன கதை?"

கேட்டவுடன் கதை சொல்லத் தொடங்கி னால் அப்போது அது புதுக்கதையாக இருக் கும். குழந்தையின் விருப்பத்தைக் கேட்டாள் என்றால், அது பழைய கதைதான். குழந்தை குறிப்பிடும் கதையைத்தான் மீண்டும் சொல்வாள்.

"வீரய்யன் கதை."

பாட்டி எந்த ஆயத்தமும் இல்லாமல் கதையைத் தொடங்கினாள்.

"ரொம்ப காலத்துக்கு முன்னால் ஒரு சின்ன ஊர்ல, ஒரு அப்பனுக்கு ரெண்டு புள்ளைங்க. ஒண்ணு எல்லாரையும் போல

இருந்துச்சு. இன்னொன்னு உன்னைப்போல, கால் வெளங்காம கிடந்தது. அப்பனும் ஆத்தாளும் நல்லா இருந்த கொழந்தைய கூட்டிக்கினு கழனிக்கு போவாங்க. கால் வெளங்காத புள்ள வீட்லய இருக்கும்."

"இப்படி இருந்தப்ப, ஒரு நாள், அந்த வூட்டுக்கு ஒரு சாமியாரு வந்தாரு. வூட்டுக்கு முன்னால நின்னு, 'உம் பேரென்ன ராசா'ன்னார். அவனும் 'எம் பேரு வீரய்யன் சாமி'ன்னு சொன்னான். 'சரி போய் குடிக்கத் தண்ணி கொண்டு வா. வீரய்யா, ரொம்ப



சொல்

தாகமா இருக்கு'ன்னு சாமியார் சொன்னாரு. 'சாமி, அந்த தெய்வம் என்னை கால் வெளங்காம பண்ணிடுச்சு. நா எப்படி போவேன்? நீங்களே வந்து மொண்டு குடிங்க'ன்னான். 'டேய், எனக்குத் தெரியும்டா (பாட்டியின் கூன் முதுகு நிமிர்ந்தது. கண்கள் சிவக்கப் பார்த்தாள்) நீ எழுந்து போய் கொண்டா'ன்னு சப்தம் போட்டது சாமி. இப்படிச் சாமி சொன்னதும் வீரய்யனுக்குக் கால் பூரா நெருப்பா சுட்டது. ரத்தம் சுடுதண்ணி போல ஓடிச்சு. கைய ஊனி எழுந்து நின்னான். தடுமாறி நடந்து போய் தண்ணி கொண்டாந்து கொடுத்தான். 'இப்ப எப்படி இருக்கு'ன்னார் சாமியார். 'நிக்க முடியுது. இன்னும் பலம் வரல'ன்னு சொன்னான். அவனுக்குச் சந்தோஷம்னா அப்படியொரு சந்தோஷம்... சொம்பு தண்ணிய பாதி குடிச்சிட்டு, மீதிய அவன்கிட்ட கொடுத்த சாமி, நீ இதக் குடி, பலம் வரும்'ன்னு சொன்னது. குடித்தான். உடம்பு தசையெல்லாம் கல்லாய் மாறிட்டாப்பல இருந்தது. சாமியாரு வந்த வழியே போயிட்டாரு. வீரய்யன் களத்து மேட்டுக்குப் போனான். அறுவடை பண்ணிவச்ச மொத்த நெல்லையும் ஒத்த ஆளா, ஒரே தூக்குத் தூக்கி வந்து வீட்டுல இறக்கி வச்சான்."

பாட்டி கதையை நிறுத்தினாள்.

"அப்புறம்தான் உனக்குத் தெரியுமே. அவன் பலம் ராஜாவுக்குத் தெரிஞ்சது. தளபதியானான். இளவரசிய கட்டிக்கிட்டான். பல காலம் ஆண்டான். அந்தச் சாமியாரைத் தேடிக் கூட்டியாந்து அவருக்கு கோயில் கட்டி வச்சான்."

கதையை பாட்டி ரொம்ப சுருக்கி விட்

டான். அவளாகச் சொல்கிறபோது இதில் பெரிய தொடர்ச்சி இருக்கும். வீரம் செறியும். இரவு சாப்பாட்டுக்குப் பின்னாலும் திண்ணையில் படுத்துக் கொண்டு கதையைத் தொடர்ந்து சொல்வாள்.

ஏனோ அந்தக் கதை மட்டும்தான் அவனுக்குப் பிடித்திருந்தது. பாட்டி எத்தனையோ கதைகள் சொன்னபோதிலும், அந்த ஒரு கதைதான் எப்போதும் மனத்தில் இருந்து கொண்டே இருந்தது.

பாட்டி செத்துப் போனாள். பல ஆண்டுகள் சென்ற போதிலும் அந்தக் கதை அப்படியே தினமும் மனத்தில் ஒலித்துக் கொண்டே இருந்தது. நாளாக, நாளாக அந்தக் கதைக்கு மனத்தில் உரு ஏறியது. தன் வாழ்விலும் நடப்பது போன்ற கனவுகள் வந்தன. அக்கனவுகளை தன் வாழ்வின் அறிகுறியாகக் கண்டான். அப்பாவும் அம்மாவும் தம்பியும் கழனிக்குப் போனதும் அந்தச் சாமியாரின் வரவுக்காகக் காத்திருப்பான், தினமும்.

ஒரு நாள் சாமியார் வரவே செய்தார்.

அவன் கண்களில் ஆனந்தக் கண்ணீர் பெருகியது. வாசலில் நின்ற சாமியார் அவன் பேரைக் கேட்டார். சொன்னான். "கொழந்தே, ரொம்ப தாகமாக இருக்கு, குடிக்கத் தண்ணி கொண்டு வா" என்றார் சாமியார். அவன் கால்கள் கொதித்தன. அந்த கொதிப்பில் நரம்புகள் கிளைத்து முட்டுவதில் சூம்பிய கால்கள் வலித்திழுத்துத் துடித்தன. கால் பொசுங்கிப்போனதோ என சந்தேகப்படும்படியாக கால்கள் தகித்தன.

"சாமி, அந்த தெய்வம் என்னை கால் வெளங்காம பண்ணிடுச்சே. நீங்களே மொண்டுக்கங்க" என்றான்.

அடுத்த சொல் அவனுக்குத் தெரியும். கைகளைத் தரையில் ஊன்றி, தகிக்கும் கால்களை அசைத்து எழுந்து நிற்க ஆயத்தமானான். மண்டையிலிருந்து ஒரு வெளிச்சம் பரவிக் கொண்டிருந்தது.

"அடப் பாவமே, அப்ப நானே மொண்டுக்கறேன்" என்றார் சாமியார். ○



ஒவ்வொரு குறிப்பும் உணர்த்தும் விடையை எதிரே உள்ள கோடுகளில் நிரப்புங்கள். வட்டத்துக்குள் உள்ள எழுத்துக்களை மட்டும் ஒழுங்குபடுத்தினால் விடைப் பகுதியில் உள்ள குறிப்பு உணர்த்துவது கிடைத்துவிடும்.

1. இந்த மன்னன் எழுப்பியது சிறிய கோவில் அல்ல! _ _ ○ _ _
2. கமல் - அமலா நடித்த 'பேசாத' திரைப்படம் ○ _ _ _ _ _
3. நடிகர் ஸ்ரீகாந்த்தின் ஹாட்ரிக்! ○ _ _ _ _ _
4. 'ஆயிரம் நிலவே வா' பாடல் இந்தப் படத்தில் _ ○ _ _ _ _
5. சமீபத்தில் மறைந்த தமிழ் எழுத்தாளர் _ _ ○ _ _ _
6. இவர் தன்னை தரிசிக்க நந்தியை விலக வைத்தார் இறைவன்: _ ○ _ _

சமீப உலகக் கோப்பையில் பெரும் புகழ் பெற்ற இந்தியர்!

— ஜி.எஸ்.எஸ்

விடை: மந்த்ரா பேடி

விடைகள்: 1. ராஜராஜன், 2. பேசும்படம், 3. மனசெல்லாம், 4. அடிமைப்பெண், 5. சமுத்திரம், 6. நந்தன்

கோடை வெயில் கொளுத்த ஆரம்பித்துவிட்டதே! வெயிலை எப்படி சமாளிக்கிறீர்கள் என்று டீ.வி பிரபலங்களைக் கேட்டோம்.



வர்ஷினி



லாவண்யா



ஷாமினி

தர்ப்பூசணிக் குளியல்!


ஆர்த்தி : இந்த வருஷ கோடை வெயிலை சமாளிக்க நான் நாடுவது தர்ப்பூசணியும், இளநீரும்தான். வெளியில் போகிறபோது இளநீர் வாங்கிக் குடிப்பது தவிர, வீட்டு ஃபிரிட்ஜில் சமீபத்தில் அறிமுகமாகியுள்ள பாக்கெட் இளநீர் எப்போதும் ஸ்டாக் இருக்கும். தர்ப்பூசணியை வழக்கமான ஜூஸ் பிழிந்து குடிப்பதுடன், நான் இரண்டு மூன்று நாட்களுக்கு ஒரு தடவை தர்ப்பூசணிக் குளியல் போடுவேன். தடித்த தோல் பகுதியை நீக்கி, உள்ளே இருக்கும் சிவந்த பழத்தைத் துண்டுகளாக்கி, ஐஸ் கட்டிகள் போட்டு, உடம்பு மற்றும் தலையில் தேய்த்து ஜாலியாய்க் குளிப்பேன்! வெயிலுக்கு நல்ல ரிலீஃப்.

வர்ஷினி : தண்ணீர்... தண்ணீர்... நிறைய தண்ணீர் குடிக்கிறேன். ஃபிரிட்ஜிலிருந்து ரொம்ப சில்லென்று தண்ணீர் குடித்தால், கொஞ்சம் தண்ணீர் குடித்தவுடன் தாகம் அடங்கி விடுகிறது. இப்படிச் செய்தால், உடலுக்குப் போதுமான அளவு தண்ணீர் கிடைக்காது. ஜில் இல்லாமல் சாதாரண தண்ணீர் எவ்வளவு குடித்தாலும் தாகம் அடங்காது. எனவே, மிதமான ஜில்லுடன், நிறைய தண்ணீர் குடிக்கிறேன். தவிர, எனக்கு வெயிலைச் சமாளிக்க கை கொடுக்கும் விஷயங்கள் லெமன், தர்ப்பூசணி ஜூஸ்தான்.

ஷாமினி : கண்ணுக்குக் கூலிங் கிளாஸ், உடலுக்கு வெயிலைச் சமாளிக்க கிரீம். தலைக்கு கேப். நான் அணிவது லூசான நூறு சதவீத காட்டன் உடைகள்தான்! வெளியில் போய்விட்டு, வீட்டுக்குள் நுழைந்தவுடன், நேரே ஃபிரிட்ஜில் வைத்திருக்கும் டர்க்கி டவலால் முகத்தையும், கழுத்து, கைகளையும் ஜம்மென்று துடைத்துக் கொள்ளுவேன். புத்துணர்ச்சி கிடைக்கும்.

லாவண்யா : கோவையில் பிறந்து வளர்ந்த எனக்கு, சென்னை வெயில் ரொம்பக் கொடுமையாக இருக்கிறது. அதிலும் எங்களுடைய ஃபிளாட், மூன்றாவது மாடியில் என்பதால், வெயில் கொடுமை ரொம்ப அதிகம். வெயில் நேரத்தில் சமையல் அறைக்குள் படும் அவஸ்தை இருக்கிறதே! அப்பப்பா! சமையலறைக்குள் நிற்கிற நேரத்தைக் குறைத்துக் கொள்ளுகிறேன். மாலையில் மொட்டை மாடியில் தண்ணீர் தெளித்து, இரவில் சூட்டைத் தணித்துக் கொள்ள முடிகிறது. இருபத்து நாலு மணி நேரமும் ஃபேன் சுற்றுகிறது.

- கௌதம்



மல்லு
—கதிர்
சுபானு வருஷம் எப்படியிருக்கு?
யார் சுபானு?
சித்ரபானுவோட சிஸ்டர்
ஏய், யாராவது நடிகை பெயரா?
ஆமா, போன வருஷம் அக்கா வந்து ஆக்ஷன் படமா நடிச்சிட்டுப் போய்ட்டாங்க. இந்த வருஷம் தங்கச்சி.... என்னாகப் போகுதோ?
ஓ! சித்ரபானு... சுபானுன்றது தமிழ் வருஷத்தோட பெயரா?
நாடு போற போக்க பாத்தா... பிளேக் வருஷம், ஆந்தராக்ஸ் வருஷம், சார்ஸ் வருஷம்னுதான் பேர் வைக்கணும்.
என்னடா பண்றது? நடக்கறதெல்லாம் நல்லதுக்கேன்னு எடுத்துக்க வேண்டியது தான்.
தைரியமிருந்தா இத பாக்தாத்துல போய்ச் சொல்லேன்! முழுசா திரும்பி வரியா பார்க்கலாம்!


கல்கி
27.4.2003
இதழுடன்
இலவச இணைப்பு
டூர் போகலாம் வாங்க!



அவசரம் அவசரமா எழுந்து,
குளிச்சு, அரைகுறையா சாப்பிட்டு,
பஸ்ஸைப் பிடிச்சு ஆபீஸ் போய்,
குவிஞ்சு கிடக்கும் வேலையில
மண்டையை நுழைச்சு, அரக்கப்
பரக்க திரும்பவும் ஓடி, பஸ்ஸைப்
பிடிச்சு... போதும்பா டென்ஷன்
வாழ்க்கைன்னு தோணுதில்ல... ஒரு
சேஞ்சுக்குச் சின்னதா டூர் அடிச்சா
மனசுக்கும் உடலுக்கும் ஒரு
புத்துணர்ச்சி கிடைக்குமில்லையா!
அதான் இந்த சப்ளிமென்ட்.
கிளம்பலாமா?

சென்னை:

தருமமிகு சென்னைப் பட்டினம். செயிண்ட் ஜார்ஜ் கோட்டையிலிருந்து துவங்கி சாந்தோம் சர்ச், சமீபத்திய வள்ளுவர் கோட்டம் வரை பார்க்க வேண்டிய இடங்கள் ஏராளம். குட்டீஸ்கள் கொண்டாட்டம் போட எம்.ஜி.எம், கிஷ்கிந்தா, ப்ளெஸண்ட் டேஸ் என்று நிறைய பொழுது போக்கு 'தீம்' பார்க்குகள். மெரினாவை மறந்து விடுவோமா என்ன?



காஞ்சிபுரம்:

அந்தக் காலத்திலேயே இந்தியாவின்

சிறந்த ஏழு நகரங்களில் ஒன்றாக விளங்கிய காஞ்சிபுரத்தில் பல்லவ சாம்ராஜ்யத்தவர் சுவடுகள் ஏராளம்! ஒரு காலத்தில் சமண மதம் கோலோச்சியிருந்த இடம். நல்ல வழிகாட்டி கிடைத்தால் இந்த நகரில் புதைந்துள்ள அரிய விஷயங்களைத் தெரிந்து கொள்ள முடியும். சென்னையிலிருந்து சென்று வர, ஒரு குடும்பத்துக்கு (4 பேர்) உத்தேச பயணச் செலவு ரூ. 250 ரூபாய். (குறிப்பிடப்பட்டுள்ள பயணச் செலவுகள் அனைத்தும் சென்னையிலிருந்து சென்று வருவதற்கான உத்தேச மதிப்புதான்.)

வேடந்தாங்கல்:

வாடகையில்லாமல், வருடத்திற்கு நான்கைந்து மாதம், கடல் கடந்து, கண்டம் கடந்து வரும் பறவைகள், தங்கி விட்டுப் போகும் மரங்கள் கொண்ட ஏரி அமைந்துள்ள இடம். தாம்பரம், செங்கல்பட்டிலிருந்து பஸ் வசதி உண்டு. ஏரிக்கரையில், அமர்ந்து கொண்டால் பறவைகளின் மொழி நமக்குப் பரிச்சயமாகிவிடும். (400 ரூபாய்)

மகாபலிபுரம்:

தடுக்கி விழுந்தால் சென்னைவாசிகளை மகாபலிபுரத்தில் பார்க்கலாம். கல்லெல்லாம் சிலை செய்த மாமல்லனான நரசிம்மவர்மனுக்கு அனந்த கோடி நமஸ்காரங்களைச் செய்து வியந்து நிற்கும் போது, ஆயனச் சிற்பியின் உளிச் சத்தம் நம் காதுகளில் சங்கீதமாக ஒலிக்கவும் கூடும். (250 ரூபாய்)

சதுரங்கப்பட்டினம்:

மகாபலிபுரத்துக்குச் சென்று விட்டீர்

களா? அப்படியே கடற்கரையோரமாக ஒரு ஐந்து கி.மீ.க்குச் செல்லுங்கள். அங்கே நமக்காக சம்புவராய மன்னர்கள் கட்டிய கோட்டை இருக்கிறது. டச்சுக்காரர்களுக்கும் உபயோகமாக இருந்த கோட்டை இது. (300 ரூபாய்)

புலிகாட் அல்லது பழவேற்காடு:

சென்னைக்கு வடக்கே இருக்கும் சுற்றுலாத்தலம் இது. இங்கிருந்த பழைய டச்சுக்கோட்டை சிதிலமடைந்து மண்ணோடு மண் ஆகி விட்டாலும், மனத்துக்கு அமைதியைக் கொடுக்கும் கடற்கரைப் பகுதி இது. பக்கிங்காம் வாய்க்காலை உள்ளடக்கிய கடற்கழி பகுதியை நாட்டுப் படகுகளில் கடந்து கடற்கரைக்குச் செல்ல வேண்டும். தூரதேசத்துப்



"நம்பிக்கையில்லாம எட்டு தடவை பூட்டை இழுத்துப் பார்த்தா எப்படி?"

பறவைகளைப் பார்க்கவும் வாய்ப்புண்டு. (300 ரூபாய்)

செஞ்சிக் கோட்டை:

திண்டிவனத்துக்கும் திருவண்ணா மலைக்கும் இடையில் அமைந்துள்ள சரித்திரப் புகழ் பெற்ற ராஜா தேசிங்கு காலத்திய கோட்டை. கொஞ்சம் 'தம்' பிடித்து மலையில் ஏறினால் வழியில் பாயசமாய் இனிக்கும் சுனைத் தண்ணீர் குடிக்க வாய்ப்புக் கிடைக்கும். குரங்கு களை விரட்ட சிறு குச்சியுடன் போகவும். பேருந்து தடத்தில் உள்ளது. (350 ரூபாய்)

திருவண்ணாமலை:

சுற்றுலா என்பது வெறும் பொழுது போக்கு மட்டும்தானா? ஆன்மிகத் தேடலும் சுற்றுலாவில் அடக்கம் தானே! அந்த வகையில் தமிழகத்தில் பார்க்க வேண்டிய இடங்களில் முக்கியமானது திருவண்ணாமலை. ரமணாஸ்ரமம், சேஷாத்திரி ஸ்வாமிகள் ஆஸ்ரமம், விசிறி சாமியார் ஆஸ்ரமம் என்று மனிதனை ஆன்மிக ரீதியாக உயர வழிகாட்டும் ஆஸ் ரமங்கள். மகான்கள் வாழ்ந்து மறைந்த புண்ணியபூமி. (600 ரூபாய்)


வடலூர்:

"அருட் பெருஞ்சோதி, தனிப்பெரும் கருணை" என்று பக்தர்களால் போற்றப் பட்டு ஜீவ காருண்யத்தைப் போதித்து, 'திருவருட்பா'வை அருளிய 'வள்ளலார்' ராமலிங்க அடிகளார் வாழ்ந்ததால் புண்ணியம் பெற்ற ஸ்தலம். அவர் தோற்று வித்த சத்யஞான சபையும், அணையா அடுப்பும் இங்கு சிறப்பானவை. (600 ரூபாய்)

திருக்கோவிலூர்:

தென்பெண்ணை ஆற்றங்கரையில்

அமைந்துள்ள ஊர். சத்குரு ஞானானந்தா ஸ்வாமிகள், மத்வர்களின் ஆச்சார்யர்களில் ஒருவரான நகோத்தமர் ஆகியோரது சமாதிகள் இங்கிருக்கின்றன. (500 ரூபாய்)



பிச்சாவரம்:

சிதம்பரத்திலிருந்து பதினாறு கி.மீ. தொலைவில் உள்ளது இந்த கடற்கரைப் பகுதி. கடல் உள்வாங்கி நூற்றுக்கணக்கான கால்வாய்களாகப் பிரிந்து நிலப்பகுதிக்குள் செல்கின்றன. இந்தக் கால்வாய் கரைகளில் வளர்ந்துள்ள சுரபுன்னை மரங்கள் இந்தப் பகுதிக்குத் தனி அழகைக் கொடுக்கின்றன. படகில் ஏறிக் கொண்டு பசுமை சூழ் கால்வாயில் பயணம் போவது சுகானுபவம். (800 ரூபாய்)

ஆலம்பூர் கோட்டை:

இப்படியொரு கோட்டை இருப்பது, பலருக்குத் தெரியாது. கிழக்குக் கடற்கரைச் சாலையில், மரக்காணத்துக்குப் பின்னர் காடம்பாக்கம் கிளைச் சாலையில் பிரிந்து ஐந்து கி.மீ. சென்றால் முஸ்லிம் மன்னர்கள் கட்டிய ஆலம்பூர் கோட்டை வரும். ஒரு நாள் சுற்றுலாவுக்கு ஏற்ற இடம். கடற் காற்று தாலாட்ட மனத்தை இலேசாக்கும் ரம்மியமான சூழல். (500 ரூபாய்)



தரங்கம்பாடி:

அலைகள் தாலாட்டும் கடற்கரையில் டேனிஷ்காரர்கள் கட்டிய கோட்டை இருக்கிறது. பேருந்து தடத்தில் இது உள்ளது. முதன் முதலாக பைபிள் வேத புத்தகம் தமிழில் அச்சடிக்கப்பட்ட இடம் இதுதான். (600 ரூபாய்)

வேலூர்:

தமிழ்நாட்டில் சுதந்திரப் போராட்டத்துக்கு வித்திட்ட இடம். பிரமிக்க வைக்கும் கோட்டை. அதனுள் பக்திப் பரவசத்தைத் தூண்டும் ஜலகண்டேஸ்வரர் ஆலயம். வேலூர் சென்றால் ''திப்பு சுல்தான் மனைவி சமாதி எங்கே?'' என்று கேட்டுப் பாருங்கள். (400 ரூபாய்)



''ஏங்க இப்படிப் படகில் போகும் போது உங்களுக்கு எந்த சினிமாக் காட்சி தோணுது?

''தேன் நிலவு படத்தில் படகிலே அழைச்சிட்டுப் போய் நம்பியார் தன் மனைவியை தீர்த்துக் கட்டுவார் பாரு, ஆஹா...''

பூம்புகார்:

சீர்காழிக்கு அருகில் உள்ள கடற்கரையோர சிற்றூர். சோழர்கள் காலத்தில் துறைமுகப் பட்டினமாக விளங்கிய வரலாற்றுச் சிறப்பு மிக்க இடம். இந்த இடத்தின் பெருமையை சிலப்பதிகாரம் மற்றும் மணிமேகலையைப் படித்தால் தெரிந்து கொள்ளலாம். சரித்திரத்தின் சுவடுகளை இன்னமும் நாம் இங்கு காண முடியும். பூம்புகாரின் பண்டைய சிறப்பை எடுத்துக் காட்டும் விதமாக இங்கு அருங்காட்சியகம் உருவாக்கப்பட்டிருக்கிறது. (1200 ரூபாய்)

கங்கை கொண்ட சோழபுரம்:

சிதம்பரத்துக்கும் கும்பகோணத்துக்கும் நடுவில் உள்ள கலைக்கோயில். அப்பா ராஜராஜன், பிரகதீஸ்வரர் கோயிலைக் கட்டி அசத்தியது போல தாமும் ஒரு சிற்பக் கோயிலை கட்ட வேண்டும் என்ற ஆர்வத்தில் மகன் ராஜேந்திரன் கட்டியது. இதன் பழம்பெருமையை போற்றிப் பாதுகாக்கும் தொல்பொருள் இலாகாவுக்குப் போடுவோம் ஜே! (800 ரூபாய்)


திருவாரூர்:

சங்கீத மும்மூர்த்திகள் முத்துசாமி தீக்ஷிதர், சியாமா சாஸ்திரி, தியாகராஜ ஸ்வாமிகள் ஆகியோர் அவதரித்த ஸ்தலம். அவர்கள் வாழ்ந்த வீடுகள், இங்கு நினைவாலயங்களாக போற்றிப் பாதுகாக்கப் படுகின்றன. இசையில் ஆர்வமுள்ளவர்கள் தவிர அனைவரும் பார்த்து வரலாற்றைத் தெரிந்து கொள்ள வேண்டிய இடம். (1000 ரூபாய்)

தாராசுரம்:

கும்பகோணம் அருகிலுள்ள தாராசுரம்

ஆலயங்கள் நம்மை பிரமிக்க வைப்பவை. அங்குலம், அங்குலமாக ரசிக்கக் கூடிய வகையில் கட்டப்பட்ட கலைக்கோயில்கள். (1000 ரூபாய்)




தஞ்சை:

ஒரு காலத்தில் நுங்கும் நுரையுமாக பொங்கி வந்த காவிரி ஆற்றின் டெல்டா பகுதியில் அமைந்த சோழ மன்னர்களின் தலைநகரம். சிற்பக் கலைக்குக் கட்டியம் கூறும் பிரகதீஸ்வரர் ஆலயம் (சென்டிமெண்ட் காரணமாக அரசியல்வாதிகள் – குறிப்பாக பதவியில் இருக்கும் அரசியல்வாதிகள் – செல்லத் தயங்கும் இடம்.) (1000 ரூபாய்)

கல்லணை:

ஆயிரத்து ஐந்நூறு ஆண்டுகளுக்கு



முன்னர் சோழ மன்னன் கரிகாலன் கட்டியது. அந்தக் கால பொறியியல் கலைக்கு மிகச் சிறந்த எடுத்துக் காட்டு. காவிரிக்கு குறுக்கே ஆயிரம் அடி நீளம், அறுபது அடி அகலம், இருபதடி உயரத்துடன் கம்பீரமாக இருக்கிறது. திருச்சிக்கு அருகில் இருக்கும் கல்லணை ஒரு பிக்னிக் ஸ்பாட், அழகான பூங்கா, அங்கு குழந்தைகள் விளையாட பல ஏற்பாடுகள், என்று ஒரு நாள் சுற்றுலாவிற்கு ஏற்ற இடம். (1200 ரூபாய்)

மதுரை:

வண்டியூர் மாரியம்மன் தெப்பக்குளம்,

திருமலை நாயக்கர் கோயில், மங்கம்மா சத்திரம், மீனாட்சி அம்மன் கோயில் என்று ஒரு நாள் – ஏன் இரண்டு நாட்கள் கூட தங்கியிருந்து, அனுபவித்து, பார்க்க வேண்டிய இடங்கள். இரவு இரண்டு மணிக்கும் கிடைக்கும் ஆவி பறக்கும் மல்லிகைப்பூ இட்லியும், ஜில்ஜில் ஜிகிர் தண்டாவும் அந்தப் பகுதிக்கே உரியவை. (1600 ரூபாய்)

பாபநாசம் (நெல்லை):


தாமிரபரணி, மனிதர்களை எட்டிப் பார்க்கும் இந்தப் பகுதியில் குளிப்பது சுகம் சுகம்.. ஆர்வ மிகுதியில் அங்குமிங்கும் அலைந்தால் பாறைப் பாசியில் வழுக்கி கை, கால் உடையலாம் ஜாக்கிரதை! இதற்கு அருகிலேயே அகத்தியர் அருவியும் இருக்கிறது. புகழ்பெற்ற இந்த இடத்தில் குளிப்பது உடலுக்கும் மனத்துக்கும் நல்லதாம். (1800 ரூபாய்)

காரையாறு:

பாபநாசம் வந்து விட்டீர்களா? அதுக்கும் மேலே மலைப்பகுதியிலிருக்கிறது காரையாறு. இங்குதான் தாமிரபரணியின் தாய்வீடு மாதிரி பெரிய அணை இருக்கிறது. அணையிலிருந்து படகில் சென்றால் வரவேற்கும் ஜில்லென்ற பாணதீர்த்த அருவி. உடலும் உள்ளமும் நனைய இங்கு குளிப்பது மகிழ்ச்சியின் உச்சம். (1800 ரூபாய்)

குற்றாலம்:

ஐம்பது, அறுபதடி உயரத்திலிருந்து 'சோ'வெனக் கொட்டும் அருவியில் குளிப்பதில் உள்ள ஆனந்தம் அலுக்கவே அலுக்காது. மெயின் அருவி மற்றும் குட்டி



போட்டிருக்கும் மற்ற அருவிகளிலும் சோம்பல் படாமல் குளித்து அனுபவிக்க வேண்டும் *(1600 ரூபாய்)*

கும்பக்கரை:

இங்கு தலைமேல் சொடேரென்று கொட்டும் அருவி இல்லையென்றாலும் வருடிக் கொடுக்கும் அளவிற்கு வீச்சுள்ள 'நீர்த்தாக்குதல்' உண்டு. பாறை மீது சரிந்து விழும் அருவியில் படுத்துக் கொண்டே குளித்து, சுற்றியிருக்கும் பசுமை சூழ் மலைகளை ரசிப்பது கொள்ளை ஆனந்தத்தைக் கொடுக்கும். மதுரையிலிருந்து பெரிய குளம் வழியாக பேருந்தில் போக வேண்டும். *(ரூ. 1600)*

திற்பரப்பு:

நாகர்கோயிலிருந்து பன்னிரண்டு கி.மீ. தூரத்தில் உள்ளது இந்த அருவி. காலையில் கட்டு சாதத்தோடு அங்கு சென்றடைய வேண்டும். வாண்டுகள் கொட்டம் போட ஏற்ற இடம். (ரூ. 2000)

முக்கொம்பு:

திருச்சிக்கருகில் உள்ளது. காவிரியிலிருந்து கொள்ளிடம் பிரியும் இடம். வெயில் சுட்டெரிக்கும் முன்னரே குட்டீஸ்களுடன் சென்று விட்டால் பொழுது சாயும் வரை நன்றாகவே நேரம் போகும். ரம்மியமான பூங்கா. சுகமான காற்று. ஆனால் புதைமணல் அபாயம் உண்டு. (ரூ.1000)

முண்டந்துறை:

பாபநாசம் பகுதியில் உள்ள புலிகள் சரணாலயம். இங்குள்ள சிங்கவால் குரங்குகளுடன் சிநேகம் கொள்ள உங்கள் வீட்டு வாண்டுகள் துடிக்கக் கூடும். மறந்து விட்டோமே! இது புலிகளின் பூமி. ஆதலால் காட்டுக்குள்ளே போகும்போது சூாட்டிலாகா அதிகாரிகளிடம் அனுமதி பெற வேண்டும். இதையொட்டி களக்காடு வனவிலங்குச் சரணாலயம் உள்ளது. இயற்கையோடு ஒட்டி உறவாட உகந்த இடம். (ரூ.2000)

கோடிக்கரை:

வேதாரண்யம் அருகிலுள்ள கடற்கரைப் பகுதி. இங்குள்ள பறவைகள் சரணாலயம் மிகவும் புகழ்பெற்றது. சைபீரிய காரை நாரைகள் ஆயிரக்

கணக்கில் இங்கு வருடத்திற் கொருமுறை (நவம்பர் - ஜனவரி) வந்து செல்லும். அந்தச் சமயத்தில் இந்தப் பகுதிக்கு விஸிட் செய்ய வேண்டும். (ரூ.1400)

நாகூர்:

ஜாதி மத வித்தியாசமில்லாமல் அருட்பார்வை காட்டி மறைந்த முஸ்லிம் துறவி ஹஜரத் சயித் ஷாகுல் ஹமிது குவாதிர் வாலி வாழ்ந்து மறைந்த புண்ணிய பூமி. இந்துக்கள் அவரை நாகூர் ஆண்டவர் என்று அழைப்பார்கள். இங்குள்ள தர்காவில் உள்ள கோபுரங்களைக் கட்டியவர் தஞ்சாவூரை ஆண்ட ராஜா பிரதாப்சிங். (ரூ.1000)


தேங்காய்ப் பட்டினம்:

நாகர்கோயிலில் இருந்து முப்பத்



"உனக்குப் பெரிய மனசு. மாமியாரையும் அழைச்சிக்கிட்டுச் சுற்றுலா போறியே. எங்க போறே?"
"காசிக்கு. அங்கே போனால் ஏதாவது ஒண்ணை விட்டுட்டு வரணும்பாங்களே."

ஐந்து கி.மீ. தொலைவில் இருக்கும் தேங்காய்ப் பட்டினம் கடற்கரை ஒரு நாள் சுற்றுலாவுக்கு ஏற்ற இடம். கடற்கரையை ஒட்டி சிப்பாய்களாக அணிவகுத்து நிற்கும் தென்னை மரங்கள் அழகுக்கு அழகூட்டு கின்றன. அந்தக் காலத்தில் கடல் வர்த் தகம் நடந்த சிறப்பான இடம் இது. இங்கு வந்து வாணிபம் புரிந்த அராபிய வணிகர்கள் ஆயிரத்து இருநூறு ஆண்டுகளுக்கு முன் னரே மசூதி ஒன்றை இங்கு கட்டினார்கள். கடல் உள் வாங்கிய



பகுதியில் படகுச் சவாரி, கடற்குளியல் என்று நன்றாகவே பொழுது போகும். (ரூ.1800)

வட்டக்கோட்டை:

குமரிமுனையிலிருந்து ஆறு கி.மீ. தொலைவிலிருக்கும் கடற்கரையோரக் கோட்டை. பல திரைப் படங்களில் இடம் பெற்ற சரித்திரப் புகழ்பெற்ற இடம். திருவிதாங்கூர் மன்னர்களால் கட்டப்பட்டது. கடல் மார்க்கமாக இந்தப் பகுதியைப் பிடிக்க வந்த டச்சுக்காரர்கள் பயந்து ஓடினார்கள். ஏன் தெரியுமா? பனைமரங்களை வெட்டி கோட்டைக் கொத்தளத்தில் பீரங்கிகளைப் போல அடுக்கி விட்டார் மன்னர். தூரத்தில் கடலிலிருந்து பார்த்த டச்சுத் தளபதி அவற்றைப் பீரங்கிகள் என்று பயந்து, விட்டான் ஜூட். (ரூ.2400)

கன்னியாகுமரி:

ஆர்ப்பரிக்கும் கடல், நூற்றி முப்பத்து மூன்று அடி உயரத்தில் ஆஜானு பாகுவாக நிற்கிறார் திருவள்ளுவர். சூரிய உதயம், அஸ்தமனம் ஆகியவற்றின் வர்ண ஜாலங்களை ரசித்துக் கொண்டே இருக்கலாம். (காதைக் கொண்டு வாருங்கள். பூகோளப்படி முக்கடலும் சரியாக சங்கமிப்பது குமரியிலிருந்து இருபத்தைந்து கி.மீ.தொலைவில் உள்ள தேங்காய்ப் பட்டனம் கடற்பகுதியில் தானாம். (ரூ.2400)

சித்தன்னவாசல்:

மலையுச்சி குகைகளில் அசத்தும் சித்திரங்கள். உள்ளூர்க்காரர்கள் அழித்தது போக மிச்சம் மீதியுமாக இருக்கும் ஏழாம் நூற்றாண்டுக் கலைப் படைப்பு. புதுக்கோட்டையிலிருந்து சாலை மார்க்கத்தில் உள்ளது. (ரூ.1200)



ரஞ்சனக்குடி:

பிரெஞ்சுக்காரர்களுடன் சேர்ந்து கொண்ட சந்தா சாகேப் படைகளுடன் ஒரு புறம், மறுபுறம் ஆங்கிலேயப் படைகள், இப்படி எதிரும் புதிருமாக பல நாட்கள் நின்ற பிறகு பதினோராம்



"சரி, நீ பசங்களோட எல்லா இடங்களையும் சுத்திப் பார்த்துட்டு வா. நான் கொண்டு வந்த ஆபீஸ் வேலையைப் பார்க்கறேன்."

நூற்றாண்டின் இறுதியில் நடந்தது போர். நடந்த இடம் ரஞ்சனக்குடி. திருச்சி நெடுஞ்சாலையில் பெரம்பலூருக்கு முன்னால் உள்ளது, மலையுச்சியில் உள்ள இந்தக்கோட்டை. (ரூ.600)

திருமயம்:

புதுக்கோட்டை அருகிலுள்ள திருமயத்தில் பாண்டியன் காலத்திய மண் கோட்டை ஒன்று உள்ளது. இங்கு செல்லும்போது அப்படியே புதுகோட்டை தொண்டைமான் மன்னர்களின் அரண்மனையையும் ரசித்து வரலாம். (ரூ.800)

மனோரா:

பட்டுக்கோட்டைக்கு அருகில் உள்ள சரபோகி பட்டினம் என்ற இடத்தில் உள்ளது இது. நெப்போலியனை ஆங்கி

லேயர் போரில் வென்றதால் பரவசப்பட்டுப் போன மன்னர் சரபோஜி, ஆங்கிலேயர்களுக்குப் பாராட்டுத் தெரிவித்து சலாமடித்து, கட்டிய ஏழுநிலை மாடம். (ரூ.1000)

குடுமியான்மலை:


புதுக்கோட்டையிலிருந்து இருபது கி.மீ. தொலைவிலுள்ள வரலாற்றுச் சிறப்புமிக்க இடம். இங்குள்ள சிகரி கிரீஸ்வரர் ஆலயத்தில் உள்ள ஆயிரங்கால் மண்டபத்துள் பல ஆச்சர்யமான தகவல்கள் இருக்கின்றன. இசையில் மிகவும் நாட்டமுடையவனாக இருந்த பல்லவ மன்னன் மகேந்திரவர்மன், ஏழு ஸ்வரங்களைப் பற்றிய தமது எண்ணங்களை, கருத்துக்களை இங்கே தூண்களில் பதித்திருக்கிறான். மகேந்திரவர்மன் உருவாக்கிய குகைக் கோயில் ஒன்றும் இங்குள்ள குன்றில் உள்ளது. (ரூ.1200)

ஏலகிரி:

ஏழைகளின் ஊட்டி ஏலகிரி. வேலூர் மாவட்டம் வாணியம் பாடியிலிருந்து இந்த மலைக்குப் பேருந்து உண்டு. ஒரு நாள் சுற்றுலாவுக்கு ஏற்ற இடம். இன்னமும் நகர அழுத்தம் தலைகாட்டாத ஒரு சுகந்தமான மலைவாசஸ்தலம். (ரூ.800)

கொடைக்கானல்:

பசுமையான மலைகளும், பள்ளத்தாக்குகளும், வெள்ளிக்கம்பிகளாய் விழும் அருவிகளும், நாட்கணக்கில் பார்த்து அனுபவிக்கக் கூடியவை. பகற்பொழுதில் அவ்வப்போது ஊசியாய் விழும் மழைத் துளிகளில் சரிவுகளில் ஏறி இறங்குவதும்,



ஏரியின் ஓரங்களில் குளுமை பொங்க நடைபோடு வதும் வாரே... வாஹ்! (ரூ.2000)

ஏற்காடு:

சேர்வராயன் மலைகளின் அரசி. சேலம் மக்கள் கோடைக் கொடுமையிலிருந்து தப்பிக்க இயற்கையாய் வழங்கப் பட்ட குளுகுளு இடம். ஆனால் மரங்கள் தொடர்ந்து வெட்டப் படுவதன் காரணமாக சமீபகாலங்களில் இந்த மலைப் பகுதியும் தட்ப வெட்பத்தால் சம வெளிப் பகுதியை போல ஆகிவிடுவதுதான் வருத்தமான ஒன்று. ஏற்காடு ஏரியில் படகுப் பயணம் சுகமான அனுபவம். (ரூ.1500)

முதுமலை:

யானை அம்பாரியில் ஏறிக் கொண்டு காடுகளை ரசிக்க வேண்டுமா? முதுமலை காடுகளுக்குச் சென்று விடுங்கள்.

அதிர்ஷ்டமிருந்தால் பல மிருகங்களைப் பார்க்கும் வாய்ப்பு கிடைக்கும். காட்டு பங்களாவில் தங்குவது ஒரு திகிலான அனுபவம்தான். (1800 ரூபாய்)

ஊட்டி:


மலைகளின் அரசி ஊட்டி. சமவெளிப் பகுதியில் கடும் கோடையாக இருந்தாலும் கூட இங்கு அதிகாலையில் பற்கள் தந்தியடிக்கும் அளவிற்குக் குளிர் உண்டு. வெறும் ஊட்டி நகரத்தில் மட்டும் உட்கார்ந்து கொண்டால் பயனில்லை. சுற்றியுள்ள தொட்டபெட்டா, அவயன்ச், கோத்தகிரி ஆகிய இடங்களுக்கும் சென்றால் தான் இயற்கை அள்ளித் தெளித்திருக்கும் ரம்மியங்களைக் காண முடியும். அவசர அடியாக இங்கு சென்று வரவேண்டாம்.. (1800 ரூபாய்)

டாப் ஸ்லிப்:

பொள்ளாச்சிக்கருகில் உள்ள ஆனை மலையில் அமைந்துள்ள ரம்மியமான மலைவாசஸ்தலம். குளித்து மகிழ குளு, குளு நீர்வீழ்ச்சியும் உண்டு. அதிகாரிகளின் அனுமதியோடு, யானைமீது ஏறிக் கொண்டு காட்டை வலம் வருவது திகிலுடன் கூடிய ஜில் அனுபவம். (1800 ரூபாய்)

பத்மனாபபுரம்:

திருவாங்கூர் மன்னர்கள் இங்கிருந்து தான் ஆட்சி செய்தார்கள். ஆறு ஏக்கர் பரப்பளவில் கோட்டை உள்ளது. மன்னர்கள் உபயோகித்த ஆயுதங்கள், அந்தக்கால ஆபரணங்கள் ஆகியவற்றைக் கொண்ட அருங்காட்சியகம் இங்கே உள்ளது. நானூறு வருடங்களுக்கு முந்தைய கடிகாரமும், மன்னர் உபயோகித்த மூலிகைக்



கட்டிலும் பார்க்க வேண்டியவை. *(1800 ரூபாய்)*

செட்டிநாடு:

பொதுவாக செட்டிநாடு என்று குறிப்

பிட்டிருக்கிறோம். காரைக்குடி சுற்று வட்டாரத்தில் நாட்டுக் கோட்டை செட்டியார்கள் குடியிருக்கும் எண்பத்திரண்டு கிராமங்கள் தான் செட்டிநாடு என அழைக்கப்படுகின்றன. ஆயிரம் ஜன்னல்கள் கொண்டு வீடுகள், மாளிகைகள் உட்பட இங்கிருக்கும் பிரம் மாண்டமான கட்டடங்கள் கண்களுக்கு விருந்தளிப்பவை. குறிப்பாக நாட்டரசன் கோட்டை கானாடு காத்தான் ஆகிய பகுதிகளிலுள்ள மாட, மாளிகைகள் நம்மை வியக்க வைக் கும். (1000 ரூபாய்)

ஒகேனக்கல்:

புகுந்த வீடான தமிழகத்துக்கு உற் சாகத்துடன் ஓடோடி வரும் காவிரி. இங்கு மலை இடுக்குகளில் ஆரவாரத்துடன் கொட்டும் அழகே தனி. நீரோட்டத்தின் போக்கில் செல்லும் பரிசலில் உட்கார்ந்து



"பலே! சரி, அப்புறம் கோடி வீட்டு பத்மினியின் காதல் சமாசாரம் என்ன ஆச்சு?"
"சுற்றுலாவுக்குக் கிளம்பி மூணு நாளாச்சே. அதுதான் முனியம்மாவுக்கு போன் பண்ணி தெரு நிலவரங்களைத் தெரிஞ்சுக்கறயா?"

கொண்டு அசைவ உணவுப் பிரியர்கள் சுவைத்துச் சாப்பிட பல ஐட்டங்கள் சுடச்சுடக் கிடைக்கும். தர்மபுரி மாவட்டத்தில் உள்ளது இது. (1500 ரூபாய்)

பக்கத்து மாநிலங்களுக்குள் கொஞ்சம் நுழைந்து பார்க்கலாமா?

மைசூர்:

அரண்மனைகள் நிறைந்த அழகான நகரம். கர்நாடக மக்களின் வாழ்க்கை முறை, இலட்சியம் ஆகியவைகளை முழுமையாகத் தெரிந்து கொள்ள சரியான இடம். (ரூ.2400)

பெங்களூர்:

மரங்கள் சூழ்ந்த சாலைகள். இதமான தட்பவெப்பநிலை. அசத்தும் லால்பாக், கப்பன் பாக், கம்பீரமான விதான் செளதா, பார்க்க இன்னும் பல இடங்கள். (ரூ.1200)


குத்ரே முக்:

இன்னமும் மக்களுக்குச் சரியாக அறிமுகமாகாத இயற்கையின் பொக்கிஷம் இந்த மலைப் பகுதி. பசுமை சூழ் மலைகள், கீழே அலைகளின் தாலாட்டில் அரபிக் கடல். நகர நரகத்தில் இருந்து விடுபட்டு ஒருவாரம் மனித சகவாசமே வேண்டாம் என்று முடிவெடுப்போருக்குக் காத்திருக்கும் இடம். (செல்போன் சிக்னலும் இங்கு கிடைக்காதாம்) (ரூ.2500)

நந்திமலை:

வார இறுதி விடுமுறை நாட்களைக் கழிக்க ஏற்ற மலைவாசஸ்தலம்.

பெங்களூரிலிருந்து பஸ் வசதி உண்டு. இங்குள்ள அம்ருத சரோவர் ஏரி கொள்ளை அழகு. திப்புசுல்தான் மிகவும் விரும்பி ஓய்வு எடுத்த இடம்தான் நந்தி மலை. (ரூ.1800)



பந்திபூர் சரணாலயம்:

தமிழ் நாட்டின் முதுமலைக் காட்டை யொட்டி கர்நாடகப் பகுதியில் அமைந்துள்ள வனப்பகுதி. யானைகள், புலிகள், ஆகியவற்றை கண்டு ரசிக்க(?) காட்டிலாகா அதிகாரிகள் தயவு தேவை. (ரூ.1600)

கேரள சரணாலயங்கள்:

"கடவுள் தனக்காகவே சிருஷ்டி செய்து



கொண்ட இடம்தான் கேரளா" என்று கேரளச் சுற்றுலாத் துறை விளம்பரம் செய்கிறது. இது முற்றிலும் உண்மை யென்று கேரளாவைச் சுற்றி வந்த வர்கள் சொல்வார்கள். பெரியார் வன விலங்கு சரணாலயம் (தேக்கடி) வயநாடு சரணாலயம், பரம்பிக்குளம் சரணாலயம், இடுக்கி வனவிலங்கு சரணாலயம் ஆகியவை கண்களுக்கும் மனத்துக்கும் விருந்தளிக்கும். (ரூ.2500)

கோவளம் கடற்கரை:

நமது நாட்டுக்கு வரும் பெரும் பாலான வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் கோவாவுக்கு அடுத்தபடி யாக விரும்பி விஸிட் செய்யும் கடற் கரை, திருவனந்தபுரத்துக்கு அருகி லுள்ள கோவளம் கடற்கரை. ஆபத்தில் லாத கடலில் ஒரு குளியல் போட்டு,

கடற்கரை மணல் ஒட்ட, சூரியக் குளியல் இங்கு, பிரசித்தம். இங்கே போகும் போது திருவனந்த புரம், கோயில்களை மறக்க வேண்டாம்.

குமரகம்:

கேரளாவில் கடல் உள்வாங்கி பல கிளைகளாக நிலப்பகுதிகளுக்குள் பிரிந்து சென்று அந்த மாநிலத்துக்கு மேலும் அழகூட்டியுள்ளது. அப்படிப்பட்ட இடங்களில் குமரகமும் ஒன்று. தண்ணீரில் தாலாட்டுகிற படகு வீட்டின் மாடியில் அமர்ந்து சலசலக்கும் தென்னை மரங்களையும், சங்கீதம் பாடும் பறவைகளையும் ரசித்துக் கொண்டே இருக்கலாம். சமீபத்தில் பிரதமர் வாஜ்பாய் இங்கு போய் தங்க, மவுசு கூடிவிட்டது குமரகத்துக்கு.


ஹைதராபாத்:

ஆந்திராவில் பல சுற்றுலாத் தலங்கள்



"எனக்கு அப்பர் பர்த்னு தெரிஞ்சதும் நீங்க எல்லாருமே லோயர் பர்த்தை எனக்கு விட்டுத் தர்றீங்களே. தாங்ஸ். ஆனா காரணம்தான் தெரியல்ல."

இருந்தாலும் பார்க்க வேண்டிய இடங்களின் தலை நகர் ஹைதராபாத்தும் ஒன்று. அரை நாள் ஒதுக்கி விட்டு கோல்கொண்டா கோட்டை உச்சிவரை சென்று வர வேண்டும். நுழைவாயிலில் உள்ள மண்டபத்தில் கைதட்டும் போது, அது ஜெராக்ஸாக எதிராலிக்கிறது. ஆச்சர்யப்பட வைக்கும் கட்டுமானம். சாலர்சங் மியூஸியம், உசேன்சாகர் ஏரி, சார்மினார் ராமோஜிராவ் பிலிம் சிட்டி என்று சுற்றுலாப் பயணிகளுக்கு தீனி போட நிறைய இடங்கள்.




''இதுதான் மகாராஜாவின் அந்தப்புரம். அவனுடைய ஆயிரம் மனைவிகளும் இங்கேதான் இருந்தார்கள். இங்கு நின்னுக்கிட்டுதான் ராஜா தினமும் அவங்களுக்கு அட்டென்டன்ஸ் எடுப்பாரு.''

கோனே அருவி:

இது ஆந்திரா மாநிலத்தில் இருந்தாலும் சென்னையிலிருந்து மூன்று மணி நேரப் பய

ணத்தில் உள்ளது. நெல்லூர் நெடுஞ் சாலையில் தடா என்ற இடத்திலிருந்து இந்த அருவிக்குச் செல்லலாம். அக்டோபர், நவம்பர் மாதங்களில் அருவியில் அடர்த்தியாக கொட்டும் நீர். கோடையில் மெட்ரோ வாட்டர் குழாயாக கொட்டுவது தான் சோகம். மற்றபடி சூப்பர் சுற்றுச் சூழல். (ரூ.600)



பாண்டிச்சேரி:

அழகான அமைப்புக் கொண்ட இந்தப் பழைய பிரெஞ்சுக் காலனி ஒருநாள்

Registered with the Registrar of Newspaper of India under No. 1041/57 * Registered No. TN / PMG (CCR) 572 / 03 - 05* Licensed to post without prepayment under PMG's Licence No. WPP 358 * Registered as a Newspaper in Srilanka. Supplement to the Kalki issue Dated 27.4.2003

சுற்றுலாவுக்கு மிகவும் உன்னதமானது. அமைதி குடி கொண்டிருக்கும் ஆஸ்ரமம், அகில உலக நகரமான ஆரோவில், பழைய நாகரிகத்தை அடையாளம் காட்டும் அரிக்கமேடு, கடற்கரை, இன்னமும் பார்க்க ஏராளமான இடங்கள். சிதிலமடையாமல் இருக்கும் பிரெஞ்ச் பாணி கட்டடங்கள் கலை நயம் மிக்கவை. (ரூ.500)



(தகவல்கள் உதவி:
வி.எஸ். வரதராஜன்,
சுற்றுலாத்துறை
பேராசிரியர்)

ஜோக்ஸ் : **குல்லூ**

தொகுப்பு :
ஸ்ரீநிவாசன்

ஓம் சாந்தி

இனிய மாலையில் ஈஸ்வரிய அனுபவம் !



ஏப்ரல் 27, ஞாயிறு
மாலை 4.00 மணி முதல்

சீரணி அரங்கம், மெரினா, சென்னை

- லேஸர் காட்சி
- அஷ்டலக்ஷ்மி, நவ துர்க்கையின் தத்ரூப காட்சி
- மற்றும் கலை நிகழ்ச்சிகள்

"மெல்லிசை மன்னர்"
M.S. விஸ்வநாதன் அவர்களின்
தெய்வீக கீதங்கள்

67 ஆண்டு கால தவயோகினிகள் மூவர் உலக அமைதி தியானம் செய்து, நம் வாழ்க்கை சிறக்க அருளாசி வழங்குவார்கள்!!

கூட்டு தியானம் செய்வோம்; உலக அமைதி காண்போம்
அனைவரும் வருக ! வருக !!

மன அமைதி தரும் இராஜயோக தியானம்
இலவசமாய் பயில

பிரம்மா குமாரிகள்,

அண்ணாநகர், சென்னை-40 Ph : 26266765 / 26285661

Registered with the Registrar of Newspaper of India under No. 1041/57 * Registered No. TN / PMG (CCR) 572 / 03 - 05 *
Licensed to post without prepayment under PMG's Licence No. WPP 358 * Registered as a Newspaper in Srilanka

